# மல்லிகை!

"MALLIKAI" PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா

ஜூன் 1982

விலை: 2 ரூ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ESTATE SUPPLIERS

COMMISSION

AGENTS

★

VARIETIES OF

CONSUMER GOODS

OILMAN GOODS

TIN FOODS

GRAINS

*Dial*

2 6 5 8 7

*to*

THE EARLIEST SUPPLIERS FOR ALL YOUR

NEEDS

WHOLESAL & RETAIL

# E. SITTAMPALAM & SONS

223, Fifth Cross Street,
Colombo-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்'

'Mallikai' Progressive Monthly Magazine

161

பதினேழாவது ஆண்டு

ஜூன் 1982

---

## அன்பிற்கினிய நண்பர்களுக்கு.....

18-வது ஆண்டு மலர் தயாராகின்றது.

மலர் மிகச் சிறந்த படைப்பாக வெளிவர வேண்டுமென்ற பேராவலுடன் தொடர்ந்து வேலை செய்து வருகின்றோம்.

மல்லிகை மலருக்கு கதை, கட்டுரை, கவிதைகள் எழுதும் நண்பர்கள் காலந் தாழ்த்தாமல் இப்பொழுதிலிருந்தே தமது ஆக்கங்களைப் படைத்து அனுப்ப முயற்சிக்க வேண்டும்.

மல்லிகையின் வளர்ச்சியில் அபிமானமும் அக்கறையும் கொண்ட நண்பர்கள் சென்ற கால ஆண்டு மலர்களுக்கு ஒத்துழைத்தது போல இம்முறையும் ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றோம். விளம்பரம் சேகரித்துத் தந்துதவும் இனியவர்களுக்கும் சேர்த்தே இந்த வேண்டுகோளாகும்.

மல்லிகையின் வளர்ச்சி உள் நாட்டிலும் கடல் கடந்தும் நாம் எதிர்பார்த்ததை விட மிகவும் துரிதமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. சந்தாதாரர்கள் ஒன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அறிவிப்புக் கிடைத்த பின்னரும் சந்தா செலுத்துவதில் அக்கறையற்றிருந்தால் தொடர்ந்தும் உங்களுடன் தொடர்பு கொள்ளச் சாத்தியப்படாது என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

— ஆசிரியர்

---

மல்லிகை 234 B, — கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

மல்லிகையில் வரும் கதைகள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமன்னாரும் — ராமேஸ்வரமும்

இன்று இலங்கையில் இருந்து ஐரோப்பா, அவுஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற கண்டங்களுக்கு வெகு சுலபமாகவும் துரிதமாகவும் போகக் கூடிய போக்கு வரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தி மக்கள் போய் வருகின்றனர்.

விஞ்ஞான சாதன வளர்ச்சிகள் உலகத்தை நமது நாட்டுக் கருகே நெருங்கி வர வைத்து விட்டன.

ஆனால் மிக நெருக்கமாக — ஒரு சில மணி நேரக் கப்பல் பிரயாணத்தால் இணைக்கப்படுள்ள இந்தியாவுக்கு — குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கு — தலைமன்னார் மூலம் கப்பலில் போவதென்றால் மிகப் பெரிய சிரமமும் தாங்கொணாத கஷ்டமுமாக இருக்கின்றது.

கலாசார, மத, பண்பாட்டு ரீதியாக ஒன்றுபட்டிருக்கும் இரு நாட்டவர்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதால் நட்பு உணர்வு வளர்வதுடன் எதிர் காலத்தில் இரு நாடுகளுக்குமே நன்மை பயப்பதாக அது அமையும்.

தீர்வையற்ற ஆடம்பரப் பொருட்கள் விற்கும் விற்பனவு நிலையங்கள் சமீபத்தில் செயல்படத் தொடங்கியதன் பின் இந்தியப் பிரயாணிகளின் தொகை வேறெந்தக் காலங்களைவும் விட அதிகரித்துள்ளது. ஆனால் கப்பல் பிரயாணிகள் தொகை எக்கச் சக்கமாகக் கூடியிருக்கிறது.

ராமானுஜம் கப்பலும் நீண்ட நெடுங்காலமாகச் சேவையில் ஈடுபட்டுள்ளது. அதற்கும் ஓய்வு இல்லை. சில சமயங்களில் நாளுக்கு இரண்டு தடவைகள் சேவையாற்ற வேண்டியுள்ளது;

இது இப்படியே தொடர்ந்தால் ஆபத்து ஏற்படலாம்.

அதே சமயம் கொழும்பு — தூத்துக்குடி கப்பல் சேவை எனப் பேசப்பட்டது. காங்கேசன்துறை — நாகபட்டினம் எனவும் கதைக்கப்பட்டது. இவை ஒன்றுமே இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

இரண்டு இறங்கு துறைகளிலும் மக்கள் தினசரி படும் துயரம் வார்த்தைகளுக்குள் அடங்காதவை.

எனவே சாதாரண மக்களின் நன்மை கருதியாவது சம்பந்தப்பட்டவர்கள் பிரயாணிகள் சௌகரியமாகவும் சிரமமின்றியும் பிரயாணம் செய்ய ஆவன செய்து தர வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ் உண்ட நீர்

டொமினிக் ஜீவா

இந்தச் சம்பவம் நடந்தது 1979க் கடைசியிலோ அல்லது 1980ம் ஆண்டு முற்பகுதியோ ஞாபகமில்லை.

நான் அடிக்கடி கொழும்பு போய்த் திரும்பி வரும் சமயங்களில் கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால், அல்லது கடைப் பகுதிகளின் பக்கத்து நடைபாதைகளில் ஓர் உருவத்தைச் சந்திப்பது வழக்கம்.

யாருடனாவது இரண்டொருவருடன் அந்த உருவத்திற்குரிய முதியவர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கின்றேன்.

தும்பைப் பூப்போன்ற நரைத்த தலை. தோளில் முழு நீளச் சால்வை. அரைக் கைச் சட்டை. வெள்ளை வேட்டி, சந்தனப் பொட்டுடன் அந்தப் பெரியவர் காட்சி தருவார். கூர்ந்து பார்ப்போருக்கு அசல் யாழ்ப்பாணத்து முகம்.

என்னை அவர் பல தடவைகள் பார்த்திருக்கிறாரே தவிர, என்னிடம் நெருங்கி எதுவும் பேசியதில்லை. இருவரும் சும்மா பார்த்து வைப்போம்.

ஆனால் அந்த முகத்தின் விழிப் பார்வை என் உள்ளுணர்வில் எங்கோ ஒரு மூலையில் குத்திக் குத்தி ஞாபகத்தை பின் நோக்கி நகர்த்திக் கொண்டிருப்பதை நான் இடையிடையே உணர்வதுடன் 'ஆர் இந்த ஆள்.....? ஆராக இருக்கும்...? எங்கேயோ பார்த்த மாதிரியும் பார்க்காத மாதிரியும் இருக்கிறதே...' என அவரைப் பார்த்துவிட்டு வந்ததற்கப்புறம் மனதை போட்டுக் குடைந்து கொள்வேன்.

ஒரு நாள் பகல் உத்தர தேவியில் யாழ்ப்பாணம் திரும்புவதற்காகப் பிரயாணச் சீட்டை எடுத்துக் கொண்டு, பகல் சாப்பாடு கட்டுவதற்காக ஸ்டேசனுக்கு முன்னால் உள்ள ராஜேஸ்வரி ஹோட்டலை நோக்கித் திரும்பி நடக்க ரெயில்வே நிலையப் படிக்கட்டுகளைக் கடந்து வீதியில் இறங்கினேன்.

'தம்பி...... யாழ்ப்பாணத்துக்குப் போறியளோ......' என்றொரு குரல் கேட்டது.

நான் திரும்பிப் பார்ப்பதற்குள் அந்தக் குரலுக்குரிய உருவம் பக்கத்தே வந்து நின்றது.

ஏற்கனவே நான் இவர் யாராக இருக்கும் என மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தேனே, அந்தப் பெரியவர்தான் பக்கத்தே நின்றார்.

'நானும் யாழ்ப்பாணந்தான் தம்பி........' எனக் கதைக்கத் தொடங்கினார். கண்ணியமான குரல்; மென்மையான பேச்சு.

— ஆராக இருக்கும் இவர்? இவரை எங்கேயோ பாத்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேனே......!' என அரற்றியது எனது மூளை.

'தம்பி நான் யாசகம் கேட்பவனில்லை. கஷ்டப்படுறன், கண்ட நிண்டவையிட்டை நான் வாய் விடுவதில்லை. உம்மை நான் அடிக்கடி பாத்திருக்கிறன்; ஏதாவது எனக்குத் தந்துதவ முடியுமெண்டால் எனக்கு மிச்சம் உதவியாக இருக்கும்.........'

இவ்வளவு நெருக்கமாக நான் இதுவரை அவரைப் பார்த்ததில்லை. அவரது குரலையும் கேட்டதில்லை. அந்தக் குரலில் தொனித்த கண்ணியமும் நேர்மையும் எனது நெஞ்சத்தை வெகுவாகக் கவர்ந்தது.

அந்த முக நெருக்கத்தினூடே அவரது விழிகளை உற்றுப் பார்த்தேன். எனது ஞாபக அணுக்களில் ஒரு பொறி தட்டியது.

'ஓ!...... இவரா அவர்?'

ஞாபகப் பதிவு சற்றுத் துலாம்பரமாகியது.

★

எனது தகப்பனார் அசாதாரண துணிச்சல்காரர். புதுப் புதுத் துறைகளில் அஞ்சாது இறங்கிக் காரியமாற்றுவார். தமிழகத்திலிருந்து நாடகக் கம்பனியாரை அழைத்து வரும் யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களின் கூட்டாளி. பச்சைப் பெட்டியைப் பார்த்துப் போடு! — சிவத்தப் பெட்டியைத் தேடிப் போடு!' என்ற பழைய கட்சிகளற்ற தேர்தல் காலத்தில் ஒரு கன்னைக்கு நின்று தேர்தல் இயக்கத்தில் கலந்து கொண்டவர். 'நெவிஞ்சுப் பப்பா மரத்திலே; மகா தேவா கொழும்பிலே!' என்று தனி மனித வெற்றிக் கோஷமெழுப்பிய கால கட்டத்தில் இவர் நெவின்ஸ் செல்லத்துரை பக்கம் நின்று, அவரது தோல்வியைத் தனது தோல்வியாகக் கருதி மனம் மறுகியவர். யாழ்ப்பாண நகரத்திலுள்ள பிரபல சண்டியர்களின் வீரப் பிரதாபங்களையெல்லாம் தெரிந்து வைத்திருந்தது டன் சிலரை நன்கு நேரில் அறிந்தும் வைத்திருந்தவர். ஏதாவது ஒருவகையில் பொது வாழ்க்கையில் தன்னைத் தினசரி ஈடுபடுத்தி உழைத்து வந்தவர்.

தனியார் துறையினர் பஸ் ஓடிய காலத்தில் யாழ் — கீரிமலை பஸ் ஒன்றைச் சொந்தமாக விலைக்கு வாங்கி யாழ்ப்பாண வீதிகளில் ஓட்டிக் காட்டிய பஸ் உரிமையாளர். அது Z மொடல் 2002 நம்பர் சவுளெற் பஸ்.

இத்தனை ஆற்றல், துணிச்சல் இருந்தும் பிற்காலத்தில் தனது பிரமுக நண்பர்களின் சேர்க்கையால் குடிகாரராக மாறினார்! அக்காலத்தில் பெருங்குடியராகத் திகழ்ந்தார். அதன் காரணமாகத் தனி மனிதனாகத் தானே முன்னின்று சம்பாதித்த பெருஞ் சொத்துக்களையும் கடைசியில் இழந்தார்.

இந்தப் பின்னணியில்தான் எனது குழந்தைப் பராயம் கடந்தது.

மாணவப் பருவம் நடந்து கொண்டிருந்தது.

அந்த காலத்தில்தான் — எனது தகப்பனாருடன் அவரைப் பார்த்தேன். பெரிய மனிதர்களின் — பிரமுகர்களின் பிற்காலத் தொடர்பாக, நட்பு விட்டுப் போகாத நல்ல நண்பனாக அவர் எனது தகப்பனாருக்கு விளங்கினார்.

ஆள் மைனர். நல்ல சிவலை. பார்க்க லட்சணம். லட்சணத்தையும் மீறிய ஒரு வகைக் கவர்ச்சி. நடு உச்சி, சுருளான கேசம், கூரிய மூக்கு. கழுத்தில் மெல்லிய பவுண் செயின். அந்தக் காலத்தில் பிரபலமான 1703 வெள்ளை வேட்டி. வொயில் நாஷனல் அரைக் கைச் சட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

505 சிகரேட் டின்னின் மேல் நெருப்புப் பெட்டி சகிதமாக இடக் கையில் நிரந்தர இருப்பு. வயது இருபத்தெட்டு இருக்க லாம்.

எங்கள் வீட்டுக்குச் சமீபமா கத்தான் இவரது வீடு. தகப்ப ஞர் ஏதாவது அலுவல்கள் சொல்லிவிட்டால் மைனரின் வீடு தேடிச் செல்லப் போவ தால் சிறிது பழக்கம்.

இந்தியாவில் இருந்து சின்ன மேளம் வந்தால் இவரின் விருந் தினராகத்தான் அவர்கள் இருக்க வேண்டும். நாடகக்காரர்கள் வந்தாலும் அப்படியே. தகப்ப னுக்கு ஒரேயொரு மகனும், ஏராளமான சொத்துப் பத்துக் களை வைத்து விட்டுத் தகப்பன் கண்ணை மூடியதாக அப்பொழுது கேள்வி. இன்னுமொன்றையும் கேள்விப்பட்டதுண்டு. ஐம்பது ரூபாய் நோட்டைக் கொண்டு சிகரெட் வாங்கக் கடைக்குப் போனும் பையன். காசு மாற் றச் சில்லறை இல்லை என்று வந்து சொன்னதுடன் அதே நோட்டைச் சுருட்டிச் சிகரெட் டாகப் பாவித்தாராம்!

அப்பொழுது நான் பொடி யன். கால் பந்து விளையாட்டில் தணியாத ஆர்வம். ஒரு கால் பந்து வாங்கித் தரும்படி மாதக் கணக்காக கெஞ்சிப் பார்த்தேன் அப்பரிடம். அவர் நாட்களைக் கடத்துவதும் என்னை ஏமாற்று வதுமாகவே காலத்தைக் கடத்தி வந்தார்.

ஒரு சனிக்கிழமை கடைசித் தவணை,

மத்தியானம சாப்பிடக் கூட இல்லாமல் ஐயா வரும்வரை காவல் இருந்தேன். அவர் அன்று மத்தியானம் சாப்பிடக் கூட வர வில்லை.

எனக்குத் தெரியும் அவர் எங்கே இருப்பாரென்று. ஒழுங் கைகள் ஊடாக நடையைக் கட்டினேன். மைனரின் வீட்டுப் படலையைத் திறந்து எட்டிப் பார்த்தேன். தகப்பனர் இருந் தார். மைனருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

மெதுவாக நடந்து அவர் பக்கமாகப் போய் ஒதுங்கி நின் றேன்.

என்னைக் கவனித்தும் கவனி யாதது போல, பேச்சுச் சுவா ரஸ்யத்தில் மூழ்கிப் போயிருந் தார் அவர்.

நான் சிறு குரலெடுத்துச் சிணுங்கினேன்.

'என்ன யோசேப்: என்ன வாம் உன் மகன்?'

ஐயா பேசாமல் இருந்தார்.

மீண்டும் வினவினர் மைனர். தொடந்து என்னையே என்ன வென்று கேட்டார்.

ஐயா கால்பந்து வாங்கித் தருவதாகச் சொல்லிவிட்டு என்னை ஏமாற்றுவதைச் சொன் னேன்.

ஒன்றுமே பேசாமல் அவர் சட்டைப் பைக்குள் கைவிட்டு ஐந்து ரூபா நோட்டொன்றை எடுத்து தந்தார். தகப்பனருக்கு ஏதோ கதையைச் சொன்னர்.

அந்த மைனர்தான் இன்று என் முன்னல் கையேந்தி நிற் கின்முர்!...


பைக்குள் கையை நுழைத்து ரெயில் செலவுக்காக வைத்தி ருந்த பணத்தையெல்லாம் பொறுக்கி அவர் கையில் திணித்து விட்டு நான் திரும்பி நடந்தேன். பின்னர் கணக்குப் பார்த்தேன். பதினலு ரூபா எண்பது சதம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப் படம்**

அட்டைப் படப் பிக்காசோ உருவத்தை வரைந்தவர் உலகப் புகழ் பெற்ற திரைப்பட டைரக்டர் சத்யஜித் ரே ஆவார்.



# பிக்காசோ

**சபா. ஜெயராசா**

சமூக நோக்கின்றி அலைந்து அசைந்த மேனாட்டுக் கலை விமர்சகர்களை ஏமாற்றி விளையாடிய பிக்காசோ (1881 — 1973) கலைக்குரிய சமூகக் கடமைகளை ஆழ்ந்து வற்புறுத்திய கலைஞராக விளங்கியமையால் 75 ஆண்டுகள் வரை தொடர்ந்து ஆக்கத் திறனை வளர்க்கக் கூடிய திறனையும், சுமார் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கலைப் படைப்புக்களையாக்கக்கூடிய அசுர வல்லமையையுங் கொண்ட பெருங் கலைஞராக விளங்கினார். ஆக்க நெறி தழுவிய சமூகத்தின் செல் நிலைகளுடன் தம்மை ஆர இணைத்துக் கொள்ள வல்ல கலைஞனால் மாத்திரமே அத்துணை பெருந் தொகையான ஆக்கங்களை ஆழமாகவும் வேகமாகவும் தர முடியும் என்பதையும் பிக்காசோவின் ஆளுமை தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

இரண்டு உலகப் போர்களை நேரிலே தரிசனம் செய்த ஒரு கலைஞன் — போருக்குரிய காரணங்களையும், துயரங்களையும் சமூக நெறியிலே ஆழ்ந்து சிந்தித்த ஒரு சிருஷ்டியாளன் — வேகமுடன் வடிக்குங் கலைவடிவங்கள் கிளர்மின் சக்தியையூட்டும் கலைத் தாக்கங்களை ஏற்படுத்தி விடுதலும், தனித்துவ முத்திரைகளை ஆழ்ந்து பதித்து விடுதலும், வியப்பான பண்புகளன்று.

வறுமையின் கோலங்களும். துயரங்களின் வடிவங்களும் அவரது மென்மையான கலையுள்ளத்தை ஆழ்ந்து தாக்கியமையை, நீல வண்ணக்கால ஓவியங்கள் (1900 — 1903) புலப்படுத்துகின்றன. வறுமையில் உழலும் யாசகனும், முடவனும். நைந்தவனும், பிக்காசோவின் நீல வண்ணக்கால ஓவியங்களின் கதா நாயகர்களாகினர். அவை துயரந் தோய்ந்த வெளிப்பாடுகளாக விளங்கின.

வருமானப் பகிர்வின் சமனற்ற பரம்பலும், அதனால் எழும் அவலங்களும் அவரது மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தைக் குடைந்த வேளை அவர் கலைக் கூடங்களிலே பதுங்கி, ஒதுங்கித் தனித்துக் கொள்ளாது, கொடுமைகள் மிக்க சூழலுக்கு அறைகூவலை விடுக்கும் எதிர்த் தாக்கல்களைச் சிருஷ்டிக்க எண்ணிய கோலங்கள் ரோஸ் வண்ணக் காலத்தில் 1904) அரும்பி 1907 ஆம் ஆண்டுக்குப் பின் வேகமடையத் தொடங்கின, அவரின் அத்தகைய நடவடிக்கைகள் கலைக்குரிய எதிர்த்தற் சீராக்க நெறிக்கு வலுவளித்தன. அவற்றில் பூரிப்பு வெளிவீசியது — ரோஸ் வண்ணக் காலம் துயரில் வெடித்த மகிழ்ச்சியைப் புலப்படுத்தும்.

படிப்படியாக பிக்காசோவின் ஓவியங்களின் கனவடிவப் பாங்குகள் ஆழ்ந்த சுவை பெறும் வளர்ச்சி நிலைகளைக் கொள்ளத் தொடங்கின — முப்பரிமாணக் கோலங்களும், ஒரே காட்சியிற் பல கோணங்களை அவதானிக்கும் பண்பும் ஓவியங்களிலே உட்புகுந்தன.

சமூக ஒழுங்குகளின் குலைவுகளும் வாழ்க்கை முறிவுகளும் பிக்காசோவின் ஓவியங்களுக்கும் சிற்பங்களுக்கும் கருப் பொருளாயின. அதனுல் அவர் பாரம்பரியமான வடிவங்களை உடைத்துப் பிளந்து துண்டாடிய காட்சிகளையும், கோலங்களையும் கலைவடிவங்களாக முன்வைத்தார். அவர் வாழ்ந்த காலத்தில் அணுவைப் பிளக்கும் நடவடிக்கைகளும் விஞ்ஞானத் துறையிலே தீவிர வளர்ச்சி நிலைகளைப் பெறத் தொடங்கின. தொழில் நுட்ப வளர்ச்சியின் வியத்தகு குதூகலங்கள் 'எக்ஸ்' கதிர்ப்படங்களாயும், அதிர்வுகளாயும், சக்கரங்களின் சுழற்சி வேக மாறு நிலைகளாயும், வில்லைகளின் திரிபுக் காட்சிகளாயும் தொழிற்பட்டுக் கொண்டிருத்தலை ஆக்கத் திறன் மிக்க பிக்காசோவினுல் சீரணிக்க முடிந்தமையின் விளைவுகள் அவர்தம் கலையாக்கங்களிலே புதுமைகளுக்கு உரமூட்டின. நவீன ஓவியங்கள் ஒருவகையில், வாழ்க்கையின் முரண்பாடுகளைத் தழுவும் கலை வடிவமாக எழுந்தமையால், சம்பிரதாயமான அமைப்புக்களை மீறவேண்டிய தேவையையுங் கொண்டிருந்தன,

பிக்காசோவின் புதுமைகள் மண்ணுடன் ஒட்டாத புதுமைகளாக இருக்கவில்லை. பண்டைய இந்திய ஓவியங்களையும், ஆபிரிக்க ஓவியங்களையும் ஆராய்ந்தால் அவற்றிலே சமூக முரண்பாடுகளின் பிரதிபலிப்புக்களையும், ஆவல்களையும், அங்கலாய்ப்புக்களையும், ஒரு பண்புடன் பிறிதொரு பண்பை ஒட்டிப் பார்க்கும் விநோத கற்பனைக் கோலங்களையும் காணலாம். எடுத்துக்காட்டாக காமதேனுவும், இராகு கேதுவும், விலங்கு உடலையும், மனித சிரசையும் ஒட்டிப் பார்த்த இந்தியக் கலையுருவங்களாக விளங்கின.

பிக்காசோ பாரம்பரியமான காட்சி வடிவ மூலகங்களைச் சில சந்தர்ப்பங்களில் எதிரிடையாகவும் மாற்றியமைத்தார். அதனுற் கலைக்குப் புதிய பரிமாணங்களையும் அவராற் கொடுக்க முடிந்தது.

1920 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட யதார்த்தவியற் கொள்கைப் பிரகடனமும், விளாடிமிர் தத்வின் என்பவரால் ஆழ்ந்தும் விதந்தும் உருக்கொடுக்கப்பட்ட கலை வடிவங்களும், ஓவியத்தினதும், சிற்பத்தினதும் நிருமாணவியற் கொள்கைகளுக்கு ஆழ்ந்த பங்களிப்பைச் செய்தன. நிருமாண நோக்கு என்பது கலைக்கும் சமூக நோக்குக்குமுள்ள உறவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தும், வலுவூட்டியும், சிக்காராகத் தழுவச் செய்தும் வந்தது. ஓவியத்தையும் சிற்பத்தையும் வெறும் காட்சி நிலையிலோ அல்லது தூய கலை வடிவிலோ இறுகக் கட்டி முடக்காது, அவற்றுக்குப் பிரயோக வடிவைக் கொடுக்கும் திறனைச் சமூக நோக்கு வேகமாக வற்புறுத்தியது.

1925 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிக்காசோவின் ஓவியங்களிலும் அக நோக்கு யதார்த்தப் பண்புகள் விரவி நின்றன என்று சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டாலும் அக் கருத்தை முற்றும் முழுதாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஏனெனில் தூய கலை வடிவங்களுக்காகவே கலை என்ற மொய்யாப்பிலிருந்த மேலைட்டு விமர்சகர்களை ஏமாற்ற விளையாடுவதற்குரிய ஆக்கங்களை பிக்காசோ சிருஷ்டித்த வேளை, அவர் அடிமன உணர்வுகளை ஆழ்ந்து வெளிப்படுத்தினார் என்ற பாராட்டைப் பெற்றாலும் — அவற்றிலே தன்மை நவிர்ச்சி நிலை ஆழ்ந்து மேலோங்கியுள்ளது என்று 'சபாஷ்' கொடுக்கப்பட்டாலும், பிக்காசோ அத்தகைய ஓவியங்களாலும், சிற்பங்களினாலும், தான் ஒரு பாரிய கடமையை நிறைவேற்றிய திருப்தியைக் கொள்ளவில்லை. 1944 ஆம் ஆண்டு அவர் பொதுவுடமைக் கட்சி உறுப்பினராகச் சேர்ந்து கொண்டமை பிக்காசோவின் பழுதிலாச் சமூக நோக்கின் மணியாரமாகப் புலப்படுகின்றது.

பிக்காசோ அதிக அளவு குறியீட்டு நுட்பங்களைத் தனது ஆக்கங்களிலே பயன்படுத்தினார் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றாகும். ஆனாலும் அவரது குறியீடுகளின் ஆழ்ந்த தாக்கங்கள் சாதாரணமானவர்களது விளக்க வீச்சுக்கு உட்படவில்லை என்ற குற்றச் சாட்டுக்கள் எழுப்பப்பட்டாலும், அவர் குறியீட்டுப் பண்புகளுக்கு அடிமைப்படாது கூறவேண்டிய கருத்தையும், உணர்ச்சியையும், நிதானமாக முன்னெடுத்துச் சென்றார். கொரியாவில் நிகழ்ந்த அரசியற் படுகொலைகளைக் கருவாக வைத்து அவர் வரைந்த உயிரோவியம் நிருவாண நிலையிற் பெண்களும் குழந்தைகளும் அழுது கண்ணீர் வடிப்பதையும் அரசியற் கொடுமைகளின் துப்பாக்கிகள் கொடூர வடிவங்களிலே அவர்களைச் சூறையாடுவதையும், எதுவித குறியீடுகளுமற்ற கலையழகு குன்றா விவரண ஓவியமாக்கிய நேரடி வெளிப்படுத்துகை, பிக்காசோவை இந் நூற்றாண்டுக் கலை வளர்ச்சியின் கதாநாயகனாக்கி விடுகின்றது. ●

---

தகவம்

## சிறுகதைப் பரிசு

81 ம் ஆண்டின் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான ஈழத்தில் வெளிவந்த கதைகளில் சிந்தாமணியில் பிரசுரமான ரதி கந்தசாமியின் சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. அதற்கான பரிசு ரூபா 50.

அடுத்து வேலாயுதம் விஜயகுமார் சிந்தாமணியில் எழுதிய 'பார்வைகளும் பரிதாபங்களும்' என்ற கதையும், மல்லிகையில் காவலூர் ஜெகநாதன் எழுதிய 'ஆண்டாண்டு தோறும்' என்ற கதையும் சான்றிதழ் பத்திரம் பெறுகின்றன.

கதைஞர்களுக்கான சான்றிதழ்களும் பரிசும் தகவம் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்ரஹாரத்தில் அதிசயம்

ம. ந. ராமசாமி

அசுர சந்தி நேரம். வெளியிலிருந்து வந்த சேஷ சாஸ்திரிகள் புறக்கடைப் பக்கம் சென்று முகம், கை, கால் கழுவி, மேல் அங்க வஸ்திரத்தால் துடைத்தபடி பட்டக சாலைக்கு வந்தார். முத்தம் ஓரத்தில் வெள்ளி பஞ்சபாத்திரம் நீர், உத்தரணியுடன் அவருடைய சந்தியா வந்தனத்துக்காகக் காத்திருந்தது. பட்டக சாலையில் நெற்குதிர் மீது சாய்ந்து வாரப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த சாவித்திரி நிமிர்ந்தாள்.

'அப்பா, உங்களுக்கு விஷயம் தெரியுமோ?' என்று அவள் சேஷ சாஸ்திரிகளைப் பார்த்துக் கேட்டாள்.

'என்ன?' சாஸ்திரிகள் பலகையை எடுத்து முத்தம் அருகில் போட்டுக் கொண்டு, சந்தியா வந்தனம் செய்ய உட்கார்ந்தார்.

சமையலறையிலிருந்து வந்த அவருடைய மனைவி. 'இருட்டினது கூடத் தெரியலியா? காலா காலத்துலே விளக்கைப் போடக் கூடாது?' என்று பொதுவாகக் கேட்டுவிட்டு, ஸ்விட்சை அழுத்திவிட்டு நடந்தாள்.

'அப்படி ஒண்ணும் விளக்கு ஏத்தும் நேரம் ஆகல்லே, அம்மா! நான் படிச்சிண்டு இருக்கேனே! படிக்கறதுக்கு வெளிச்சம் போதலேன்னு, நானே விளக்கைப் போட்டிருப்பேன்' என்றாள் மகள்.

சேஷ சாஸ்திரிகள் நெற்றியின் இரு பக்கமும் குட்டிக் கொண்டு, மாலை வணக்கத்தைத் தொடங்கினார்.

'பக்கத்தாத்து அலமேலுப் பாட்டி தன் வீட்டை ஒரு கவுண்டருக்கு வித்துட்டாளாம். இன்னிச்கு கவுண்டர் வந்து பாட்டியைக் காரில் கூட்டிண்டு போய், ரிஜிஸ்தரார் ஆபிஸிலே ரிஜிஸ்டர் பண்ணிண்டு கொண்டு வந்து விட்டார்'

மூக்கு அருகில் கொண்டு சென்ற தன் கையை விலக்கிக் கொண்டு சாஸ்திரிகள் மகளைப் பார்த்தார்.

'நமது அக்ரஹாரத்துலேயும் சூத்தராள் வீடு வாங்கிண்டு வர ஆரம்பிச்சாச்சு!' மகள் சொன்னாள்.

முகத்தை நேராகத் திருப்பிக் கொண்டு, சாஸ்திரிகள் மூக்கைப் பிடித்தார். மகள் கையிலிருந்த பத்திரிகையில் ஆழ்ந்தாள்.

இது சற்று அதிர்ச்சி தரக்கூடிய செய்திதான். பக்கத்து வீட்டு ஆலமேலுப் பாட்டியின் இந்தச் செய்கை தகாதது. செத்த பிறகு பாட்டிக்கு நரகம் கிடைக்கிறதோ, இல்லையோ, நிச்சயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்க்கம் கிடைக்காது; வேத காலம் தொட்டு பிராமணர்கள் மட்டுமே வாழ்ந்து வரும் அக்கிர ஹாரத்தில் ஒரு சூத்திரன் வீடு வாங்கிக் குடியேறுகிறுன் என்றுல் காலத்தின் கொடுமை இது.

'சிவோஹம்' என்று சந்தியா வந்தன மந்திரங்களிடையே கூறி, தன் மன ஆதங்கத்தை வெளிப் படுத்திக் கொண்டார் சாஸ்திரி கள்.

அலமேலுப் பாட்டி லேசுப் பட்டவள் அல்ல. இளம் வயதில் கைம் பெண்ணுகி விட்டவளின் பெண்மை முதிர்ச்சி அடைந்து ஆண்மையாகி விட்டது; ஒருத் தர் பேசி அவளிடமிருந்து மீண்டு விட முடியாது. பற்கள் போன இந்த வயதிலும் வயணமாக முறுக்குப் பண்ணி, ஈறுகளால் கடித்து மென்று சாப்பிடுகிறுள் என்றுல், அந்த ஈறுகள் எந்த அளவுக்கு உறுதி பெற்றிருக்கின் றன என்பதைப் புரிந்து கொள்ள லாம்.

பாட்டிக்கு ஒரே மகள். சென்னையில் கணவனுடன் இருக் கிறுள். மஞ்சக் காணியாக வந்த நிலம் இருக்கிறது. அதில் கிட் டும் வருவாய்தான் ஜீவனுேபா யம். மகள் வெகு நாட்களாகவே பாட்டியைத் தன்னுடன் வந்து இருக்கும்படி கேட்கிறுள். பாட் டிக்குப் போக விருப்பம் இல்லை. ஆறும், நீரும், சொந்த வீடும், பிறர் கையை எதிர்பாராத ஸ்வதந்திரமும் பட்டணத்தில் கிட்டுமோ?

சேஷ சாஸ்திரி குடும்பத்தி னருக்கும், அலமேலுப் பாட்டிக் கும் அவ்வளவு சௌஜன்யமான உறவு இல்லை. இரு வீட்டுக்கும் ஒரே பொதுக் கிணறு. கிணற்றி லிருந்து நீரை இழுத்து இழுத் துக் கொட்டி, வெயிற் காலததில் நீர் அற்றுப் போகச் செய்து விடுகிறுர்களாம் சாஸ்திரிகள் குடும்பத்தினர். சாஸ்திரிகள் என்று பேர்தானே தவிர, அப்படி ஒன்றும் ஆசார சீலர் இல்லையாம் அவர். பாட்டியின் பல குற்றச் சாட்டுகளில் சில இவை.

தலையைச் சுற்றி நீரைத் தெளித்துவிட்டு எழுந்தார் சாஸ் திரிகள். 'அப்போ அலமேலு பொண்ணுேடு பட்டணத்துலே போய் இருந்துடப் போருளாக் கும்?' என்று கேட்டார் அவர் மகளைப் பாராமல்.

மகள் பதில் சொல்லவில்லை. அவள் பத்திரிகையில் மூழ்கி இருந்தாள்.

●

'அப்பா, பக்கத்தாத்தை வாங்கி இருக்காரே, கவுண்டர், அவர் உங்களைப் பார்க்கணும்னு மத்தியானம் வந்தார். டௌனுக் குப் போயிருக்கார், சாயந்திரம் தான் வருவார்னு சொன்னேன். சரி, ராத்திரி வரேன்னு சொல் லிட்டுப் போயிருக்கார். கவுண் டர் மீசையும், முழியுமா, பார்க் கறதுக்குப் பயப்படும் படியாத் தான் இருக்கார். அப்பா! ஆனுல் பேச்சு ரொம்ப இனிமையா இருக்கு. நாலு வார்த்தை பேச றத்துக்குள்ளே, நாலு தடவை பாப்பா, பாப்பான்னு என்னைச் சொல்லிட்டார்' என்றுள் சாவித் திரி தந்தையிடம்.

'உம்...... எதுக்கு என்னைப் பார்க்கணும்னு சொன்னுர்?'

'அதைச் சொல்லலே'

'பொதுக் கிணறு விஷயமா இருக்குமோ, என்னவோ! நதி பக்கத்திலே இருக்குனுதான் பேரு. கிணத்துத் தண்ணி பாதா ளத்துலேதான் இருக்கு. அநாவ சியமா ரெண்டு கிணறு வெட்டு வானேன்னு சரிசமமா ரெண்டு வீட்டுக்காராளும் பணத்தைப் போட்டு, கிணத்தை வெட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிட்டா. இப்போ கிணறு யாருக் குச் சொந்தங்கிற பிரச்சினை எழுறது. கவுண்டர் சாயந்திரம் வாரேன்னு சொல்லிட்டுப் போனரா?' சாஸ்திரிகள் மகனைக் கேட்டார்.

'இல்லையப்பா! ராத்திரி மணி எட்டுக்கு மேலே வரேன். அப்பா அப்போ சாப்பிட்டுட்டு இருப்பாரோ லியோ?னு கேட் டார். இருப்பார்னேன்'

சொன்னற் போல, கவுண் டர் இரவு எட்டு மணி அளவில் வந்தார். வீட்டுத் திண்ணை இருட்டில் உட்கார்ந்திருந்த சாஸ்திரிகளை அடையாளம் கண்டு, 'நமஸ்காரம், சாமி!' என்று கூறி கை கூப்பினர்.

'நமஸ்காரம். வாங்கோ, உட்காருங்கோ' என்று சொல்லி விட்டு, சாஸ்திரிகள் வீட்டின் உட்புறம் திரும்பி, 'அம்மா சாவித்திரி, வாசல் விளக்கைப் போடு' என்றார்.

'பக்கத்து வீட்டை வாங்கிட் டிருக்கேன். அக்ரஹாரத்துலே வீடு வாங்கிறதான்னு கொஞ்சம் யோசிச்சேன். நாங்க கறி சாப்பிடறவங்க இல்லே. அத னலே ஆடு, கோழி வளக்கறது இல்லை. இப்பத்தான் ஜாதி வேறு பாடு மறஞ்சிண்டு வர்தே, அக்ர ஹாரத்துலே வீடு வாங்கின என் னன்னு நாலு தடவை யோசிச் சிட்டுத்தான் வாங்கினேன். ஐயா வுக்கு இப்படி நான் பக்கத்து வீட்டை வாங்கினதுலே மனக் கிலேசம் இருக்காதுன்னு நினைக் கிறேன்' என்றார் கவுண்டர்.

'அதனலே என்னன்ன? இப்ப ஜாதி எங்கே இருக்கு? இத பாருங்க, கவுண்டரே! நான் வைதிகன் தான். இருந்தாலும் லௌகீகம் தெரியாதவன் இல்லே. காலம் மாறிண்டு வர்து. வேதம், உப நிஷத், மீமாம்ஸம், வியா கரணம் படிக்க வேண்டிய பிரா மணன் உத்தியோகம் பண்ணப் போயிட்டான், அடுத்த தலை முறைக்கு மந்திரம் சொல்லி சிரார்த்தம் பண்ணிவைக்க வாத் தியார் கிடைப்பானங்கிறது சந் தேகம்தான். என்கிட்ட அத்ய யனம் கத்துக்க ஒரு பிராமணப் பையன் கூட வரது இல்லே. பிராமணன் பிராமணன இருக் கானே இல்லியோ, உங்களைப் போலொத்தவாள் பிராமணன ஆயிண்டு வரா. மாம்ஸம் சாப் பிடறதை விட்டுட்டேன்னுசொல் றேள். பின்னே என்ன, உங்க ளுக்கும் எனக்கும் என்ன வித்தி யாசம் இருக்கு? பேஷா வாங்கோ வீட்டுக்கு. நானே நாள்ப்பார்த் துத் தரேன். எப்போ வரதா இருக்கேள்?' சாஸ்திரிகள் கேட் டார்.

'இந்த மாதம் எப்படி?'

'மாசி. பரவாயில்லே. கிர கப் பிரவேசம் பண்ணலாம்' என்று கூறிய சாஸ்திரிகள் வீட் டின் உட்புறம் பார்த்து, 'அம்மா சாவித்திரி, பஞ்சாங்கத்தை எடுத் துண்டு வா' என்றார்

'வெள்ளை அடிச்சு துப்புரவு பண்ண ஏற்பாடு பண்ணிட்டேன். நாளைக்கே ஆட்கள் வந்திடு வாங்க'

சாஸ்திரிகள், 'கிணறு பொதுவானது. அளந்து பார்த்து ரெண்டு வீட்டுக்கும் நடுவிலே வெட்டினதாத் தெரியலே. சொல்லப் போன, உங்க பக்கத் துலே கிணத்தின் பாகம் அதிகம் விழறது'

'அப்படி இருந்திடறதுலே எனக்கு மன வேறுபாடு இல்லே. சாமிக்கு அப்படி ஏதாச்சும் இருந்திச்சுன்ன, உங்க பக்கத் துலே வேறு கிணறு வெட்டிக் கொடுக்க நானே ஏற்பாடு பண் ணறேன். ஆசாரம் பாக்கறவங்க நீங்க' என்றார் கவுண்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எதுக்குன்னு? ஜலத்துச்கு தோஷம் கிடையாது'

மகள் கொண்டு வந்து கொடுத்த பஞ்சாங்கத்தைப் பெற்று, புரட்டினுர். வெள்ளிக் கிழமை தசமி, பதினெட்டாம் தேதிக்குச் சரியாக இங்கிலீஷ் தேதி மார்ச் ரெண்டு நல்ல நாளா இருக்கு. ஆத்துலே பாரியாள், பொண்ணுக்கு சரியான நாள்த்தானே?' சாஸ்திரிகள் கேட்டார்.

கவுண்டருக்குப் புரியவில்லை.

'வீட்டுலேதானே இருப்பாங்கன்னு கேட்டேன்'

'ஓ, அதைக் கேட்கறீங்களா? நம்ம வீட்டுக்காரி.... உம்...... வீட்டுலேதான் இருப்பா. மகள் இல்லே. ஒரே மகன்தான் எனக்கு. அவனும் பட்டணத்துலே படிச் படிச்சுக்கிட்டு இருக்கான்'

'அப்போ சரி. இன்னிக்குத் தேதி பிப்ரவரி இருபத்தாறு. மார்ச் ரெண்டாம் தேதி காலே ராகு காலத்துக்கு முன்னுலே முகூர்த்தத்தை வச்சுண்டுடலாம்'

'சாமியே வந்து இருந்து முகூர்த்தத்தை நடத்திக் கொடுத்துடனும்' என்று கூறிய கவுண்டர் சட்டைப் பையிலிருந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்து சாஸ்திரிகள் எதிரே வைத்தார்.

'இவ்வளவு எதுக்குன்னு ரெண்டு ரூபா கொடுங்கோ, போதும். நான் பார்த்துத் தர ரெண்டு ரூபாக்கு மேலே எதுக்கு? பணம் லக்ஷ்மி, கவுண்டரே! இப்படி எல்லாம் வீசி எறியக் கூடாது!'

'வச்சுக்குங்க வேற சில்லறை இல்லே'

'பரவாயில்லே. கிரஹப் பிரவேசத்தன்னிக்கு சம்பாவனை பண்ணுங்கோ"- வாங்கிக்கறேன்; சபையிலே மரியாதையா இருக்கும்' என்ருர் சாஸ்திரிகள்.

●

கவுண்டரின் குடும்பம் பக்கத்து வீட்டுக்குக் குடிவந்து விட்டது. கவுண்டரின் மனைவி தேவகி மரியாதையுடன் பழகினுள். பொழுது போகாத நேரங்களில் வந்து, சாவித்திரியுடன் உட்கார்ந்து பல்லாங்குழி, தாயக் கட்டம் விளையாடினுள். ஆர்வத்தோடு அமர்ந்து, சாஸ்திரிகள் மனைவி புராணக் கதைகள் சொல்ல கேட்டுக் கொண்டிருந்தாள். வண்டி வைத்துக் கொண்டு சினிமாவுக்குப் போகும் போது, துணைக்கு சாவித்திரியையும் அழைத்துச் சென்ருள். வயலில் இருந்து கடலைக்காய் வந்தது என்று சொல்லி இரண்டு வெள்ளம் வேர்க்கடலையை நடுக் கூடத்தில் கொட்டிவிட்டுச் சென்ருள்.

கிணற்றிலிருந்து சாஸ்திரிகளோ, அவரது மனைவியோ, அல்லது சாவித்திரியோ நீர் எடுக்க வந்தபோது, கவுண்டரின் குடும்பத்தினர் ஒதுங்கிக் கொண்டனர். இப்படி அவர்கள் ஒதுங்குவது சாஸ்திரிகள் குடும்பத்துக்கு கஷ்டமாக இருந்தது. கூடிய மட்டும் கவுண்டர் குடும்பத்தினர் கிணற்றைப் பயன் படுத்தும் போது, அருகில் செல்லாமல் இருந்தனர். அலமேலுப் பாட்டியிடம் பெற்ற அனுபவம் இப்போது உதவியாக இருந்தது.

நீர் எடுக்கும் போதுதான் அப்படி ஒதுங்கி இருந்தார்களே தவிர, கவுண்டரின் மனைவியும் சாஸ்திரிகள் மனைவியும் கிணற்றடியில் நின்று மணிக் கணக்காகப் பேசினர். கவுண்டரின் மனைவி சாஸ்திரிகளின் சம்சாரத்தை 'மாமி' என்று அழைத்தாள். அருகில் சாவித்திரி இருந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்யம், "உங்க மகளை என் மக னுக்குக் கட்டிக் கொடுத்திடுங் களேன்!' என்று கூட சிரித்துக் கொண்டு கூறினாள்.

'காலம் அப்படி மாறினு, கவுண்டாளும், பிராமணுளும் சம்மந்தம் பண்ணிக்காமயா போகப்போறு?' என்ருள் சாஸ் திரிகள் மனைவி சமத்காரமாக. 'எங்க ஜாதிக்காரானு, வரதட் சணை கேட்பா. தங்கம் விக்கற வெலேலே பத்துப் பவுன் நகை போடறதா இருந்தாக் கூட, இந்தக் காலத்துலே பன்னெண் டாயிரம் ரூபா ஆகும். அப்புறம் வெள்ளிப் பாத்திரம், எவர்சில் வர்னு ஐயாயிரம் ஆகலாம். இப்பக் கல்யாணம் பண்ணறதா இருந்தால், கொறைஞ்ச பட்சம் முப்பதாயிரம் இல்லாமல் முடி யாது. இதுக்குக் கொறைஞ்சு பிராமணப் பையன் யாரையும் தேட முடியாது. கவுண்டர் ஜாதிப் பையன் செலவு இல்லா மல் கல்லாணம் பண்ணிக்கி றேன்னு, கொடுக்கக் கசக்கவா செய்யும் எங்களுக்கு?'

'நல்லாத்தான் பேசறீங்க; கிட்டி முட்டி வந்தா பெண்ணைக் கொடுப்பீங்களான்று சந்தேகம் தான்!' என்ருள் கவுண்டரின் மனைவி.

'அது சரி, உங்களுக்கு என்ன? பிள்ளை பெரிய படிப்பு படிக்கி ருன். உங்க ஜாதிலே லட்ச லட் சமாக் கொடுத்துக் கல்யாணம் பண்ண வருவா. இந்த ஏழை சாஸ்திரியோட பொண்ணு எதுக்கு?'

படிப்பை முடித்து, பரீட்சை எழுதிவிட்டு சொக்கலிங்கம் வந் தான். சொக்கலிங்கம் கவுண்ட ரின் மகன். புறக்கடையில் மாம ரத்தின் கீழ் நாற்காலியைப் போட்டுக் கொண்டு, கட்டுப் புஸ்தகங்களை வைத்துக் கொண்டு படித்தான். காலையில் தாமத மாக எழுந்து, கிணற்றடியில் பல் தேய்த்தான். டூத் பிரஷ் ஷைப் பிடித்த கையோடு கிணற் றிலிருந்து நீர் சேந்தினுன்.

'ஐயையோ, எச்சில் கை யோடு தண்ணி எடுக்கக் கூடாது' என்று அலறினுள் சாவித்திரி.

சொக்கலிங்கம் பயந்துபோய் கயிற்றை விட்டான். வாளி கிணற்று நீரினுள் டமால் என விழுந்தது.

'பின்னே எப்படி நீர் இழுக் கறது?' சொக்கலிங்கம் அவளி டம் கேட்டான்.

'தண்ணியை முதல்லேயே இழுத்து வச்சிண்டு, சொம்பாலே தண்ணீரை மொண்டு அலம்ப ணும்'

'இப்போ என்ன செய்யறது'

'நான் தண்ணி ஊத்தறேன். கை அலம்பிக்கோங்கோ'

மண் சுவருக்கு இந்தப் பக் கம் நின்று கொண்டு, கிணற்று வாளியிலிருந்து அவள் நீர் ஊற் றினுள். சொக்கலிங்கம் கைகளைக் கழுவிக் கொண்டான். 'இப்படி கிணத்துப் பக்கத்துலே எச்சில் துப்பறதும், வாய் கொப்பளிக் கறதும் கூடத் தப்பு' என்ருள்.

'எது எது தப்புன்னு சொல்லுங்க, நான் திருத்திக் கறேன்!'

சாவித்திரி அவனை தீர்க்க மாகப் பார்த்தாள். கவுண்டரின் ஜாடைதான். ஆனுல் நிறத்துக் குத் தாயைக் கொண்டிருந்தான். கவுண்டரின் மனைவி நல்ல சிவப்பு

●

'பூ பறிக்கிறீங்களா?'

சாவித்திரி திரும்பிப் பார்த் தாள். சொக்கலிங்கம் கையில் புஸ்தகத்துடன் கிணற்றுச் சுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது ஒரு காலே உயர்த்தி ஊன்றியபடி கேட்டான்.

'ஆமாம். அப்பா பூஜைக்கு' என்று கூறிவிட்டு, மலர் கொய்யத் தொடங்கினுள்.

'அது மல்லிகைப் பூவா? ரெண்டு பூ கொடுங்க வாசனை பார்க்கறேன்'

'இது மல்லிகைப் பூ இல்லே. ஜாதி புஷ்பம்'

'ஜாதி புஷ்பமா? புஷ்பத்திலே கூட ஜாதி இருக்குதா?' அவன் சிரித்தான்.

அவள் திரும்பி அவனைப் பார்க்கிறுள். 'இந்தப் பூ பேரு ஜாதி. பாணபட்டர் கூட இந்தப் பூவைப் பற்றி பாடி இருக்காரே!'

'பாணபட்டரா?'

'ஆமா தெரியாது?'

'எனக்கு ஆரியபட்டர் பற்றித்தான் தெரியும்'

'பாணபட்டர் கவிஞர்'

'தெரியாது'

'ஹர்ஷ சரித்திரம் படிச்சது இல்லையா?'

'படிச்சிருக்கேன் மறந்து போச்சு'

'பாணபட்டர் ஹர்ஷர் சபையிலே ஆஸ்தான கவியாக இருந்தவர். காதம்பரிங்கிற காவியத்தை எழுதி இருக்கார். அவர் காஞ்சிபுரத்துக்கு வந்தார். காஞ்சிபுரத்துலே அப்போ மகேந்திர பல்லவர் ஆண்டு வந்தார். நகரத்தைப் பார்த்து அதன் அழகுலே மயங்கிப் போய்ப் பாடினுர்'

'என்ன பாட்டு அது? சொக்கலிங்கம் ஆர்வத்துடன் கேட்டான்.

'சொல்லட்டுமா?'

'சொல்லுங்க!'

'எழுதிக் கோங்கோ'

அருகில் நாற்காலி மீது இருந்த பேனுவையும், நோட்டுப் புஸ்தகத்தையும் அவன் எடுத்து வந்தான். 'சொல்லுங்கோ' என்றுன் பேனுவைத் திறந்து.

'சொல்றேன் "புஷ்பேஷு" ஜாதி.....!' என்றுள் சாவித்திரி.

'தமிழ் கவிதை இல்லியா?'

'இல்லே சம்ஸ்கிருதம். சம்ஸ்கிருதம் தெரியாத உங்களுக்கு?'

'கேலி பண்ணறீங்களா?' சொக்கலிங்கம் கேட்டான்.

சாவித்திரி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

'பரவாயில்லே. சொல்லுங்க. தமிழ்லேயே எழுதிக்கிறேன்'

'சரி, எழுதிக்குங்கோ. 'புஷ்பேஷு' ஜாதி!'

''ஷ்' எப்படிப் போடறது?'' சொக்கலிங்கம் கேட்டான்.

'ஷ் போடத் தெரியாதா?'

'தெரியாது'

'உங்களுக்கு ஒரு ஜோக் தெரியுமா?'

'சொல்லுங்க'

'வகுப்புலே வாத்தியார் 'மலர்கள்' என்கிற பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார். ஒரு மாணவன் எழுந்து, 'ஸார், சீனு பூவை புஷ்பம்னு சொல்றுன்' என்றுன். அதுக்கு வாத்தியார், 'பூனு சொல்லலாம், மலர்னு சொல்லலாம், புசுபம்னு சொல்லலாம், சீனு சொல்ற மாதிரியும் சொல்லலாம்' னுர்.

சொக்கலிங்கம் அவளைப் பார்த்து விழித்தான்.

'புரியலே?' சாவித்திரி கேட்டாள்.

தலையாட்டினுன் சொக்கலிங்கம்.

'வாத்தியாருக்கு புஷ்பம்னு சொல்ல வரல்லே. அதனுல் சீனு சொல்ற மாதிரியும் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம்னு சொன்னுர்' என்று அவள் கூறியவுடன், சொக்கலிங்கம் சிரித்தான்.

'அது சரி, 'ஷ்' எப்படிப் போடறது சொல்லுங்க' என்ருன் அவன் அவளிடம்.

சாவித்திரி முந்தாணையில் கைகளைத் துடைத்துக்கொண்டு, அவனிடம் இருந்து நோட்டையும், பேனுவையும் பெற்று. நோட்டில் 'ஷ்' என்று பெரிதாக எழுதிக் கொடுத்தாள்.

'ஓ, இதுதான் 'ஷ்' ஷா? இது தெரியுமே எனக்கு' என்ருன் சொக்கலிங்கம்.

அவள் சிரித்தாள். 'சரி, பாட்டைச் சொல்றேன் எழுதிக் கோங்கோ' என்று கூறி அவள் பாணபட்டன் கவிதையைச் சொன்னுள்.

'புஷ்பேஷு ஜாதி
புருஷேஷு விஷ்ணு
நாரிஷு நம்பா,
நகரேஷு காஞ்சி'

சொக்கலிங்கம் தடுமாறினுன்.

'எழுதிட்டேளா?: சாவித்திரி கேட்டாள்.

'ஒரே 'ஷ்' ஷும், 'ஷு' வுமா வரது. 'ஷு' எப்படிப் போடறது? காலில் 'ஷு' போட்டுத்தான் பழக்கம்!'

சாவித்திரி சிரித்தாள். 'இங்கே கொடுங்கோ நானே எழுதிக் கொடுத்துடறேன்' என்று கூறி, பேனுவையும் நோட்டுப் புஸ்தகத்தையும் வாங்கி, தானே கவிதையை எழுதித் தந்தாள்.

'இந்தச் சின்னக் கவிதையை தமிழிலே எழுதிக்கக் கூட எனக்குத் தெரியலேங்கிறதை நினைக்கிற போது, வெட்கமாக இருக்குது' என்ருன் சொக்கலிங்கம்.

'கற்றது கைமண் அளவு. கல்லாதது உலகளவு என்று உற்ற கலை மடந்தை ஓதுகின்ருள்' என்ருள் சாவித்திரி.

'அப்படீன்னு?'

'அப்படீன்னு, தான் படித்ததே கை மண் அளவுதான். படிக்காதது இந்த உலகம் அத்தனை பெரிசு இருக்குனு கல்விக் கடவுளான சரஸ்வதிதேவி சொல்ருளாம்'

'நீங்க ரொம்பப் படிச்சிருக்கிங்க!' என்ருன் சொக்கலிங்கம்.

'இல்லே. எஸ். எஸ். எல். சி. தான். அப்பாகிட்ட சம்ஸ்கிருதம் படிச்சிருக்கேன்'

'எனக்கு சம்ஸ்கிருதம் கத்துக் கொடுங்களேன்!' என்று கேட்டான் சொக்கலிங்கம்.

சாவித்திரி அவனை வியப்புடன் நோக்கினுள். 'எனக்குக் கத்துக் கொடுக்கற அளவு சம்ஸ்கிருதம் தெரியாது. அப்பாகிட்டக் கத்துக்கோங்களேன்'

'சரி, சாஸ்திரி ஐயாகிட்ட நானே வந்து பேசறேன்' கவிதை அழகா இருக்கு 'ஜாதிஷு புஷ்பா......' என்ருன் சொக்கலிங்கம்.

'ஜாதிஷு புஷ்பா இல்லே!' சாவித்திரி சிரித்தாள். 'புஷ்பேஷு ஜாதி. அதாவது மலர்களில் ஜாதிப்பூவும், ஆண்களில் விஷ்ணுவும், பெண்களில் ரம்பையும், நகரங்களில் காஞ்சிபுரமும் உயர்வானவர்கள், உயர்வானதுனு அர்த்தம்'

'சாவித்திரி........!' என்ற குரல் வீட்டினுள்ளிருந்து வந்தது.

'வந்துட்டேம்மா!'

'அங்கே யாரோட பேசிண்டு நிக்கறே? பூப்பறிச்சிண்டு சீக்கிரம் வா. அப்பா பூஜைக்குக் காத்திண்டு இருக்கார்'

'சரி, வந்துட்டேன்' அவள் அவசர அவசரமாக மலர்களைக் கொய்தாள். 'நீங்க சம்ஸ்கிருதம் கத்துக்கணும்னு அப்பாவைக் கேட்டுப் பாருங்கோ' என்ருள் சொக்கலிங்கத்திடம் செல்லும் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டின் ரேழியில் நின்முன் சொக்கலிங்கம். 'ஸார்' என்முன். சாஸ்திரிகளை எப்படி விளிப்பது என்பது தெரியவில்லை. 'ஐயா' என்று கூப்பிடலாமா என நினைத்தான். அப்படி அழைப்பது தன் படிப்புக்குக் கௌரவமாக அவனுக்குப் பட வில்லை.

'யாரு' சாஸ்திரிகள் உள்ளே இருந்து வந்தபடி வினவினுர்.

'நான் பக்கத்து வீட்டு கவுண்டர் மகன்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் அவன்.

'ஓ, கவுண்டர் மகனு? வா, வா. உள்ளே வா. வந்து உட்கார்' சாஸ்திரிகள் திரும்பினுர்.

சொக்கலிங்கம் உடன் சென்முன். சாஸ்திரிகள் நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தார். அருகில் இருந்த நாற்காலியில் அவனை உட்காரச் சொன்னுர். பரவா யில்லை என்று சொல்லி அவன் நின்முன்.

'நான் சம்ஸ்கிருதம் கத்துக் கிடணும்னு இருக்கறேன்' என்முன்.

சாஸ்திரிகள் திடுக்கிட்டார். 'நீயா?' என்முர்.

'ஏங்க? எனக்கு சம்ஸ்கிருதம் வராதா?'

அவனை வியப்புடன் அவர் நோக்கினுர். 'வராதாவது; ஏன் வராது? நன்ரு வரும். படிக்கணும்னு ஆசைப்படுறே பாரு, அதுவே முதல் படி. முதல் படியிலே காலை வச்சிட்டா, ஏறத் தானே வேணும்!

'எப்ப தொடங்கலாம்னு சொன்னீங்கன்னு, புஷ்தகம். நோட்டு எல்லாம் வாங்கிட்டு வரேன்'

'எப்ப வேணுலும் தொடங்கலாம். சம்ஸ்கிருதம் படிக்கணும்னு உன் மனசுலே எப்ப தோணித்தோ, அந்த வேளையே நல்ல வேளைதான். புஸ்தகம் எல்லாம் எங்கிட்ட இருக்கு. இன்னிக்கு சாயந்திரம் மூணு மணிக்கு மேலே வா, ஆரம்பிச்சுடலாம்!'

சொக்கலிங்கம் சென்முன்.

அவருடைய மனைவி வந்தாள். ஏன்னு, கவுண்டரோட பிள்ளைக்கு சம்ஸ்கிருதம் கற்றுக் கொடுக்கப் போறேளா?

'ஆமாண்டீ!'

'அவனுக்கு வருமோ?'

'வரத்தான் வேணும். பிராமணன் சம்ஸ்கிருதம் படிக்க மாட்டேங்கிறுன். அத்யயனம் பண்ண மாட்டேங்கருன். சூத்திரன் படிக்கிறேங்கிறுன். சொல்லித்தர மாட்டேன்னு நான் சொன்னுல் அது தப்பு'

'அப்புறம் அவனுக்கு வேதம் எல்லாம் கூட கத்துக் கொடுப்பேள். கனம் பாடச் சொல்லித் தருவேள் இல்லையா?'

'சொல்லித் தருவேன்டீ!'

'அப்புறம் அவனுக்குப் பூனூல் போட்டு வைப்போள்'

'வைப்பேன்!'

'இன்னும் கேட்கவா?'

'கேளேன்'

'உங்க பொண்ணைக் கூட அவனுக்குக் கல்யாணம் பண்ணித் தருவேன்னு சொல்லுங்கோ!'

'உம்.....? தருவேன்டீ! ஏன் கூடாது? உங்க மகளை என் மருமகளா ஏத்துக்கறேன்னு கவுண்டர் வந்து சொன்னுர்னு, நான் மாட்டேன்னு சொல்லக் கூடாதுடீ! அது சாஸ்த்திரத்துக்கு விரோதம்! என்முர் சாஸ்திரிகள்.

சமையல் அறையில் காய் அரிந்து கொண்டிருந்த சாவித்திரி தன்மீது யாரோ ஒரு கூடைப் பூவைக் கொட்டுவதாக உணர்ந்தாள். அக்ரஹாரங்களிலும் அதிசயங்கள் நிகழ்வது உண்டு என்று தன்னுள் அவள் சொல்லிக் கொண்டாள் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனியொரு புதிய விதிசெய்வோம்

**தெணியான்**

ஓயாமல் அழுதுகொண்டிருக்கும் வயிற்றின் குரல்தான், மூன்று தினங்களாக அழும் ரஜனியின் குரல். பகல் பொழுதின் சந்தடியில் அமுங்கி சிணுங்கலாகக் கேட்கும் அதன் குரல், இரவின் கோர அமைதியில் பயங்கர ஓலமாக அவனைத் துன்புறுத்துகின்றது.

அவன் வயிறும் அப்படித்தான் அழுகிறது, ரஜனியைப் போல.

ஆனால் அவனுக்கும் இயலுமா குரலெடுத்து அழுவதற்கு.

வீட்டு விறுந்தையில் வரிசையாகப் படுத்துக் கிடக்கும் குழந்தைகளையும் அவளையும் கனக்கும் இதயத்தோடு திரும்பி நோக்குகிறான், அந்த இருளிலே.

பயங்கரச் சூறாவளியில் அடிபட்டு, கொளுத்தும் வெயிலில் வாடி வதங்கித் துவண்டுபோன சோகை பிடித்த வாழைக் குட்டிகளாக குழந்தைகள். அவள் மாத்திரமென்ன? இடையில் முறிந்து தலை தொங்கும் குலை போட்ட வாழையாகப் படுக்கையில் விழுந்து மெல்ல மெல்ல அசைந்து திரும்பி, புரண்டு புரண்டு கிடக்கிறாள்.

அவளுக்கும் குடல் கொதிக்கிறது, அவனைப் போலவே.

உறக்கமும் அஞ்சுகிறது, அவர்களை நெருங்குவதற்கு. வயிற்றிலே புகைமண்டலம். இடையிடையே அது நாசித் துவாரங்களைச் சுட்டெரித்துக் கொண்டு நெடுமூச்சாக வெளியேறிக் கொண்டிருக்கிறது.

'என்ன நித்திரை வரேல்லையே!' அவன் கேட்பதற்கு நினைக்கிறான்.

'வேண்டாம். துயரங்களைத் தோண்டிப் பாக்கிறது. அது பெருகிக் கொண்டு இருக்கும்'

தன் மனத்தை அடக்கிக் கொண்டு, ஒரு விலகலில் தப்பித்துக் கொள்ள எண்ணுகிறான்.

'அகத்தியிலும் இலையில்லை!'

காலையில் கண்கலங்கிக் கொண்டு அவள் சொன்னாள். அப்போதுதான் அவன் கண்ணில் படுகிறது, வீட்டுக் கோடியில் நிற்கும் அகத்தி 'எக்ஸ்ரே' எடுப்பதற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சயரோகக்காரன் போல வெறும் கொப்பும் கிளையுமாக. முன்னரெல்லாம் தேடுவாரற்றுக் கிடந்த அகத்தி இலைகள், இன்று அவன் குடும்பத்து அரைகுறை உணவுக்குத் தொட்டுக் கொள்ளும் சம்பல்..... சுண்டல்..... தண்ணீர்ச் சொதி — ஆகமாறி மரம் மூழியாக நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் இன்று அந்த அகத்தியைப் போலத்தான். காதில் கிடந்த தோடும் கடந்த வாரம் கடைசியாகக் கழற்றி அவன் கையில் ஒப்படைத்து விட்டாள்.

ரஜனி இன்னும் அழுது கொண்டு கிடக்கிறது.

அதன் அவலக் குரல் அவன் வயிற்றிலிருந்து...... அவள் வயிற்றிலிருந்து...... ... குழந்தைகளின் வயிற்றிலிருந்து...... ... எழுந்து கொண்டிருப்பது போன்ற பிரமையில் அவன் துடிக்கிறன்.

அவனுக்கும் வாய்விட்டு அழ வேண்டும்போல மனத்திலே ஒரு உந்தல். ஏக்கத்துடன் அவளை நோக்குகிறன்.

அவள் விழிகள் அவன்மேல் பதிந்து அந்த இருளில் நீராகப் பளபளக்கின்றன.

'நான் இப்ப வாய்விட்டால்..... அவளையும் சேர்த்துக் கொண்டுதான் அழவேண்டி இருக்கும். சுதந்திரமாக அழுகிறதுக்கும் முடியேல்லையே!' என்று நினைத்துக் கொண்டபோது, எப்போதோ படித்து மனத்தில் பதிந்துபோன கவிதை ஒன்று நினைவில் மிதக்கிறது

''என்னை அழவிடு
என்னை அழவிடு
அன்னை என்னை
அழவே படைத்தாள்
வானம் அழுவது
மழையென்னும் போது;
வையம் அழுவது
பனியென்னும் போது;
கானம் அழுவது
கலையென்னும் போது;
கலைஞன் அழுவது
கவிதையாகாதோ!''

'...என்றல் நான் அழுவது .. என்னகும்? கண்ணீராகும், பசிக்கிற வயிறு கண்ணீரால் நிரம்புமெண்டால் நானும் அழலாம். இல்லையெண்டால் நான் எதுக்காக அழவேணும்? அழுகிறதாலே ஆகப்போகிறது என்ன?'

'ஆனல் ரஜனி அழுகிறது'

அது என்ரை பிள்ளைகளின்ரை செல்லப்பிராணி'

மூன்று வருடங்களுக்கு முன்னர் அரும்பாடுபட்டு வீட்டுக் கொண்டுவந்து சேர்த்தான். பிள்ளைகளுக்கு அப்போது உண்டான குதூகலம்! நீண்டகால ஆசை நிறைவேறிவிட்ட ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார்கள். அப்போது இதுக்குப் பெயர் ரஜனி அல்ல, வெறும் நாய்க்குட்டிதான். மொளு மொளு என்று பார்ப்பதற்கு மெழுகுப் பொம்மை போல.

அவனுடைய மூத்த மகன்; பத்து வயது நிரம்பியவன். அவனைப் பார்த்துக் கேட்டான்.

'அப்பா, இதுக்கு என்ன பெயர்?'

'நீ சொல்லன் பாப்பம்'

'நீங்கதான் நல்ல பெயராகச் சொல்லுவியள்'

சற்று நேரத் தேடலின் பின்னர் அவன் சொன்னன், 'வீமன்...... வீமன்'

'அப்பாவுக்கு ஒண்டும் தெரியாது. இது பழைய காலப் பெயர்'

மகன் கைதட்டிக் கேலியாகச் சிரிக்க ஆரம்பித்துவிட்டான்.

'வீமன் நல்ல தைரியசாலி. எல்லாரையும் துணிஞ்சு பாதுகாக்கிறவன். அவனைப் போலே தான் இதுகும் வீட்டைக் காக்கும்'

'நீங்கள் அந்த வீமனைக் கண்டனிங்களே?'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இல்லை'

'பாரதக் கதையிலே வாற வீமன்தானே! எங்கடை ஸேர் வகுப்பிலே சொன்னவர்'

'ஓமோம் அந்த வீமன்தான்'

'அந்த வீமன் இப்ப நல்லாக் கிழவனாகி இருப்பார். நான் சொல்லட்டுமே...... சோக்கான ஒரு பெயர்! இதுக்குப் பெயர்...... ரஜனி..... ஓடுமாம் ரஜனி'

'பாரதத்து வீமன் பழைசு சினிமா ரஜனி புதிசு'

அவன் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டான்.

அன்று முதல் குழந்தைகளின் உயிர்த் தோழன் இந்த ரஜனி. அவர்களோடு சேர்ந்து 'குடுகுடு' வென்று உருண்டோடும். விளையாடும். அதற்கென்று தினமும் ஆட்டுப்பால் விசேஷ உணவு. வாரந்தவறாமல் கடல் குளிப்பு. அழகுபடுத்தும் கழுத்துப்பட்டி.

அந்த ரஜனிதான் இன்று எலும்பும் தோலுமாக மெலிந்து போய்க் கிடக்கிறது. பளிங்குக் கண்கள் நீர்வடிந்து பஞ்சடைந்து கிடக்கின்றன. நாக்கு எப்பொழுதும் வெளியே தொங்குகிறது வயிறு முதுகுடன் நன்றாக ஒட்டிப்போய்க் கிடக்கிறது.

அவன் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் சம்பள உயர்வு கேட்டு வேலை நிறுத்தத்தில் குதித்தவர்களுள் ஒருவன். விலைவாசி உயர்வினால் வாழ்க்கைப் பளுவைத் தாங்கிக் கொள்ள இயலாதென்ற கஷ்டத்தினால் தானே வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள்! இவர்கள் உள்ள வேலையை இழந்தால்........?

இனிமேல் தனக்கு வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையே அவனுக்கில்லாது போய்விட்டது. வேலைதான் பறிபோய்விட்டது. வயிறுமா இல்லாது போய் விடும்?

எப்படியாவது வாழவேண்டுமே என்ற நிலைக்கு வந்தபோது தேங்காய் வியாபாரம் செய்தான். சாக்கு வியாபாரம் செய்தான். கருவாட்டு வியாபாரமும் செய்து பார்த்துவிட்டான். 'செட்டிக்கு வேளாண்மை ஜென்மத்துப் பகை' என்பார்கள். அவனுக்கு வியாபாரம் ஜென்மத்துப் பகையாக முடிந்தது. மனைவியின் கையிலே, கழுத்திலே கிடந்தவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக விழுங்கி ஏப்பம் விட்டது.

காலையில் வீட்டிலிருந்து இன்று கிளம்பி வெளியே சென்ற அவன், வழமைபோல எங்கெங்கோ எல்லாம் அலைந்தான். தன்மானம் என்பதைக் கைவிட்டு, 'பசி வந்திடப் பத்தும் பறந்திடும்' என்ற நிலையில் யார் யாரையோ எல்லாம் உதவிதேடி நாடினான். அவனுடைய களைத்த முகமும், பசித்த விழிகளும், கலைந்த கேசமும், அழுக்கடைந்த உடைகளும் கண்டு அவன் நண்பர்கள் என்று இருந்தவர்களே விலகி ஓட ஆரம்பித்து விட்டார்கள்.

மாலையாகி விட்டது. வீட்டில் குழந்தைகளும் அவளும் பட்டினி. வெறுங்கையோடு எப்படி வீட்டுக்குத் திரும்புவது? அங்கே போகாமலும் வேறு போக்கிடந்தான் ஏது?

அவன் வாடிச் சோர்ந்து வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

அடுக்களை வாசலில் அவனுடைய ஒன்றரை வயதுக் குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் கையில் சிறிய ஒரு பாண் துண்டு. மூத்தவர்களும் அவளும் அடுக்களைக்குள்ளே. அந்தப் பாண் துண்டைப் பார்த்தபோது அவன் வயிற்றில் பால்வார்த்தது போன்ற குளிர்ச்சி. கண்களில் நீர் முட்ட, வீட்டு வெளிப் படலைக்குள் அவன் சற்றுத் தாமதித்து நிற்கிறான். உள்ளே வருவதற்கு, அவனுக்குத் தன்னை அறியாத ஒரு தயக்கம்.

குழந்தைக்கு நேரெதிரே, விறுந்தைக்குக் கீழ் முன்னங்கால்களை நிலத்தில் ஊன்றி நிமிர்ந்து குந்தி இருக்கிறது ரஜனி. அவன் உள்ளே வருவதைக் கூட அது கவனித்ததாக இல்லை. வழமை போல எழுந்தோடி வந்து அவன் கால்களை நக்கவும் இல்லை. அதன் பசித்த பார்வை குழந்தையின் கையிலே உள்ள பாண் துண்டில் பதிந்து கிடக்கிறது. அதனுடைய தொங்கும் நாவிலிருந்து நீர் சொட்டிக் கொண்டிருக்கின்றது. இடையிடையே பரபரப்போடு வாலை மெல்ல ஆட்டிக் கொண்டிருக்கிறது.

குழந்தை பாண்துண்டை வாயில் வைத்துக் கடித்து இழுத்துவிட்டு, மிகுதியைக் கையில் பிடித்துக் கொண்டு அடுக்களைக்குள்ளே திரும்பிப் பார்க்கிறது.

அதுதான் சமயமென்று பார்த்திருந்த ரஜனி, 'அவக்' கென்று விறுந்தைமேல் பாய்ந்தேறி, குழந்தையின் பாண்துண்டைக் கௌவிக் கொண்டு ஓடுகிறது.

குழந்தை வீரிட்டுக் கத்துகிறது.

தாய் பதறிக் கொண்டு ஓடி வருகிறாள்.

அருகே கிடந்த தும்புக்கட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு, தயங்கி நிற்கும் ரஜனியை நோக்கிப் பாய்ந்து சென்று அதைப்போட்டு அடிக்கிறான்.

ரஜனி பாண் துண்டைக் கீழே போட்டுவிட்டு ஊளையிட்டு அழுதவண்ணம் கண்களில் நீர் வடியக் காலைத் தூக்கிக் கொண்டு வளவுக்குள் சுற்றி ஓடுகிறது.

நிலத்தில் விழுந்து கிடக்கும் அந்தப் பாண்துண்டை அவசர அவசரமாக அவள் கையில் எடுத்து, வாயினால் அதில் ஒட்டிக் கிடக்கும் மண்ணை ஊதி, பின் சேலைத் தலைப்பினால் துடைத்துவிட்டுக் கொண்டு திரும்பவும் அதைக் குழந்தையின் கையில் கொடுக்கிறாள்.

குழந்தையின் அழுகை அடங்குகிறது. அதற்கு மறுபடியும் பாண் கிடைத்து விட்டதான மகிழ்ச்சி, பாணை வாயில் வைத்து ஆவலுடன் கடித்துத் தின்றது.

அவள் குழந்தையை உள்ளே கொண்டு செல்லும் நோக்கத்துடன், அதைத் தூக்கிக் கொண்டு நிமிருகிறாள். அவன் நின்று கொண்டிருப்பது அப்பொழுதுதான் அவள் கண்களில் படுகிறது.

அவள் கண்கள் அவனை அறியாமல் உடைப்பெடுக்கின்றன, அவன் கண்களும் சேர்ந்து சொரிகின்றன.

அப்பொழுது அவர்கள் இருவருக்குமிடையே வந்து விழுந்த மௌனம். இன்னும் அது கலையவேயில்லை.

ரஜனி இப்போதும் அழுது கொண்டுதான் கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏழைக்கு நாய் ஒரு ஆடம்பரம். எங்கடை வயித்தையே நிரப்ப முடியாத எங்களுக்கு அது ஒரு பாரம். எங்களிட்டை என்ன கிடக்குது, நாய் வீட்டைப் பாதுகாக்கிறதுக்கு'

இப்போது அவளுடைய அசுமாத்தத்தைக் காணவில்லை. நாலு குழந்தைகள்; வயிற்றில் ஒன்று; அவன்; அவள் எல்லாருடைய வயிற்றுப் பசியும் அவளுக்குத்தானே! இந்தப் பசிக் கொடுமைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவளை விழுங்கிவிட்டன போலும்!

ரஜனி, அதற்கு உறக்கமே இல்லை. அது தொடர்ந்து அழுது கொண்டே கிடக்கிறது. பசி தீராத நோயல்லவா? இந்த நோய்க்கு மருந்துதான் என்ன?

தீராத நோயினால் அணு அணுவாகச் செத்துக் கொண்டு கிடப்பதைவிட...... உலக உத்தமர் — அஹிம்சா மூர்த்தி — மகாத்மா காந்தி. தீராத வலிப்பு நோயால் அவஸ்தைப் பட்டுக் கொண்டு கிடந்த கன்றுக் குட்டியை என்ன செய்தார்? நீரிலே மூழ்கடித்துக் கொன்றுவிடுமாறல்லவா பணித்தார்?'

அவன் இதயத்தையும் அந்தப் பயங்கர இரவின் அந்தகாரம் மூடுகிறது. இருளில் இதயம் பலவீனப்பட்டு அந்தரித்து...... தன்னுள்ளே ஒரு கொதிப்பு...... ஒரு வெறி...... இல்லை, காந்தியின் காருண்யம்...... தலை தூக்குகிறது.

அவள் படுக்கையை விட்டுத் திடீரென எழுகிறான். மாளாத பசிப்பிணியால் ஓயாது அழுது கொண்டு கிடக்கும் அந்த ரஜனியை......

'ரஜனி...... என் பிள்ளைகளிலே ஒண்டு. ரஜனியை என்ரால்...... என் பிள்ளைகளையுமா? ஐயோ......! நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லையே! என்னைப் போல வேலை இழந்த சிலர் குடும்பத்தோடை தற்கொலை செய்தார்களே. இந்த உணர்வு; இந்த வெறி வேண்டாம்......... வேண்டாம். வேண்டவே வேண்டாம்'

அவன் சோர்ந்து படுக்கையில் விழுகிறான். உடல் தளர்ந்து, உள்ளமும் களைத்து எப்படியோ உறங்கிப் போய்விடுகிறான்.

குழந்தைகளின் அழுகுரல் திரும்பவும் திடுக்கிட்டு அவனைக் கண்விழிக்கச் செய்கிறது.

பொழுது நன்றாக விடிந்து விட்டது. குழந்தைகளைப் பார்க்கிறான் பரபரப்போடு. படுக்கையில் அவர்கள் இல்லை. அழுகுரல் வீட்டுக்குப் பின்புறமிருந்து எழுகிறது.

அவன் எழுந்து ஓடுகிறான். அங்கே...... ரஜனி தலையையும் கால்களையும் எறிந்து கொண்டு நீட்டி நிமிர்ந்து நிலத்தில் கிடக்கிறது. அதன் திறந்த வாயிலும் மூக்கிலும் எறும்புகள் ஊர்ந்து கொண்டிருக்கின்றன.

குழந்தைகள் சுற்றி நின்று அழுகிறார்கள். அவர்களோடு சேர்ந்து அவளும் விம்முகிறாள்.

அவனாலும் கண்ணீரை அடக்க முடியவில்லை.

அவன் அங்கு வந்து தங்களோடு சேர்ந்து அழுதுகொண்டு நிற்பதைக் கண்டு, அவனுடைய மூத்த மகன் விம்மலுடன் சொல்லுகிறான்,

'அப்பா, பள்ளிக்கூடத்திலே அண்டைக்கொருவர் வந்து பேசினரப்பா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன பேசினவர்?'

'தனியொருவனுக்குணவில்லையெனில் — இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று சொன்னவர்'

'அதுக்கிப்ப என்ன?'

'ரஜனி பசியாலேதானே செத்துப் போச்சு!'

வாய் திறந்து 'ஆம்' என்று சொல்லுவதற்கு அவனால் முடியவில்லை. தலையை மட்டும் மெல்ல ஆட்டுகிறான்.

'அப்ப...... நாங்களும் ஒரு நாளைக்குப் பசியாலே......?

மகன் சொல்லி முடிக்கவில்லை, அவள் பதறிக்கொண்டு அவன் வாயைக் கையால் பொத்திக் கொண்டு 'கோ' வென்று கதறுகிறாள்.

தாயின் கரத்தை மெல்ல விலக்கி விட்டுக் கொண்டு அவன் கொதிப்போடு தகப்பனைப் பார்த்துக் கூறுகிறான்:

'அப்பா, எங்களையும் ரஜனியையும் சாப்பாடில்லாமல் சாகடிக்கிறவை. அவையளை நாங்கள் கொல்ல வேணும். நாங்கள் கொல்லுவம், நாங்கள் வளர்ந்தாப்போலே கொல்லுவம்...... கட்டாயம் கொல்லுவம். எங்களைப் போல ஒரு நாய் கூடச் சாப்பாடில்லாமல் சாகவிடமாட்டம். இந்த ரஜனியாணை சத்தியமப்பா'

அவன் தன் கண்களில் வடிந்து கொண்டிருந்த நீரைத் துடைத்துவிட்டுக் கொண்டு, கண்களிலே புதிய ஒளியும் உள்ளத்திலே வைரம் பாய்ந்த உறுதியுமாக வாஞ்சையோடு மகனை இறுகக் கட்டி அணைத்துக் கொள்ளுகிறான். ●

---

## பாரப்புரத்து கூறியவை

மலையாள இலக்கிய கர்த்தாக்களில் பெரும் புகழ் பெற்றவர் பாரப்புரத்து. ஒரு சந்தர்ப்பத்தில் அவர் கூறியவை:

எழுதுவது பொறுக்க முடியாத வேதனையைத் தருவதொன்றாகும். என்னை ஓர் எழுத்தாளனாக இல்லாமல் ஐ. ஏ. எஸ். ஆபீஸராக இருக்க விரும்புகிறீர்களா என்று கேட்டால் நான் ஒரு செகண்டு கூட யோசிக்காமல் எழுத்தாளனாகவே இருக்க விரும்புகிறேன் என்று கூறிவிடுவேன். விமர்சகர்கள் கூறுவதெல்லாம் நியாயம் என்று எழுத்தாளன் கருதுவது கிழவனும் மகனும் சேர்ந்து கழுதை சுமந்த கதையாக முடியும். துன்பத்துக்கு அப்பால் வாழ்க்கையில் உறுதியுடன் நிற்பதற்கு ஒரு வழி காண்பது தான் எனது இலட்சியம்.

## தேக்கம் என்பது அறியாமை

சிறுகதைப் படைப்பில் சமீப காலமாக ஒரு தேக்கம் ஏற்பட்டுள்ளதாகக் கூறுவது சிறுகதை என்றால் என்ன என்று தெரியாதவர்களின் கூற்று என்றே நான் கருதுகின்றேன். தங்களிடம் நாலு காசு இருந்தால் உலகில் எல்லோரும் வசதியாக இருப்பதுபோன்ற பிரமையும், தங்களிடம் காசில்லை என்றால் இது பணக் கஷ்டமான காலம் என்ற கருத்தும் உள்ளவர்களை ஒத்தவர்கள் அவர்கள்— சிறுகதை விவாதத்தில் கு. அழகிரிசாமி கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார்

## ஆஸ்திகன் — முற்போக்காளன் — பொதுவுடைமையாளன்

க. அருணசலம்

பாரதி வெறுமனே முற்போக்குக் கருத்துக்களைக் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் வெளிப்படுத்தியதோடமையாது தமது சொந்த வாழ்க்கையிலும் அவற்றைப் பின்பற்றினர். அவை பற்றி இச் சிறு கட்டுரையில் விளக்குதல் இயலாது. அவரது வாழ்க்கை வரலாறு பற்றி வெளிவந்த பல நூல்களில் அவை பற்றி விரிவாக அறியலாம் அறியாமையிலும் மூட நம்பிக்கைகளிலும் மக்கள் ஊறிப் போயிருந்த அன்றைய நிலையில் முற்போக்குச் கருத்துக்களைச் சொல்லளவில் மட்டுமல்லாது செயலிலும் கடைப்பிடித்த பாரதியார் அவற்ருல் அடைந்த துன்பங்கள் சொல்லுந்தரமன்று.

எடுத்துக்காட்டாக ஒரு சிறு சம்பவத்தை மட்டும் இங்கு குறிப்பிடலாம். பாரதியார் சிலகாலம் கடையத்திலே தமது மைத்துனர் வீட்டிற் குடும்பத்துடன் தங்கியிருந்த போது பிராமணரின் போலி ஆசாரங்களுக்கு மதிப்பளிக்காது நடந்து கொண்டார் என்பதற்காக அவரை அக்கிராமத்தினுள் நுழையவிட மறுத்தனர்; பாரதியாரின் மனைவி உணவு பரிமாறுவதையும் தடுத்து நிறுத்தினர். அதனுல் மூன்று நாட்கள் பட்டினி கிடந்த பாரதியாருக்கு ஒரு உழவனே உணவளித்தான். மூன்று நாட் பட்டினியின் பின் உணவுண்ட பாரதிக்கு உணவு ஒத்துப் போகாமையால் உண்ட உணவை உடனே வாந்தியெடுத்து மிக வருந்தினுர். சிறிய மனிதர்களின் அற்பத்தனமான செய்கைகளாற் பாரதியார் தமது வாழ்நாளில் இதுபோன்ற எத்தனையோ நாட்கள் மனம் வெதும்பினுர்; நெஞ்சு கொதித்துக் குமுறினுர். இந்து சமூகத்திற் காலம் காலமாக நிலவி வந்த சமூக, சமயக் கொடுமைகளுக்கும், பிற்போக்குத்தனங்களுக்கும் எதிராக வாழ்நாள் முழுவதும் தமது சொந்த வாழ்விலேயே மூர்க்காவேசம் கொண்டு வெறியுடன் போராடியவர் பாரதியார்.

ஓர் இலக்கிய கர்த்தாவிடம் குடிகொண்டிருக்கும் மனித நேயம், முற்போக்குச் சிந்தனைகள் அவற்றின் பரிணும வளர்ச்சி அவ் இலக்கிய கர்த்தாவைச் சோஷலிஸத்திற்கு இட்டுச் செல்லும். முற்போக்கு வாதியாகத் திகழும் ஒருவன் பொதுவுடைமையை அவாவுதல் இயல்பே. பாரதியிடமும் இப்போக்கினை நாம் தெளிவாகக் காணலாம். வெறுமனே குருட்டாம் போக்கான போலி ஆஸ்திகனுக அல்லாது மக்கள் நலனிற் பேரார்வம் கொண்ட ஆஸ்திகனுகவும், தலைசிறந்த முற்போக்கு வாதியாகவும் திகழ்ந்த பாரதியார் இந்த நூற்ருண்டின் விடியலிலேயே பொதுவுடைமை மலர்ச்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாவசியத்தைத உணர்ந்து அதனை இதய சுத்தியுடன் மனம்மார வாயாரப் பேரானந்தப் பரவசத்துடன் வரவேற்றுப் பாடிய இந்திய முதற் பெருங் கவிஞனுகவும் விளங்குகின்முர். பாரதியின் சம காலத்தவராக விளங்கிய மகாகவி தாகூர், பாரதியாரின் பின்பே காலங்கடந்து (அவரது சோவியத் பயணத்தின் பின்) பொதுவுடைமையை வரவேற்றுப் பாடினுர். பொதுவாகப் பாரதியாரின் பாடல்கள் முழுவதிலும் அங்குமிங்குமாக ரஷ்யப் புரட்சியின் செல்வாக்கும், பொதுவுடைமைக் கருத்துக்களும், இலைமறை காயாகக் காணப்படுகின்றன. ஆயின் புதிய ருஷ்யா, பாரத சமுதாயம், விடுதலை, சுதந்திரப் பள்ளு, முரசு முதலிய பகுதிகளில் பொதுவுடைமையின் சிறப்புகளையும் பாரத சமுதாயத்தில் அது மலரவேண்டியதன் இன்றியமையாமையையும் விரிவாக வற்புறுத்திப் பாடியுள்ளார். பாடல்களில் மட்டுமல்லாது 'இந்தியா' பத்திரிகையிலும் (இப்பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகளின் இரு தொகுப்புகளாக 'பாரதி தரிசனம் முதலாம் பாகம், இரண்டாம்பாகம் ஆகியன வெளிவந்துள்ளன. தொகுப்பாசிரியர் இளசை மணியன்; பாரதி தரிசனம்: நியூ செஞ்சரி புக்ஹவுஸ்: சென்னை, 19 5 — 1977) பிறவற்றிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த அவரது கட்டுரைகள் பலவற்றிலும் உருவகச் சித்திரங்களிலும் ஞானரதம், சின்னச் சங்கரன் கதை முதலியவற்றிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் இக்கருத்துக்களை விளக்கியுள்ளார். 'மண்ணுலகத்து மானிடன் தன்னைக் கட்டிய தளையெலாம் அறுக' என வேண்டிய பாரதியார் 'தனியொருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம். மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ? மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ? இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன். எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில் யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும். முப்பது கோடியும் வாழ்வோம் வீழில் முப்பது கோடியும் முழுமையும் வீழ்வோம்' என்றெல்லாம் ஆவேசக் குரல் எழுப்புகின்முர்.

இவ்வாறு ஆவேசக் குரல் எழுப்புவதுடனமையாது ரஷ்யாவில் நடந்தேறிய அக்டோபர்ப் புரட்சியின் மாபெரும் சக்தி, மனுக்குல வரலாற்றில் அதன் முக்கியத்துவம் அதனுல் எதிர்காலத்தில் உலகுக்கேற்படவிருக்கும் பெருந்நன்மைகள், ரஷ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கி நடத்திய லெனின் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மத்தியில் நிகழ்த்திய சாதனைகள் முதலியன பற்றியெல்லாம் தமது ஆக்கங்களிலே தெளிவாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் விளக்கியுள்ளார். மாபெரும் அக்டோபர்ப் புரட்சி 1917 ஆம் ஆண்டு இடம் பெறுவதற்கு முன் அதற்கு முன்னேடியாக 190 ம் ஆண்டிலும் ரஷ்யாவில் புரட்சி ஒன்று நடந்தேறியது. கூர்ந்தமதியும் தீர்க்க தரிசனமும் வாய்க்கப்பெற்ற பாரதியார் 905 ஆம் ஆண்டு நடந்தேறிய புரட்சியின் முக்கியத்துவத்தையும் எதிர்கால விளைவுகளையும் மிக உன்னிப்பாகக் கூர்ந்து கவனித்துத் தாம் நடத்திவந்த 'இந்தியா' பத்திரிகையில் அவற்றைப் புகழ்ந்து 1906 ஆம் ஆண்டிலேயே பல கட்டுரைகளை எழுதினுர். எதிர்காலத்தில் ஜாரின் கொடுங்கோன்மை அகற்றப்பட்டு ரஷ்யாவில் புது யுகம் மலரும் என்பதை 1906 ஆம் ஆண்டிலேயே தீர்க்க தரிசனமாகத் தெரிவித்திருந்தார். அக்டோபர் புரட்சி இடம் பெற்ற பின் அதனை யுகப் புரட்சி எனக் குறிப்பிட்டு 'புதிய ருஷ்யா'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தலைப்பிற் பல பாடல்களைப் பாடியதுடன் பல கட்டுரை களையும் எழுதினர். அவற்றிலிருந்து பாரதியார் பொதுவுடைமை மலர்ச்சியிலும் ரஷ்யப் புரட்சியிலும் அதனை நடத்திய மாமேதை லெனின் மீதும் கொண்டிருந்த அபாரமான ஈடுபாடு அளவுகடந்த நம்பிக்கை முதலியவற்றை அறிய முடிகின்றது, பாரதியார் தரம் கனவு கண்ட கிருதயுகத்தின் மலர்ச்சியாகவே ரஷ்யப் புரட்சியைக் கண்டார். மார்க்ஸின் தத்துவத்தை அடியொற்றிப் புரட்சியை நடத்தி வெற்றி பெற்ற பின் புதிய ரஷ்யாவைக் கட்டியெழுப்பும் அரும்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்க மாமேதை லெனினைக் குறிப்பிடும் கட்டங்களில் எல்லாம் பாரதியார் அவரை 'ஸ்ரீமான் லெனின்' எனக் கூறுவதும் லெனின் அனுபவித்த கொடுமைகள் வேதனைகளுக்காகப் பரிந்துரைப்பதும், லெனின் மீது அவர் வைத் திருந்த உயர்ந்த மதிப்பையும் நம்பிக்கையையும் புலப்படுத்து கின்றன.

பாரதத்திலே தமது காலத்தில் — இன்றும் கூட — நிலவிய சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏனைய பலவகைப்பட்ட பிரச்சினைகள் முதலியவற்றுக்குச் சிறு சிறு சீர்திருத்தங்கள் பூரண பலனை அளிக்கமாட்டாது என்பதையுணர்ந்த பாரதியார் அவை யாவற்றுக்கும் பொதுவுடைமை மலர்ச்சியின் மூலமே விடிவு காண முடியும் எனப் பூரணமாக நம்பினர். இதனை வற்புறுத்திப் பாடல் களை இயற்றினர், கட்டுரைகளை எழுதினர், முப்பது கோடி ஜனங் களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை — வாழ்க என முரசறைந்தார்: சைவ சித்தாந்தத்திலே பிறந்து வளர்ந்து அதிலேயே ஊறித் திளைத்த திரு. வி. க வும் பாரதியாரைப் போன்றே பாரதத்தின் சகல பிரச் சினைகளுக்கும் பொதுவுடைமை மலர்ச்சியின் மூலமே விடிவுகாண முடியும் எனப் பூரணமாக நம்பியதுடன் மார்க்ஸீயத்தின் மேன்மை பற்றியும் பொதுவுடைமையின் இன்றியமையாமை பற்றியும் விரி வாகக் குறிப்பிட்டுள்ளார். திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்; பாகம் — 1, 2; 1961, இந்தியாவும் விடுதலையும்) ஆஸ்திகராகவும் முற்போக்கு வாதியாகவும் மாக்ஸீயவாதியாகவும் தொழிற் சங்க வாதியாகவும் விளங்கிய திரு வி. க. விடம் எவ்விதக் கொள்கைக் குழப்பமும் இருந்ததாகத்தெரியவில்லை. கால்மார்க்ஸைப் பலவாறெல் லாம் புகழ்ந்து போற்றிய திரு. வி. க. அவரது தத்துவத்திற் கண்ட ஒரே ஒரு சின்னஞ் சிறிய குறை; 'மாக்ஸியம் முழுமையதா? குறையுடையதா? எதிலும் குறையுண்டு. மாக்ஸியத்திலும் சிறு குறையுண்டு; என்ன குறை? அதன் கண் 'சத்' என்னுஞ் 'செம் பொருள் சேர்ந்தால் அது நிறைவுடையதாகும்' எனக் கூறியுள் ளார். இதுவரை நோக்கியவற்றிலிருந்து பாரதியார் ஆஸ்திகம், முற்போக்கு, பொதுவுடைமை ஆகியவற்றின் சங்கமமாக விளங்கி ஞர் என்பதும் இவைபற்றி அவருக்கு எவ்விதக் குழப்பமும் இருந்த தில்லை என்பதும் உலகியல் வாழ்வையும் உலகியல் இன்பங்களையும் போற்றும் தூய இறை நம்பிக்கையாளனுகவும், தலைசிறந்த முற் போக்கு வாதியாகவும் திகழ்ந்த பாரதியார் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளிலான மக்களின் விடுதலைக்கு வழி சிவலோகமோ வைகுண்டமோ அல்ல, பொதுவுடைமை மலர்ச் சியே என்பதிற் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதும் புலப்படும்.

யாராவது மாக்ஸிசம், முற்போக்கு, பொதுவுடைமை என்று பேசத் தொடங்கினல் உடனே இன்றைய சமயச் சநாதனிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலித் தொண்டர்களும் இந்துமத தமிழ்ப் பாதுகாவலர்களும் அப்பாவி மக்களின் உழைப்பை ஈன இரக்கமின்றிச் சுரண்டிக் கொழுக்கும் சோற்றுத் துருத்திகளும் வரிந்து கட்டிக் கொண்டு, எங்கள் தமிழ் இலக்கியங்களை நீர் அறிந்ததில்லையா? சங்கச் சான்றோர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனவும் எமது வள்ளுவப் பெருந்தகை 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான்' எனவும், கவிச் சக்கரவர்த்தி கம்பன் 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ' எனவும் அருளியுள்ளதை நீர் கேட்டுமிரீரோ? உங்களுடைய பாரதியும் மாக்சும் அப்படி என்ன புதிதாகக் கூறியுள்ளார்கள் எனப் பெரும் மேதாவித்தனமாக அகங்காரம் பேசித் தமது போலித்தனத்தை வள்ளுவனுக்கும் கம்பனுக்கும் பின்னால் மறைத்துக் கொள்கிறார்கள். ஆயின் பாரதியார் இவர்களைப் போன்ற நயவஞ்சகப் பிறவியல்லர். உண்மை எங்கிருந்தாலும் எவரிடமிருந்தாலும் அவற்றை உளமார வரவேற்கும் பண்புடையவர். தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் கம்பராமாயணத்திலும் எப்பொருளும் உள எனச் சுயதிருப்தி தேடும் இத்தகைய ஆந்தைப் பிறவிகளை நோக்கியே அன்று பாரதியார் 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' எனக் கடுமையாக ஆணையிட்டார். இன்றைய சோற்றுத் துருத்திகளிலும் பார்க்கப் பாரதியே வள்ளுவனையும் இளங்கோவையும் கம்பனையும் இதய சுத்தியோடு உச்சிமேல் வைத்துப் போற்றினார். அத்துடனமையாது மாமேதை லெனின் தலைமையில் நடந்த ரஷ்யப் புரட்சியின் சிறப்பினை உலகமெல்லாம் கேட்கும்படி உச்சஸ்தாயிலிற் புகழ்ந்து பாடினார். கம்பனும் வள்ளுவனும் கனவு கண்ட அதே இலட்சியத்துக்கு ஏற்ற வழிவகைகளையும் செயல் முறையையும் விளக்கத்தையும் தர்க்க ரீதியாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் விளக்கி, வெறுங் கனவு எனக் கருதப்பட்டு வந்தவற்றை நனவாக்கிக் காட்டுவதற்கும் உலகில் முதன் முதல் தெளிவான வழி சமைத்தவன் மாக்ஸ். அவன் காட்டிய வழியில் நடந்தேறிய பொதுவுடைமைப் புரட்சியே ரஷ்யப் புரட்சி. அதனையே புது நெறி காட்டிய மெய்ஞானியும் சமூக ஞானியுமான பாரதியார் வாயார நாவார வானுறக் கம்பீரக் குரலிற் புகழ்ந்தார். பாரதியாரின் பின்பு வந்த பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், ரகுநாதன், கே. சி. எஸ். அருணாசலம், ஏ. தெ. சுப்பையன், ஈழத்துக் கவிஞர்கள் சிலர், சிறுகதை, நாவல் எழுத்தாளர்கள் முதலியோரது ஆக்கங்களிற் பாரதியாரிலும் பார்க்க ஆழமான தெளிந்த வர்க்கப் பார்வையும் மாக்ஸீயக் கண்ணோட்டமும் இடம்பெற்றுள்ளமை உண்மையே. ஆயின் இவர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பாரதியாரே. இன்று மாக்ஸியவாதிகளும் பூரண சர்வோதய வாதிகளும் ஏன் ஆஸ்திகர்களும் கூடப் பாரதியாரின் கருத்துக்களை வரவேற்கின்றனர்; போற்றுகின்றனர். அந்த அளவிற்குப் பாரதியார் முரண்பாடுகளின் குவியலாகவன்றி ஆஸ்திகம், முற்போக்கு, பொதுவுடைமை ஆகியவற்றின் சங்கமமாக விளங்குகின்றார். பாரதி நூற்றாண்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையிலாவது பாரதியாரின் ஒப்பற்ற இலட்சியங்களைச் பேச்சளவில் அல்லாது நடைமுறையிற் செயற்படுத்துவது அத்தியாவசியமானது. அதுவே நாம் பாரதியாருக்கு அளிக்கும் ஒப்பற்ற மதிப்பாகும்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாய விமானமும்

# அரபு மண்ணும்

ச. முருகானந்தன்

எல்லாம் முற்றுகிவிட்டது. விசா கிடைத்து விட்டது. ஜொப் காட் வந்து விட்டது. விமான டிக்கெட்டும் கிடைத்து விட்டது. நீண்ட நாள் கனவுகள் எல்லாம் நனவாகப் போகிறது.

நாளை நள்ளிரவு பிளேனில் பறக்கப் போகிறேன். இன்று கொழும்புக்குப் போக வேண்டும், பயணம் அனுப்ப வீட்டில் நண்பர்கள் பட்டாளமே கூடி நின்றது. அம்மாவும் அக்காவும் நண்பர்களுக்கு சுவீட்ஸ், பானம் முதலானவற்றைப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். அப்பா மகிழ்ச்சியுடன் வருவோரை உபசரித்து குதூகலமாக உரையாடிக் கொண்டிருந்தார். ஏனைய சகோதர சகோதரிகள் முகத்திலும் குதூகலம்.

எமது சின்ன வீடு இடம் கொள்ளாமல் நண்பர்கள் உறவினர்கள் முற்றத்திலும் நின்றிருந்தார்கள். இன்னும் இரண்டு வருடங்களில் எமது குச்சு வீடு கல்வீடாக மாறிவிடும். சோபா செட், டீ வீ, பான்ஷோ கேஸ் எல்லாம் ஹோலில் இருக்கும். அக்காவும் தங்கைகளும் இன்னும் அழகாக உடையணிந்திருப்பார்கள். ஒருவேளை அக்காவின் கலியாணம் கூட முடிந்துவிடும்— எனது குதூகலத்தில் கற்பனைகள் சிறகடிக்கவும் தவறவில்லை.

புறப்படும் நேரமாகிவிட்டது

'எங்களை மறந்திடாதே மச்சான்......'

'கடிதம் போடு மச்சான்...'

'இரண்டொரு மாதத்திலே நானும் அங்கே வந்துவிடுவேன்'

'அங்கே பெட்டையளின்ர முகத்தையே காண முடியாதாம்'

இப்படி பலவிதமான அபிப்பிராயங்கள், வேண்டுகோள்கள், உரையாடல்கள்!

கொடிகாமம் புகையிரத நிலையம் வரை போவதற்கு நண்பன் ஒருவன் — ஹயரிங் கார் வைத்திருப்பவன் — இலவசமாகவே கார் கொண்டு வந்திருந்தான்.

நண்பர்கள் இருவர் சூட்கேஸைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து டிக்கியில் ஏற்றிஞர்கள். கைக் குட்டையால் முகத்தைத் துடைத்தபடி கைக் கடிகாரத்தைப் பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஐந்தரை மணியாகி விட்டிருந்தது. இனிப் புறப்பட வேண்டியதுதான்.

எல்லோருக்கும் பயணம் சொன்னேன். அம்மாவும், அக்காவும், தங்கைகளும் அழுதே விட்டார்கள். எனக்கும் நெஞ்சை அடைத்தது. ஊரை விட்டு வேறு நகரங்களில் கூட வேலை பார்த்தறியாத நான் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் வேலைக்குப் போகிறேன். அதுவும் இரண்டு வருட கொன்ருக்ட்; இடையில் லீவு கிடையாது. பிரிவுத் துயர் ஏற்படுவதற்கு இதற்கு மேல் காரணமும் வேண்டுமா? ஆனாலும் வறுமையில் வாடுகின்ற என் குடும்பத்திற்கு வசந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்கப் போகிறேன் என்பதில் எனக்குள்ளே ஆத்ம திருப்தி.

தம்பி யோகானந்தனும், என்னுடனே கொழும்புக்கு பயணம் அனுப்ப வருகின்ற கணேசனும், வேறு சில நண்பர்களும் காரில் ஏறிக் கொண்டார்கள். கொடிகாமத்தை வந்தடைந்த போது நேரம் ஆறேகால். ரயிலுக்கு நேரம் இருந்தது.

நண்பர்கள் 'பாட்டி' என்ருர்கள். எனக்கிருந்த மகிழ்ச்சியில் மறுக்க முடியவில்லை. தேநீரும், சுவீட்ஸூம் அருந்தியதில் ஆறு பேருக்கு ஐம்பத்திரண்டு ரூபா சொச்சம் பில் வந்தது. இன்றைய மன நிலையில் பெரிதாகத் தோன்றவில்லை.

டிக்கட் எடுத்தாகி விட்டது. உள்ளே போகப் பெட்டியைத் தூக்க வேண்டும். போட்டரைத் தேடியபோது நண்பர்கள் தடுத்து விட்டார்கள். இரண்டு நண்பர்கள் பெரிய சூட்கேஸை முக்கி முனகித் தூக்கிக் கொண்டு போனுர்கள்.

ரயில் வந்தது. விழுந்தடித்து ஏறி சீற் பிடித்துத் தந்தார்கள். பச்சைக் கொடியுடன் போட்டி போட்டுக் கொண்டு நண்பர்களின் டாட்டா...... சேரியோக்கள்! அன்றைய கதாநாயகனை நான் அனைவருக்கும் கைகாட்டிப் புன்னகையுடன் விடை பெற்றேன்.

மறுநாள் கொழும்பு — கட்டுநாயக்கா — கஸ்டம்ஸ் செக்கிங் எதிலுமே தடங்கல் இருக்கவில்லை. விமானத்திலும் தாமதம் இல்லை.

ஆயிற்று.

இன்னும் சில நிமிடங்களில் உயரப் பறக்கப் போகின்றது. இந்தப் பயணம் சமுதாயத்தில் என்னை உயர்ந்தவனுக்கப் போகின்றது.

விமானம்......... விமானப் பணிப் பெண்களின் பணிவிடைகள்...... விமானப் பயணம் எல்லாமே எனக்குப் புதிய அனுபவங்கள். சின்ன வயதிலே எத்தனையோ தடவைகள் விமானப் பயணம் செய்ய ஆசைப் பட்டதுண்டு. எட்டாத கனியாக. எண்ணியே பார்க்க முடியாதிருந்த விமானப் பயணமும் இதோ நனவாகின்றது.

குலுக்கலுடன் எழுந்த விமானம் தரையிலிருந்து மெல்ல மெல்ல எழுந்து, உயரச் சென்று சீரான வேகமடைந்து.......

இப்போது ஆட்டம் அசைவில்லை. அறுநூறு மைல் வேகத்தில் பறந்து கொண்டிருக்கிறதாம்! நம்ப முடியவில்லை.

விமானப் பணிப் பெண் சுவீட்ஸூம் குளிர்பானமும் கொண்டு வந்து தந்தாள். கூடவே மகிழ்ச்சியான புன்னகை!

மனது குதூகலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து போன காலங்கள் மனத்திரையில் வந்து போயின. கூலிக்கார அப்பா, அப்பம் சுட்டு விற்கும் அம்மா, அடுக்கடுக்காய் பிறந்துவிட்ட ஆறு சகோதரங்கள்...... நிதமும் வறுமையுடன் போராடி அரைவயிறும், பொட்டல் உடுப்புகளுமாய் திரிந்த காலங்கள் கண்ணுக்குள் தெரிய, 'ஓ...... கடவுளே...... நீ கருணையுள்ளவன். இல்லாவிட்டால் இந்த ஏழைக்கு இப்படி ஒரு வாய்ப்பு.........? என் மனதில் உருகினேன்.

மௌனத்தில் புதைந்து கண்களை மூடிக்கொண்டிருந்த எனது நெஞ்சத்தில் நான் கடந்து வந்த பாதைகள்...... அதிலே தெரியும் அடிச்சுவடுகள்...... பாதத்திலேற் பட்ட கொப்பளங்கள்.........

வறுமையிலும் கவனமாகப் படித்து, பலவிதப் போட்டிகளைத் தாண்டி, தரப்படுத்தல்கள் போன்ற தரைப்படுததல்களை எல்லாம் முறியடித்து, பல்கலைக் கழகம் சென்று, பாதி பாங் லோனிலும், மீதி அம்மாவின் நகைகளின் அடமானத்திலுமாகப் படித்து முடித்து இனிய பல கனவுகளைச் சுமந்த படிபட்டதாரியாக பல்கலைத் கழகத்தால் வெளியேறி, எதிர்காலத்தைப் பற்றிய இனிய கற்பனைகள் எல்லாம் நடைமுறையில் வெறும் கனவாக இருக்கக் கண்டு.........

என்னுடைய தகுதிக்கு ஏற்ற படி எனக்கு ஒரு வேலை கிடைத்து விடும் என்று நான் கட்டியிருந்த கோட்டைகள், மூன்று வருடமாக நான் முயன்றும் பலனளிக்காமல் போகவே, எல்லாம் தரை மட்டமாகி......

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சை அடைக்கிறது.

'இவன் இன்ரவியூவுக்குப் போய்வரச் செலவளித்த காசில மூத்தவளின்ர கலியாணத்தையே நடத்தியிருக்கலாம்? அப்பா ஒரு நாள் சொன்ன வார்த்தைகள் இப்பொழுதும் நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருக்கிறது!

ஓ...... நான் போய்வந்த இன்ரவியூக்கள்தான் எத்தனை யெத்தனை? போட்ட அப்பிளிகேசன்களுக்கு எண்ணிக்கையே இல்லை! எத்தனை தடவைகள் எம். பீயின் வீட்டுக்கு, தொழில் வங்கிக்குப் போய் வந்திருக்கின்றேன். என்னுடைய தகுதிக்கு ஏற்றபடி இல்லாவிட்டாலும் ஒரு சிறு வேலையாவது கிடைக்காதா? கடனில் மூழ்கும் என் குடும்பத்திற்கு உதவி செய்ய முடியாவிட்டாலும் பாரமாக வாவது இருக்காமல் விடலாமே என்று கூட எண்ணி இறுதியில் அதுவும் கிடைக்காமல்.........

காசும் அணைவும் இருந்த ஜீ. சீ. ஈ. காரர்கள் கூட பாங்கிலும், ஆஸ்பத்திரியிலுமாக பெரிய பதவிகளைத் தட்டிக் கொண்டு போக, நானும் என் போன்ற ஏழைகளும் போக்கிடம் எதுவுமின்றி.........

பாழ்பட்ட இந்த உலகின் யதார்த்தங்களைச் சந்தித்தபோது மனதிலே இருந்த பசுமையான நம்பிக்கைகள் யாவும் சிதைந்து போக.........

இறுதியாக வெளிநாட்டு மோகம் ஏற்பட்டு, அந்த முயற்சிகளில் இறங்கி, ஆறேழு மாதங்களாக கொழும்புக்கும் ஊருக்குமாக அலைந்து, கடைசியாக எல்லாம் வெறும் கனவாகிப் போய் விட்டதாக இருந்த் வேளையில் தான், எப்பொழுதோ ஓர் ஏஜென்ரிடம் கொடுத்த விண்ணப்பத்திற்குப் பதில் வந்திருந்தது. அதுவும் தந்தியில்!

'திங்கட் கிழமை பயணத்திற்குத் தயாராகவும்' அதைத் தொடர்ந்து விபரமான முடிவும், அதன் உள்ளடக்கம் இதுதான்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய அரபுக் குடியரசில் அப்துல்லா மில்லில் லேபரர் வேலை. மாதச் சம்பளம் ஐயாயிரம் ரூபா! இருப்பிடம் வசதி இலவசம்!! உணவு இலவசம்!!!

எமது நாட்டில் பெரிய உத்தியோகத்தில் இருந்தால் கூட ஒரு வருடத்தில் சேமிக்க முடியாத தொகை! நான் எவ்வளவு அதிஷ்டசாலி! அம்மா, அப்பா, சகோதரங்கள் அனைவருமே பூரித்துப் போயினர்.

இறுதியாக எம்மிடம் மிச்சமாக இருக்கும் ஒரேயொரு சொத்தான எமது வீட்டையும் காணியையும் ஈடு வைத்துத்தான் இந்தப் பயணத்திற்குத் தேவையான பதினையாயிரம் ரூபாவைத் திரட்ட முடிந்தது. ம்...... அதனால் என்ன? இன்னும் நாலே மாதத்தில் கடனை அடைத்து விடலாம்!

எனது மனதிலே இப்போது சுமைகள் இல்லை. கவலை இல்லை. குதூகலம், எங்கும் குதூகலம்.

விமானம் இன்னும் கால் மணி நேரத்தில் அரபு மண்ணில் தரை தட்டும் — அறிவித்தல் ஒலிக்க உள்ளம் குதூகலித்தது.

விமானம் தரையில் இறங்கியது. வெளியே வந்தேன். இதே கொம்பனியில் வேலை செய்ய அறுபது பேர் இலங்கையிலிருந்து வந்திருந்தோம். முன்பு முகம் தெரியாதவர்கள், இனி இந்த மண்ணில் ஆத்ம நண்பர்களாகப் போகின்றவர்கள்.........

எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக இறங்கி, ஊர்வலம் போவது போல், அடேயப்பா! எவ்வளவு பெரிய விமான நிலையம்! நம்ம கட்டுநாயக்காவைப் போல பல மடங்கு பெரிதாக இருந்தது.

கஸ்டம்ஸ் செக்கிங் முடிந்தது.

வாசலுக்கு வந்தோம்.

எம்மை வந்து 'மொகமத்' என்பவர் சந்திப்பார் என்று இலங்கையில் கூறப் பட்டிருந்தது. விசாரித்தோம். நாம் கேட்பது அவர்களுக்குச் சரியாகப் புரியவில்லை, அவர்கள் சொல்வதையும் எம்மால் கிரகிக்க முடியவில்லை. ஆனால் அவர்களும் ஆங்கிலத்தில்தான் பேசினோம்.

நியமனக் கடிதத்தைக் காட்டினோம். அவர்களுக்கு ஓரளவு புரிந்தது. தமக்குள்ளே கலந்துரையாடினார்கள். சில இடங்களுக்கு டெலிபோன் செய்தார்கள், தற்காலிகமாகத் தங்க ஒரு ஹோலைக் காட்டினார்கள்.

மொகமத் வரவில்லை.

எங்கள் மனதில் ஆயிரம் கேள்விகள். நெஞ்சு திக் என்றது. 'ஏமாற்றுப்பட்டு விட்டோமா?'

மாலையில் பொலிஸார் வந்தார்கள். எமது நியமனக் கடிதத்தைப் பரிசீலித்தார்கள் முடிவு.........!

அப்படி ஒரு கொம்பனி அந்த நாட்டிலே இல்லையாம். 'அப்துல்லா மில்' எங்கேயும் இல்லையாம். போலி நியமனக் கடிதங்களாம்.

உச்சி மீது வானிடிந்து வீழ்ந்தது. சிலர் மூர்ச்சியானார்கள்! நகையை விற்று, காணியை விற்று, ஓ.....!

தூதராலய உதவியினால் இரண்டு நாட்களுக்குப் பின் இலங்கைக்கு மறுபடியும் பயணமானோம். இனி எந்த முகத்துடன் போவது? கடனுக்கு என்ன செய்வது? கேள்விக்கணைகள்!

நாம் கண்டதெல்லாம் அரபு மண்ணும் ஆகாய விமானமும் தான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்திப்புக்கள் கசக்கின்றன

திக்குவல்லை கமால்

பரீட்சகர்!

பெரிய காரியம்தான். இவ்வளவு காலத்துக்கும் பிறகு எனக்கும் அதற்கான தகுதியுண்டென சம்பந்தப்பட்டவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்களே!

நியமனக் கடிதம் இன்று தான் கிடைத்தது. ஆகப் பத்து நாள் உத்தியோகம்தான்.

கிடைக்கிறது கொழும்பில பத்து நாளக் கடத்திறதுக்கே காணாது. ஏக்கத்தை மனதுக்குள் மறைத்து, முன்பெல்லாம் கேட்பவர்களுக்கு சொல்லிவந்த காரணம் இது.

'படிப்பிக்கிற எங்களுக்குக் கொஞ்சம் உதவியாக இருக்குமில்லையா?' இனி யாராவது கேட்டால் இப்படித்தான் சொல்ல வேண்டும்.

சேட், லோங்ஸ், சீப்பு, சோப்பு எல்லாவற்றையும் விட, இருநூற்றி ஐம்பது ரூபா போல பணம். மனம் திட்டம் போட்டது. அமுலாக்கல் அப்புறம் தானே.

ஒருவகையில் மகிழ்ச்சி. பள்ளிக்கூடம், வீடு. பள்ளிவாசல் என்ற சுற்றுவட்டத்துக்கு அப்பால் சில நாட்கள்... நினைக்கவே நிம்மதியாக இருந்தது.

பழைய புதிய நண்பர்களை, தெரிந்தவர்களை நீண்ட இடைவெளிக்குப் பின் சந்திக்கலாமே! இதுவரை காலமும் ஆசிரியர் தொழிற்சங்க வருடாந்த மகாநாடுகள் அப்படியான சந்தர்ப்பங்களை எனக்கு ஏற்படுத்தின. இப்பொழுது ஜீ. ஸீ. ஈ. (சா. த.) புள்ளியிடல் நிலையமும் அத்தோடு கைகோர்த்துக் கொண்டது.

•

முதலாம் நாள்—

நிலைய மண்டபத்துக்குள் நிறைந்திருந்தோர் மத்தியில் முன் அனுபவம் இல்லையென்பதை மற்றவர் புரிந்து கொள்ளாத படி, அங்கும் இங்குமாய் நடமாடி கழுத்தை நீட்டி, காதைத் தீட்டி, ஒருவாறு எனது குழு இலக்கத்தைக் கொண்ட சிலரோடு ஐக்கியமாகிக் கொண்டேன்.

பிரதம பரீட்சகரின் பின்னால் விடைப்பத்திர பண்டல்களைச் சுமந்து கொண்டுபோய் எமக்குரிய அறையை அடைந்தபோது பரிச்சயமில்லாத பிறநாட்டு மொழிபெயர்ப்பு நாவலொன்றின் முதல் அத்தியாயத்தைப் படித்து முடித்தது போன்ற திருப்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை விளக்கங்கள். பிரதிகளின் எண்ணிக்கை, சுட்டிலக்கம் சரிபார்ப்பு முதலான ஆரம்ப அலுவல்களை முடித்து நிமிர்ந்தபோது கண்கள் கூசின.

சிறுநீர் கழித்து, தேநீர் நுழைக்க வேண்டும் போலிருந்தது. அதற்கென்ன? கட்டுப்பாடுகளென்ற பயமுறுத்தல்கள் எதுவும் தெரியவில்லை. புரிந்து கொள்ளல்தான்:

கென்ரீனைத் தேடிப்பிடித்து, ஒருவாறு உள்ளே புகுந்தபோது...

'ஹலோ...... என்ன ஞாபகமில்லயா?'

'அடடா... ... முஸ்தாக் மாஸ்டர்'

பத்து வருடங்களுக்கு முன்பு எனக்கு அவர் படிப்பித்தவர் அல்லவா?

விசாரிப்பு, மகிழ்ச்சி. தேநீர்.

'எந்தப்பக்கத்து பேப்பேர்ஸ் உங்களுக்குக் கிடச்சிருக்கு?'

இதென்ன கேள்வி? எந்தப் பக்கமாக இருந்தால்தான் என்ன?

'இன்னும் பார்க்கல்ல ஸேர்'

'அப்படியா? என்ற மருமகன் ஒருவனும் சோதின எழுதிஞன். அதனுலதான் கேட்டன். ஒருக்கா ஸெண்டர் நம்பரப் பார்த்துச் சொல்லுங்க'

'ம்.. ... சொல்றன்'

அப்போதைக்கு விடைபெற்றுக் கொண்டேன். சந்திப்பு எனக்கு சப்பென்று போயிற்று. அவரும்கூட ஒரு பரீட்சகர் அல்லவா.

•

இரண்டாம் நாள் -

மிகக் குறைந்த வேகத்தில் தான் திருத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விடைகள் இன்னும் மனப்பதிவாகவில்லை. போதாக் குறைக்கு அடிக்கடி மாற்றங்கள் பற்றிய அறிவிப்பு.

'ஸ்க்ரிப்ட்ஸ் செக் பண்ணின பிறகு படபடென்று தட்டிக் கொண்டு போகலாம்' பக்கத்தே அமர்ந்திருந்த அனுபவசாலியொருவர் சொன்னுர்:

இருந்தாற்போல ஜன்னலை மறைத்து வெளிச்சத்தை ஓரளவு தடை செய்தாற்போல ஓர் உருவம். நிமிர்ந்து பார்த்தேன்.

ஜெகதீஸ்!

மெல்ல எழுந்து வெளியே வந்தேன்.

'என்னடா உள்ள குந்திக் கொண்டிருக்கிற'

'முதல் தடவயா வந்திருக்கன். அதுதான். இப்ப எங்க பழைய இடமா? மாற்றம் எடுத்திட்டியே?'

'மாற்றமா! கிடச்சாப்போல தான். அதுக்கென்ன இன்னும் கல்யாணம் கட்டேல்லதானே'

பலாலி பயிற்சிக் கலாசாலை தந்த சமகால நண்பன்தான் அவன்.

'வேற யார் நம்மட பெஜ்மெட்ஸ் வந்திருக்காங்க?'

'கனபேர். காதர், கஸ்ஸாரி, சந்திராணி, நீ இன்னும் ஒருவரையும் காணல்லியே'

'சிரித்தான்'

'ம்..... ஒருக்கா சுத்திப் பாக்க வேண்டியிருக்கு. இந்த நம்பேர்ஸ் ஒருக்கா உம்மட பெனல்ல பாருமன்'

அவன் தந்த துண்டில் நாலைந்து சுட்டிலக்கங்கள்.

'என்னடப்ப அப்பிடி யோசிக்கிற. எல்லாரும் செய்றதுதானே'

அவன் மிகமிக ஸிம்பிளாக சொல்லிவிட்டு நகர்ந்தான். பெனலிலும் தேடிப் பார்க்கட்டுமாமே!

'ஓ..... நம்மட ஃபைனல் ஸேடிப்பிகேட் கொலெஜுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டதை, யாரையாவது சந்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் கேட்க வேண்டுமென்றிருக்கேன். அதுகூட மறந்துபோய் விட்டதே'

கையில்தந்த துண்டு சுருண்டு காலடியில் விழுந்தது.

●

மூன்றும் நாள் —

திருத்தும் வேகம் சுமாராகிக் கொண்டிருந்தது. ஆனால் மற்றவர்களோடு ஒப்பீடுகையில் மிகவும் குறைவுதான். போதாக் குறைக்கு எஞ்சிக் கிடக்கும் பண்டல்களால் ஒரு பங்கு கிடைக்குமா என்ற நப்பாசை அது யாரைத்தான் விட்டது.

இடைக்கிடை நேரத்தை விழுங்கும் தேநீர் நண்பர்கள். தெரிந்தவர்கள்கூட தொல்லைகளாகவே தெரிந்தார்கள். நேரகாலத்தோடு முடித்தால் இரண்டொருநாள் முந்தியும் போய் விடலாமாம்!

லஞ்சுக்கு வெளிக்கிட்ட போது, வியர்க்க விறுவிறுக்க புன்னகையோடு ஓ...... என்னை நோக்கித்தான்.

'ஸரூக், என்ன மச்சான் எவ்வளவு காலத்துக்குப் பிறகு. ஆ.. முடியெல்லாம் விழுந்து'

உண்மையிலேயே அபூர்வ சந்திப்பு. பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஸாகிராவில் படித்தவன். கலை — விஞ்ஞானப் பிரிவுகளில் வெவ்வேறுகப் படித்ததால், பயிற்சிக் கலாசாலையும் கூட சந்திக்கும் சந்தர்ப்பத்தைத் தரவில்லை.

'நான் தேஸ்டனில இஸ்லாம் திருத்திறன். யாரும் வந்திருப்பாங்களோவென்று பாக்கவந்தன். ஆனு உன்ன காணக்கிடைக்குமென்று நம்பவேயில்ல மச்சான்.

'சரி, என்ன விசேஷங்கள்?'

'எல்லாம் அப்பிடியப்பிடித்தான். மச்சான் என்ட தங்கச்சி ரெண்டாம் முறைறா ஸிட் பண்ணியிருக்காள். மன்னுர் பேப்பெரெல்லாம் இங்க வந்திருக்கிறதா கேள்வி. ஸயன்ஸ் மெக்ஸ் பார்த்திட்டா போதும். இதில நம்பர் இருக்கு. உம்மட ஃபிரன்ஸ் ஸெல்லாம் வந்திருப்பாங்கதானே பெரிய உதவி மச்சான். திரும்ப நாளக்கி வர்ரனே!

ஸரூக்கிற்கு பேசுவதற்கே நேரம் போதவில்லை. ஒன்றும் கிட்டாத வேட்டைக்காரன் போன்ற வெறி.

இப்படி எத்தனை பேர்களோ. விஷப் பரீட்சையாகத் தானிருந்தது.

●

இப்பொழுது திருத்த வேலை தவிர வேறு எவரையும் காண்பதே எனக்குப் பிடிக்கவில்லை. எங்கோ, எப்பொழுதோ பழகியவர்களை மீண்டும் இங்கு காண்பதன் மூலம், இருந்துவரும் நல்ல பிப்பிராயம், மரியாதை கூட சிதைந்துவிடுமோ எனப் பயந்து விட்டேன்.

மாணவர்களின் விடைகளைத் துருவித் துருவிப் படித்து எப்படியாவது முடிந்தளவு புள்ளிகளை இடவேண்டுமென்பதை. பிரதம பரீட்சகர் அடிக்கடி வலியுறுத்திக் கொண்டிருந்தார்.


வெளியே பேச்சுக் குரல்கள்.

முஸ்தாக் மாஸ்டர், ஸரூக், ஜெகதீஸ் இவர்களது குரல்கள் போல! இவர்களோ, இவர்களைப் போன்ற வேறு எவருமோ அப்பக்கம் வந்துவிடக் கூடாது என்று என்மனம் பிரார்த்தித்துக் கொண்டது.

நானொரு பரீட்சகர் அல்லவா?

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திறனாய்வாளர்

# க. கைலாசபதி

கே. எஸ். சிவகுமாரன்

சமகாலத் தமிழ் இலக்கியப் போக்கில் ஈழத்தவர் ஆற்றிவரும் பங்கு முக்கியமானதாகவும், முன்னோடியாகவும் அமைவதை தமிழ் பேசும் நல்லுலக இலக்கிய மாணவர் மாத்திரமன்றி, தமிழியல், தமிழிலக்கியம் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள பிறமொழியறிஞரும் அறிவர்.

அத்தகையோர் ஆற்றிவரும் பங்குகள் அனைத்தையும் விரிவாக எழுதவேண்டும். அதற்கு முன்னர் பெயர்கள் அடிப்படையிலும், இலக்கியக் கோட்பாடுகள் அடிப்படையிலும், இயக்க அடிப்படையிலும், கால அடைவு அடிப்படையிலும், மற்றும் அம்சங்களின் அடிப்படையிலும் பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும். பட்டியல்கள் தயாரிப்பது அப்படியானதோன்றும் குறைவானதல்ல, ஆராய்ச்சிக்கு முன்னர் தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும். தகவல்களும், தரவுகளும் பற்றி விமர்சகனுக்கு மட்டுமல்ல பல்கலைக்கழக விமர்சகனுக்கும் அவசியம்.

எனவே, இக் கட்டுரையிலே பங்காற்றிவரும் ஈழத்தவர்களில், விமர்சனம் அல்லது திறனாய்வுத் துறை சம்பந்தமாகச் சில முக்கிய பணியைச் செய்துள்ள ஒருவர் பற்றி, அவர் எழுதியுள்ள நூல்களைக் கொண்டு மாத்திரம் (நூல்வடிவில் இடம் பெறாத அத்தனை கட்டுரைகள், விரிவுரைகள், பேச்சுக்கள் போன்றவற்றையும் கணக்கெடுப்பின், இவ்விமர்சனக் கட்டுரை விரியுமென்றஞ்சி அவற்றை விடுத்துள்ளேன்) இங்கு ஆராய முற்படுகிறேன்.

பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி பற்றியே இன்று கணிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இவர் பல்கலைக்கழக ஆசிரியராக மட்டுமன்றி, பத்திராதிபராகவும், திறனாய்வாளராகவும் நின்று ஈழத்துச் சமகால இலக்கியத்துக்கும், தமிழ் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம் ஆகிய துறைகளுக்குமாகப் பல்வேறு நிலைகளில் நின்று புத்தாக்கம் பயக்கும் புதுமை நெறிகளைச் சுட்டியும், வழி காட்டியும் தொழிற்பட்டுள்ளார்.

இந்த விமர்சனக் கட்டுரையில், நூலாசிரியராக அவர் திறனாய்வுத் துறைக்காற்றிய பண்பு நெறிகளே உணர்த்தப்படுகிறது.

கைலாசபதி கடந்த கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் விமர்சனக் கட்டுரைகளை எழுதி வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறர். இவருடைய கட்டுரைகள் அடங்கிய நூல்கள் வருமாறு:

இரு மகா கவிகள், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், கவிதை நயம் (முருகையனுடன் இணைந்து எழுதியது) இலக்கியமும் திறனாய்வும், பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், திறனாய்வுப் பிரச்சினைகள், மக்கள் சீனம் காட்சியும் கருத்தும், சமூகவியலும் இலக்கியமும், நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்.

இந்நூல்கள் அனைத்தும் பற்றிய அறிமுக ரீதியான ஆய்வு வேண்டப்படாதாகையால், இவற்றுள் முக்கியமான சில நூல்களை மாத்திரம் கணிப்புக்கு எடுத்துக் கொள்வோம். அதற்கு முன்னர்—

கைலாசபதி இலக்கியக் கோட்பாடுகள் பற்றி அண்மைக் காலமாகப் பலரும் விமர்சித்தே வருகின்றனர். குறிப்பாக இந்தியாவில் வெங்கட் சாமிநாதன், 'படிகள்' என்ற சிற்றேட்டினர், 'அலை' என்ற ஈழத்துச் சிற்றேட்டினர், மற்றும் சிலர் கைலாசபதிக்குரிய இடத்தைச் சந்தேகிக்காவிட்டாலும், அவருடைய தீவிர இலக்கியக் கோட்பாடுகள் மாறிவரும் போக்குகளில் செல்லாக் காசாகின்றன என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

கைலாசபதியின் இலக்கியக் கோட்பாடுதான் என்ன? அவரே கூறுகிறுர்:

'கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக நான் எழுதி வெளியிட்டிருப்பவற்றைப் பார்க்கும் பொழுது, அவையெல்லாம் ஏதோ ஒரு வகையில் சமுதாயத் தொடர்பமைவு உள்ளனவாய் இருக்கக் காண்கிறேன். திறனாய்வுத் துறையில் முக்கிய கவனஞ் செலுத்தத் தொடங்கிய காலம் முதல் கலை இலக்கியம் முதலியவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியிலும், சமுதாயச் சூழலிலும் வைத்தே ஆராய்ந்து வந்திருக்கிறேன். மார்க்சியத்தைத் தழுவிக் கொண்ட நாள் முதலாக, அதன் முனைப்பான கூறுகளில் ஒன்றாகிய சமூகவியலை எனது பல்வேறு ஆய்வுகளுக்குப் பற்றுக் கோடாகக் கொண்டு வந்துள்ளேன். சமூகவியலில் உண்டாகிய ஈடுபாடே ஒப்பியல் ஆய்வுக்கு என்னை இட்டுச் சென்றது. இவற்றின் பயனாக இலக்கியத்தை அறிவியல் அடிப்படையில் அணுகக் கற்றுக் கொண்டேன்'

இலக்கியத்தில் சமூகவியலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு விமர்சகராகவும், மார்க்சீயத்தைத் தழுவியவராகவும் கைலாசபதி தன்னை இனம் காட்டிக் கொள்கிறுர். எனவே இலக்கியக் கொள்கைகள் பலவற்றில் ஒன்றாகிய சமுதாயக் கொள்கையை கைலாசபதி அனுஷ்டிக்கிறுர் என்பது தெளிவாகிறது.

எனவே கைலாசபதியின் இலக்கியக் கொள்கையை முற்றாக ஏற்றுக் கொள்ளாதோர், அவருடைய விமர்சன முறையை ஆட்சேபிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவ்வாறு எதிர்ப்பவர்கள் காரணமின்றி எதிர்க்கவுமில்லை. மார்க்சீய விமர்சனமுறை, இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட விமர்சன அணுகு முறைகளில் ஒன்று. ஆனால் அது மாத்திரமே ஒரேயொரு சரியான பார்வையுடைய விமர்சன முறையுமன்று. கைலாசபதி என்ன செய்கிறுர் என்றால், சமுதாயப் பார்வையை எதிர்ப்பவர்களாக ஏனைய பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையவர்களை ஒதுக்கிவிடுகிறார். உதாரணமாக அழகியலும் இலக்கியத்துடன் இணைந்ததுதான் என்று கூறுபவர்கள், சமுதாயப் பார்வைக்கு எதிரானவர்கள் என்று தப்பாகக் கைலாசபதி கணிக்கிறார். இங்குதான் அவருடைய பலவீனம் தெரிகிறது.

உதாரணமாக, இலக்கியமும் திறனாய்வும் என்ற தமது நூலிலே அவர் இவ்வாறு எழுதுகிறார்: 'தூய அழகியல் வாதத்துக்கு எதிர் விளைவாகவே சமுதாயக் கொள்கை நடைமுறையில் செயற்படுகிறது எனலாம்' இவ்வாறு கூறும் கைலாசபதி நான்கு விதமான திறனாய்வுக் கொள்கைகளை (அனுகரணக் கொள்கை, பயன்வழிக் கொள்கை, வெளிப்பாட்டுக் கொள்கை, புறநிலைக் கொள்கை) விவரித்துவிட்டு 'தற்காலத் தமிழிலக்கியத் திறனாய்வுப் போக்குகள் என்று பிற்சேர்க்கையில் வருமாறு எழுதுகிறார்;

'அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய, மிகக் குறைந்த அளவு திறனாய்வும் நோக்கும் போக்கும் தமிழில் இன்னும் கெட்டியாக உருப்பெறவில்லை. இது எமது கவனத்துக்கும் சிந்தனைக்கும் உரிய செய்தியாகும்'

இத்தகைய தாராளப் போக்கை பின்பற்றும் பேராசிரியர், திறனாய்வாளர் கைலாசபதி சமுதாயக் கொள்கைக்கு அழுத்தம் கொடுத்து (அழுத்தம் கொடுப்பது சரி; மற்றக் கொள்கையாளர் எல்லோரையுமே ஒரே வார்ப்பில் 'அழகியல் வாதிகள்' என்று கூறுவதுதான் சரியில்லை) விமர்சிப்பதுதான் சற்று மாறாகத் தென்படுகிறது.

திறனாய்வாளர் கைலாசபதியின் முரண்கள் எவ்வாறிருப்பினும், அவருடைய ஆங்கில கிரேக்க இலக்கியப் புலமை, தமிழ் விமர்சனத்திற்கு செழுமையூட்டியிருப்பதையும் வெறும் 'நயங்காணல்' அல்லது 'இரசனை வெளிப்பாடு' போன்ற ஆரம்ப நிலையிலிருந்த தமிழ் திறனாய்வை சுமார் இருபது இருபத்தைந்து வருஷங்களுக்குள் அவர் சாஸ்திரீக ரீதியாக நெறிப்படுத்தியிருப்பதையும் மறுக்க முடியாது. இவருடன் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் குறிப்பிடத்தக்கவராவர்.

மார்க்சீயக் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, இந்த இரு மார்க்சீய விமர்சகர்களையும் தள்ளிவிட்டு ஈழத்து இலக்கிய விமர்சனமோ பொதுவாக தமிழ் இலக்கிய விமர்சனமோ வளர முடியாது.

பெங்களூரிலிருந்து வெளியாகும் 'படிகள்' என்ற இலக்கியச் சிற்றேடு பேராசிரியர் கைலாசபதி பற்றி, பெப்ரவரி 1981 இதழில் கூறியிருப்பது ஒரு முக்கியமான அவதானிப்பாகும்.

''வெறும் அபிப்பிராயங்கள் தமிழகத்தில் விமர்சனமாக இருந்த சூழலில், ஓர் உலுக்கு உலுக்கி விமர்சனம் விஞ்ஞான அடிப்படைகளில் செய்யப்பட வேண்டும் என்றும், அபிப்பிராயங்களாக இருந்த விமர்சனம் சமூகவியல் குணங்கள் கொள்ள வேண்டும் என்றும் மிக வன்மையாக ஓங்கிப் பேசிய கவர்ச்சியான குரல் கைலாசபதியினுடையது'

பேராசிரியர் கைலாசபதி சமகால இலக்கியப் போக்கில் ஆற்றிவரும் பங்கைக் கணிப்பது போன்று, பேராசிரியர் சி. கி. மறைமலை எழுதிய 'இலக்கியத் திறனாய்வு ஓர் அறிமுகம்' என்ற நூலில் எழுதிய வாசகம் அமைந்துள்ளது: 'கைலாசபதியின் பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை அறிவும், பரந்த கல்வியும், அவரது திறனாய்வுக்கு தனி மெருகு அளிக்கின்றன. கைலாசபதியின் கருத்தை ஏற்க மறுப்போரும் அவரது தருக்கவியல் அணுகு முறையைச், செய்திகளைக் கோவைப்படுத்தி, அவற்றில் நிறை குறைகளை ஆய்ந்து கொள்வன கொண்டு கொள்ளாதன தள்ளி, திட்டவட்டமான ஒரு உரைக்கும் அறிவியற் பாங்காறு வழி முறையைப் பாராட்டவே செய்வர்.

ஒப்பியல் இலக்கிய ஆய்வுத் துறைக்குக் கால்கோல் நாட்டிய பெருமையொன்றே கைலாசபதியின் முக்கியத்துவத்தை உணர வைக்கும். பல்லவர் கால இலக்கியம் பற்றியும், நாவல் பற்றியும், பாரதி பற்றியும், க. நா. சு. பற்றியும், கவிதை பற்றியும் புதுமையான கருத்துக்களைக் கைலாசபதி தெரிவித்திருக்கிறார். இவை ஆராயத்தக்கனவாயினும் விமர்சகரின் தற்புனைவான சிந்தனைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 'புத்திலக்கிய விமர்சகர்கள் பலருக்கும் அவர் ஆதர்சமாக விளங்குகிறார்' என்பதில் ஐயமில்லை. சங்க இலக்கியம் முதல் புதுக் கவிதை வரை, செல்வக் கேசவராய முதலியார் முதல் சிவகுமாரன் வரை, வ. வெ. சு. ஐயர் முதல் இன்றைய சிறுகதையாசிரியர்கள் வரை, பிரதாப முதலியார் சரித்திரம் முதல் இன்றைய நாவல்கள் வரை, மனோன்மணியம் முதல் இன்றைய முற்போக்கு நாடகங்கள் வரை அவர் பரவலாக யாவற்றையும் பண்டித மேதாவித் தனத்துடனும், நவீனத்துவ மார்க்சீயப் பார்வையுடனும் விமர்சித்திருக்கிறார்'

கலாநிதி தி. சு. நடராஜன் (தமிழ் இலக்கிய விமர்சகர்கள் — கட்டுரைத் தொகுப்பு — 1979) கூறியிருப்பது போல, 'கைலாசபதி கல்வி நெறி மரபில் ஆய்வறிவாளராகவும். அதே நேரத்தில் விமர்சனப் பாங்குடையவராகவும் விளங்கிகிறார்.

சமகாலத் தமிழ் இலக்கியமும், கைலாசபதியின் திறனாய்வும் பிரிக்க முடியாதவை. ●

மல்லிகை

## சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா 28 — 00
[மலர் உட்பட]

தனிப்பிரதி 2 — 00

இந்தியா, மலேசியா 35 — 00
(தபாற் செலவு உட்பட)

MALLIKAI
Editor: Dominic Jeeva
234B, K.K.S. Road,
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்மை, சுவை, நம்பகமானவளைக்கு

போன்றவைகளையே தெரிந்து வாங்குங்கள்

பேர்ட் பேக்கிங் பவுடர்

பேர்ட் ஜெலி கிறிஸ்டல்

பேர்ட் கரர்ட் பவுடர்

தயாரிப்பாளர்:

**BIRD INDUSTRIES**

81, சாந்த திரேசா மாவத்தை-

கந்தானை

அச்சுக் கலை ஓர் அருமையான கலை.

அதை அற்புதமாகச் செய்வதே நமது வேலை.

கொழும்பில் அற்புதமான அச்சுக் வேலைகளுக்கு
எம்மை ஒரு தடவை அணுகுங்கள்.

35422

நியூ கணேசன் பிரிண்டர்ஸ்

22, அப்துல் ஜப்பார் மாவத்தை,

கொழும்பு — 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

பாரதி சிறப்பிதழ் படிக்கக் கிடைத்தது.

கைலாசபதி அவர்களுடைய கட்டுரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. உங்களுடைய கட்டுரையில் இளந் தலைமுறையினர் படித்துத் தெரிந்து கொள்ளத் தக்க எத்தனையோ விதமான தகவல்கள் கிடைக்கப் பெற்றன. மற்றும் பல எழுத்தாளர்கள் முயன்று பல புதிய தகவல்களையும் கருத்துக்களையும் தந்துள்ளனர்.

சிறப்பிதழை இன்னும் அதிக பக்கங்களுடன் வேறு பலரது கட்டுரைகளையும் ஒருங்கு இணைத்து அமைத்திருந்தால் இன்னுஞ் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

இருந்தும் நமது நாட்டின் தனித்துவத்தைப் பேணும் வகையில் சிறப்பிதழ் அமைந்ததற்காக வாழ்த்துக்கள்.

நெல்லியடி.

ம. ராஜசேகரன்

---

உங்களைப் புடைப்பு எழுத்தாளன் என்றுதான் கடந்த காலத்தில் எண்ணியிருந்தேன். ஆனால் நீங்கள் சில ஆண்டுகளாக எழுதும் பல்வேறு கட்டுரைகளைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்ட பின்னர் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் உங்களுக்குள்ள ஆழ்ந்த அறிவையும் புலமையையும் பார்த்து அதிசயப்படுவதுண்டு.

பாரதி இதழில் நீங்கள் எழுதிய நீண்ட கட்டுரையைப் படித்ததின் பின்னர் உங்களுக்கு இதை எழுதுகின்றேன்: எங்களுக்கு நீங்கள் தந்த பல தகவல்கள் உண்மையிலேயே தெரியாதது. கடந்த காலத்தில் இப்படியான இலக்கியப் பிரச்சினைகள் நடந்தன என்பதை அறிந்து வைத்திருப்பதே ஒரு தேவையல்லவா?

மற்றும் பலரது கட்டுரைகளும் அருமையானவை. உயர் கல்வி கற்கும் மாணவர்கள் இச் சிறப்பிதழைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என அவர்களுக்குச் சொல்லத் தோன்றுகின்றது.

மொத்தமாகச் சொல்லப் போனால் உங்களது பத்திரிகைத் துறை வளர்ச்சியைப் பார்க்கக் கூடியதாகவுள்ளதுடன் மல்லிகையும் ஆக்க பூர்வமாக வளர்ந்து செழிப்பதையும் உணர முடிகிறது.

கீரிமலை

க. நவசீயன்

---

உண்மையைச் சொல்லப் போனால் பாரதி சிறப்பிதழில் உங்களது கட்டுரையைப் படித்துப் பார்த்ததும் மலைத்துப்போய் விட்டேன். மிக அழகான விஷய அடக்கம் கொண்ட தரமான கட்டுரை. தொடர்ந்தும் இப்படியான கட்டுரைகளை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன்.

கைலாசபதி அவர்களுடைய கட்டுரையில் ஒரு தனித்துவம் மிளிர்கின்றது. பக்கங்களைக் கூட்டி விலையையும் கொஞ்சம் அதிகரித்து இச் சிறப்பிதழை வெளியிட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. மல்லிகை புதுப் பொலிவுடன் இப்பொழுது திகழ்கின்றது.

கொழும்பு - 6.

க. ராஜ்சுந்தரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற ஏப்ரல் இதழில் அட்டைப் படமாக வெளியிட்டுள்ள சிந்துபூந்துறை அண்ணாச்சி சண்முகம் அவர்கள் பற்றி வல்லிக் கண்ணன் எழுதிய கட்டுரையைப் படித்துப் பார்த்தேன்.

நானும் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவன்தான். பல ஆண்டுகளுக்கு முன்னரே வியாபார நிமித்தமாக இலங்கை வந்து விட்டேன். அந்தக் காலத்திலேயே அண்ணாச்சி அவர்களினுடைய பொது ஜன சேவை பற்றியும் கொள்கைப் பிடிப்புப் பற்றியும் படித்து அறிந்ததுடன் தெரிந்தவர்கள் வாய்மொழி மூலம் சொல்லக் கேட்டுமிருக்கிறேன்.

ஆனால் அண்ணாச்சி அவர்களைப் பற்றி இலங்கையில் இப்படியாக ஒரு சஞ்சிகை அட்டைப் படம் போட்டு அவரைக் கௌரவித்துப் பெருமைப்படுத்தும் என நான் நம்பவில்லை. ஒரு நண்பர் மூலம் இதை அறிந்து மல்லிகையைக் கொழும்பில் வாங்கிப் படித்துப் பார்த்த பொழுதுதான் இந்தத் தகவல்களே எனக்குத் தெரிய வந்தன.

மல்லிகை ஒரு இலங்கைச் சஞ்சிகை மாத்திரமல்ல. அது தமிழ் கூறும் நல்லுலகின் பொதுச் சஞ்சிகையுமாகும்.

நீங்கள் அடிக்கடி தமிழகம் போய் வருவதாய் செய்திகளில் படித்திருக்கிறேன். இப்படிப் போய் வரும்போது அங்கு இலைமறை காயாக இருக்கும் அறிஞர் பெருமக்களை இனங் கண்டு இங்குள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்த முயற்சியுங்கள்.

தமிழகத்திலுள்ள எந்த முற்போக்குச் சஞ்சிகைகளின் அட்டைப் படங்களிலும் கூட, சிந்துபூந்துறை அண்ணாச்சியின் உருவம் இது வரை பதிக்கப் பட்டிருக்கவில்லை என நினைக்கின்றேன்.

அந்த ஒரு பெருமையே மல்லிகையின் வருங்காலச் சரித்திரத்திற்கு உதவும்.

முன்னரும் வல்லிக்கண்ணன், வானமாமலை போன்றோரை அட்டைப் படமாகப் போட்டுக் கௌரவித்ததாக அறிந்திருக்கின்றேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

இப்படியான இலட்சியச் சஞ்சிகை நடத்துவதில் உங்களுக்கு ஏகப்பட்ட சிரமங்கள் இருக்கலாம். இத்தனை கஷ்டங்களையும் தனி ஒரு மனிதராக ஏற்று இலங்கை இலக்கிய உலகில் காலூன்றி நிற்பதற்கே தனித் திறமை வேணும்.

கொழும்புக்கு வரும்போது ஏதாவது பொது நிகழ்ச்சியில் நீங்கள் கலந்து கொள்வதாயிருந்தால் அங்கு கண்டிப்பாக வந்து உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.

கொழும்பு - 12. — எஸ். கோவிந்தராஜன்

---

வெகு விரைவில், பாரதி விழாவுக்காக ரகுநாதன் இலங்கை வருவார். நண்பர் சிவத்தம்பி தஞ்சையில் சில மாதங்கள் ஆய்வாளராகப் பணிபுரிவார் என்று விஜயபாஸ்கரன் கூறினர். நீங்கள் இவ்வாண்டு டிசம்பரில் பாரதி நூற்றாண்டின் நிறைவு விழாவுக்குச் சென்னை வருவீர்கள் என நம்புகிறேன்,

மல்லிகையின் தரம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது. மல்லிகையின் ஆசிரியர், ஆதரவாளர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

சென்னை. — தி. க. சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைபலக் குறைப்புக்கு சோவியத் யூனியன் தயார்

எஸ். கோஸ்லோவ்

சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் படைபலக் குறைப்புக்காக ஒரு ஆஸ்திரேலிய ஸ்தாபனத்தின் கடிதத்திற்குப் பதிலளித்த சோவியத் ஜனாதிபதி படைபலக் குறைப்பு சம்பந்தமாக சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கும், இத்துறையில் எந்த வித ஆக்க பூர்வமான யோசனைகளையும் செயல்படுத்தவும் சோவியத் யூனியன் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி ரீகன் மற்றும் சோவியத் தலைவருக்கு அனுப்பப் பட்ட அக் கடிதத்தில் கண்டுள்ள பிரச்சினைகளுக்குப் பதிலளித்த பிரஷ்னேவ், படைபலக் குறைப்பில் உறுதியான முடிவுகளை எட்டு வதற்கான சோவியத் முயற்சிகளை நினைவு கூர்ந்ததுடன், அம் முயற்சிக்ளுக்கு அமெரிக்காவின் தலைமையில் சில நாடுகள் மேற் கொண்ட எதிர் முயற்சிகளையும் சுட்டிக் காட்டினார்.

அணு ஆயுத உற்பத்தி மற்றும் அவற்றைப் பெறுவதைக் கண்டனம் செய்யும் நாடுகள் மற்றும் அத்தகைய ஆயுதங்களைத் தமது பிரதேசத்தில் வைத்திருக்காத நாடுகளுக்கெதிராக அணு ஆயுதங்களை உபயோகிப்பதில்லை என்ற தனது கொள்கையை சோவியத் யூனியன் உறுதிப்படுத்தியுள்ளது. அணு ஆயுதங்கள் வைத்திருக்காத நாடுகளுடன் ஒரு ஒப்பந்தத்தினடிப்படையில் தகுந்த உத்தரவாதம் அளிக்கவும் சோவியத் யூனியன் தயாராக இருப்பதுடன், இதர அணு ஆயுத வல்லரசுகளையும் இதே போன்ற உத்தரவாதம் அளிக்கவும் கோருகிறது.

அணு ஆயுதங்களை முதலாவதாக உபயோகிக்கும் நாடுகள் மனித இனத்திற்கெதிராக மிகப் பெரிய குற்றம் செய்தவைகளாகும் என்று கூறும் ஒரு பிரகடனத்தை, சோவியத் முன்முயற்சியால் ஐ. நா. பொதுச்சபையின் 36 வது கூட்டத் தொடர் ஏற்றுக் கொண்டது. இத்தீர்மானத்தை அமெரிக்காவும் அதன் நெருங்கிய கூட்டாளிகளும்தான் ஆதரிக்கவில்லை. புதுவிதமான தாக்குதல் ஆயுதங்களை தயாரித்துப் பரவலாக நிறுத்தி வைக்கும் தனது திட்டங்களுக்கு அத்தீர்மானம் இடையூறாக இருக்கும் என்று வாஷிங்டன் திட்டவட்டமாக எண்ணுகிறது.

இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் படைபலக் குறைப்பு சம்பந்தமான ஐ. நா. பொதுச்சபையின் இரண்டாவது விசேஷக் கூட்டத் தொடரைப் பொறுத்தவரை, அணு ஆயுதப் போட்டியைக் குறைப்பதில் திட்டவட்டமான ஒப்பந்தங்களை எட்டுவதற்கு வகை செய்யும் அனைத்து முயற்சிகளையும் சோவியத் யூனியன் மேற்கொள்ளும். ஐரோப்பாவில் நடுத்தர வீச்சுடைய அணு ஆயுதங்கள் பற்றிய சோவியத் — அமெரிக்க ஜெனிவா பேச்சுவார்த்தைகளில் ஆக்கபூர்வமான விளைவுகளை எட்டுவதே தனது முக்கியப் பணி என்று சோவியத் யூனியன் கருதுகிறது. இப்பணியின் உலகளாவிய முக்கியத்துவம் மிகத் தெளிவானது. ஏனெனில் ஐரோப்பாவில் அணு ஆயுதப் போர் நடைபெற்றால் அது உலகு தழுவிய மோதலாக மாறக் கூடும். இதற்கிடையில், ஜெனிவா பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் அமெரிக்கத் தூதுக் குழுவின் போக்கு கவலையளிப்பதாக உள்ளது. ஏனெனில், சமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவம் மற்றும் சம பாதுகாப்பு என்ற மூலாதாரக் கொள்கையும் அடிப்படையில் விவேகமுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயாராக இருக்கும் நல்லெண்ணம். அத்தூதுக் குழுவினரிடம் காணப்படவில்லை.

அமெரிக்கர்களால் தொடர்ந்து ஒத்திப் போடப்பட்டு வரும் அல்லது ஒருதலைப் பட்சமாக அவர்களினால் குந்தகம் விளைவிக்கப் பட்டு வரும் படைபலக் குறைப்பு சம்பந்தமான அனைத்து சோவியத் -- அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளையும் மீண்டும் தொடங்குவதைத் துரிதப்படுத்துவது அவசியம் என்று சோவியத் யூனியன் கருதுகிறது.

இங்கு நான் பேச்சுவார்த்தைகள் என்று கூறும்போது அதில் கேந்திர அணு ஆயுதங்களைக் குறைத்தல், ரசாயன ஆயுதங்களைத் தடை செய்தல், இந்து மாகடலில் ராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல் போன்றவையும் அடங்கும். இக்கடிதத்தை எழுதியவர்களின் உறுதியான ஆர்வத்தைக் கருத்தில் கொண்டு வியனித் பிரஷ்னேவ் எழுதியதாவது: 'இதே போன்ற நடவடிக்கைகளை பசிபிக் பிராந்தியத்திற்கும் விஸ்தரிப்பதில் எந்தவிதமான தடங்கலும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.

எல்லாவிதமான அணு ஆயுதச் சோதனைகளுக்கும் மூடிவு கட்டுவது குறித்த பிரச்சினைக்குப் பதிலளித்த வியனித் பிரஷ்னேவ், அமெரிக்கத் தரப்பு ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், நிலத்தடி அணு ஆயுத சோதனைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து 1974ம் வருட ஒப்பந்தத்தை எந்த நிமிடமும் ஏற்றுக் கொள்ள சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது என்றார். மாறாக, எல்லாவிதமான அணு ஆயுத சோதனைகளை முழுவதுமாக நிறுத்திவிடச் சோவியத் யூனியன் தயாராக இருப்பதுடன், இந்த ஆயுதங்களை மேலும் உற்பத்தி செய்வதை நிறுத்தவும், அவற்றின் குவியல்களைக் குறைத்து பின்னர் முழுவதுமாக அழித்து விடவும் தயாராக இருக்கிறது. சோவியத் யூனியன் பலமுறை கூறியுள்ளது போல, உலகு தழுவிய அணு ஆயுதப் பேரழிவு அபாயத்தை அகற்றும் ஆர்வம், மேலை நாடுகளிடம் போதிய அளவு இருப்பதாகத் தோன்றவில்லை.

---

புதுவையில் பாரதியாரின் சீடர்களில் ஒருவரான கனகலிங்கம் என்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். இவருடன் சரிசமமாகப் பழகுவது அக்கிரஹாரத்தாருக்குப் பிடிக்கவில்லை. இதைக் கிண்டல் செய்யும் தோரணையில் அன்று பாரதி தான் பூணூல் அணிந்து கனகலிங்கத்திற்கும் பூணூல்அணிவித்து ஹோமம் வளர்த்து அவரை பிராமணனுக்கி க்ாயத்திரி மந்திரமும் ஜெபித்தார். இன்றுமுதல் நீ பிராமணனுக இரு என்று சொல்லி அவரை வீட்டில் சேர்த்துவிட்டுவர ஓர் ஆளையும் அனுப்பினர். யாராவது கேட்டால் பாரதி என்னைப் பிராமணனுக்கினுர் என்று துணிந்து சொல் என்று தனது பூணூலை அறுத்தெறிந்தார்.

நீங்கள் ஏன் பூணூலை அறுத்தெறிகிறீர்கள் என்று கேட்டதற்கு 'நான் ஊரறிந்த பார்ப்பான், எனக்குப் பூணூல் எதற்கு? கனகலிங்கம் ஊர் அறியாத புதுப் பார்ப்பான், எனவே பூணூல் அவசியம் அணியவேண்டும்' என்றாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவெறியர்களுடன் மாவோ சிஷ்யர்கள்

**வி. ஹைதர்**

அங்கோலாவின் தெற்குப் பகுதிகள் மீது தென் ஆப்பிரிக்க இனவெறி ஆட்சியின் படையெடுப்பைக் கண்டித்து, 1 81 ஆகஸ்டில் அதிகார பூர்வமாகப் பீகிங் அறிக்கை விடுத்தது; 'நம்பிய மக்களின் சுதந்திரப் போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்' என்று செப்டம்பர் தொடக்கத்தில் ஐ. நா: பொதுச் சபையின் சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சீனப் பிரதிநிதி கூறினார்.

இத்தகைய அறிக்கைகள் மூலம், தாங்கள் ஆப்பிரிக்க நாடுகளின் 'தலைசிறந்த நண்பர்கள் என்று உலக மக்களுக்குத் தெளிவு படுத்தச் சீனத் தலைவர்கள் முயலுகிறார்கள். ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், இனவெறி ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்திற்குத் தாங்கள் உதவத் தயார் எனக் காட்டிக் கொள்ளவும் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் அவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே எவ்வளவு வித்தியாசம். ஆகஸ்டு மாதத்தில் அங்கோலா மீது தென் ஆப்பிரிக்க இனவெறியர்கள் நடத்திய காட்டுமிராண்டித் தனமான ஆக்கிரமிப்பு 1975ல் அந்த நாட்டின் மீது நடத்தப் பட்ட ஆக்கிரமிப்புப் பற்றிய நினைவுகளை எழுப்புகிறது. அப் பொழுது பீகிங் ஆட்சியாளர்கள் பிரிட்டோரியாவை (தென் ஆப் பிரிக்க இனவெறி ஆட்சியை) தயக்கமின்றி ஆதரித்தனர். எதிர்ப் புரட்சிக் கும்பல்களை உருவாக்குவதிலும், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும், தென் ஆப்பிரிக்க இனவெறியர்களும், மாவோயிஸ்டுகளும் கைகோர்த்து நின்றனர்: எதிர்ப்புரட்சியாளர்களுக்கு ஆயுதங்களையும், பணத்தையும் அவர்கள் வாரி வழங்கினர். அப் பொழுதும் அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் இனவெறி ஆட்சிகளின் பிடியிலிருந்த பிரதேசங்களில், தேச விடுதலை இயக்க ஸ்தாபனங்களும், குழிபறிப்பு வேலைகளைப் பீகிங் மேற்கொண்டது. அந்த ஸ்தாபனங்களில் இருந்த பிரிவினை வாதக் குழுக்களை அது ஆதரித்தது,

தென் ஆபிரிக்க இனவெறி ஆட்சிக்கு எதிரான பொருளாதாரப் பகிஷ்கரிப்பில் எல்லா நாடுகளையும் ஈடுபடுத்துவதற்கு உலகெங்கிலுமுள்ள முற்போக்குச் சக்திகள் முயன்று வரும் இவ் வேளையில், சீனாவுக்கும் தென் ஆபிரிக்காவுக்கும் இடையே பொருளாதார ஒத்துழைப்பு மேன்மேலும் வளர்ந்து வலுப்பெற்று வருகிறது. இதை நிரூபிப்பதற்கு அண்மையில் எத்தனையோ ஆணித் தரமான சான்றுகள் கிட்டியுள்ளன. இவற்றின்படி, ஹாங்காங் வணிக நிறுவனங்கள் மற்றும் பிற ஏஜெண்டுகள் மூலம் நடைபெறும் சீன — தென் ஆப்பிரிக்க வணிகமானது கடந்த இரண்டு ஆண்டுகளில் பத்து மடங்கு அதிகரித்துள்ளது; 50 கோடி டாலர்கள் என்ற நிலையை அடைந்துள்ளது, தென் ஆப்பிரிக்க இனவெறியர்களிடமிருந்து தேனிரும்பு, உருக்கு, நிலக்கரி மற்றும் விலை மதிப்பிடற்கரிய உலோகங்கள் ஆகியவற்றைப் பீகிங் வாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகிறது; அவற்றுக்குப் பதிலாக, டங்ஸ்டன் தாதுப் பொருள், பாதரசம் மற்றும் பிற முக்கியமான பண்டங்களை இனவெறி அரசுக்கு வழங்குகிறது. ஆப்பிரிக்கக் கண்டத்துக்கு மறைமுகமாக ஏற்றுமதி செய்யப்படும் சீனப் பண்டங்களுக்கு இரண்டாவது மிகப் பெரும் சந்தையாகத் தென் ஆப்பிரிக்கா விளங்குகிறது என்று தென் ஆப்பிரிக்க அயல்துறை வணிக நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது.

தென் ஆப்பிரிக்க இனவெறி ஆட்சியாளர்கள் அணுகுண்டு உற்பத்தியில் இப்பொழுது இறங்கியுள்ளனர்; இதற்குத் தேவையான மூலப் பொருள்களை — செறிவு படுத்தப்பட்ட யுரேனியத்தை சீனவிடமிருந்து அவர்கள் பெற்று வருகின்றனர். இந்த உண்மையை 'வாஷிங்டன் பொண்டு' அம்பலப்படுத்தியுள்ளது.

'உன் நண்பர்கள் யார் என்று கூறு: நீ யார் என்று நான் கூறுகிறேன்' என்பது ஒரு பழமொழி. (ஆப்பிரிக்கக் கண்டத்தில் பீகிங்கின் நண்பர்கள் யார் என்பதைப் பீகிங்கின் வணிகம் காட்டுகிறது) ஆப்பிரிக்க மக்களது தேசவிடுதலை இயக்கத்தின் பரம விரோதிகளோடு சீனவின் மாவோயிஸ்டுத் தலைமை அணிவகுத்து நிற்கிறது. இது நல்ல அத்தாட்சி. ●

## தூரகிழக்கில்
## அமெரிக்க ராணுவத் துறையின் திட்டங்கள்

எஸ்; எ;

இவ்வாண்டின் தொடக்கம் முதல் அமெரிக்காவின் ராணுவ வெறிப்போக்கு தூரகிழக்கில் அதிகரித்துள்ளது.

தென் கொரியாவின் ராணுவ வெறியை ஊக்குவிப்பது தூர கிழக்கில் அமெரிக்கக் கொள்கையின் பிரதான திசைவழிகளில் ஒன்றாகும். இந்தப் பிராந்தியத்தில் கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் (வட கொரியா) அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது என்றும், தனது 'ராணுவ மேலாண்மை'யை நிரூபிக்க வட கொரியா முயலுகிறது என்றும், பல குற்றச்சாட்டுகளை அமெரிக்கா சுமத்தி வருகிறது. இதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. ஒருபுறத்தில், வடக்கிலிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று கட்டுக்கதைகளைப் பரப்பிக் கொண்டு, இந்தப் பிராந்தியத்தில் தனது ராணுவ நடமாட்டத்தை வாஷிங்டன் அதிகரித்து வருகிறது; மறுபுறத்தில், இத்தகைய குற்றச்சாட்டுகள் மூலம் தென் கொரியாவின் ராணுவ பலத்தை அதிகரித்தல், அங்கே ராணுவக் கட்டுமானங்களைத் தீவிரப்படுத்துதல், இவற்றுக்கான முன் தேவைகளை வாஷிங்டன் உருவாக்குகிறது; சுருங்கச் சொன்னால், தென் கொரியாவில் தனது ஆதிக்கத்தை மேன்மேலும் நீடிக்க அது முயலுகிறது.

இவ்வாண்டில் தென் கொரியாவிலுள்ள அமெரிக்க ராணுவப் படைகள் நவீனப் படுத்தப்படும்; அவற்றின் போர்த் திறன் அதிகரிக்கப்படும். இதற்காக அங்கே 'எம் - 60' டாங்குகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

, ஏ- '0' போர் விமானங்களும், நவீன பீரங்கிகளும் அனுப்பப் படும்; அங்கே 'எஃப் - 16' போர் விமானங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இவற்றின் விளைவாக தென் கொரியாவிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் எண்ணிக்கையில் மேலும் 1,060 பேர் அதிகரிப்பர்.

தென் கொரியாவில் தனது துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன், அமெரிக்கா நின்றுவிடவில்லை. ராணுவத்தை நவீனப் படுத்துதல் என்ற பெயரில், தென் கொரியாவில் ஏற் கெனவேயுள்ள அணு ஆயுதங்களைத் தவிர, நடுத்தர வீச்சுடைய அணு ஆயுதங்களையும் நியூட்ரான் குண்டுகளையும் வைக்க, அமெ ரிக்க ராணுவத்துறை திட்டமிட்டுள்ளது.

தூரகிழக்கில் அமெரிக்கக் கொள்கையைப் பற்றிப் பேசுகை யில், பெண்டகனின் (அமெரிக்க ராணுவத் துறையின் திட்டங் களில் ஜப்பானை ஈடுபடுத்துதல், இந்தப் பிராந்தியத்தில் தனது ராணுவ முன்னணித் தளமாக தென் கொரியாவை மாற்றுதல் இவற்றுக்கான வாஷிங்டனின் முயற்சிகள் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஜப்பானுக்கும் தென் கொரியாவுக்கும் இடை யேயுள்ள தொடர்புகளில் அமெரிக்காவின் கரத்தைக் காண முடி யும்; அண்மை நிகழ்ச்சிகளே இதற்குச் சான்றாகும். தென் கொரி யாவிலுள்ள பொம்மை ஆட்சிக்கு நிதி உதவும் லேவாதேவிக் காரனாக முன்பு ஜப்பான் இருந்தது. இப்பொழுது நிதி உதவியு டன் ராணுவ சப்ளைகளிலும் அது ஈடுபட்டுள்ளது. தென் கொரிய ராணுவ அதிகாரிகளுக்கு ஜப்பானிய தளங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைகள் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டவை என்பதைச் சான்றுகள் காட்டுகின்றன. மோதல்களுக்கு இடம ளிக்கும் இத்தகைய கொள்கை, சர்வதேச உறவுகளை நாசப்படுத் தும் அம்சமாகும்; இந்தப் பிராந்திய நிலவரத்தைச் சீர்குலைப்ப தாகும். இதற்கு மாற்று வழி என்னவெனில், இந்தப் பிராந்திய நாடுகளிடையே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும்; சமத்துவம், சீரிய அண்டைநேயம் என்ற அடிப்படை யில். அவற்றிடையே பரஸ்பர இணக்கம் ஏற்பட வேண்டும். ❖

பாரதியார் ஒரு சமயம் காய்கறி வாங்குவதற்குப் போனார்: கீரை வியாபாரியிடம் சென்று அங்கிருந்த கீரை முழுவதையும் வாங்கி தலையிலே சுமந்து கொண்டு வீடுவந்து சேர்ந்தார்.

"எதற்கு இவ்வளவு. நமக்குக் கொஞ்சக் கீரை போதாதா?" என்று கேட்டார் அவரது மனைவியார்.

"உனக்கு வேண்டியதைச் சமை; கீரைகூட இல்லாத வீடடிற் கெல்லாம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருகிறேன்' என்று ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்துச் சென்று விநியோகஞ் செய்தார் பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டோஸ்ரோயேவ்ஸ்க்கி

காவல்நகரோன்

தற்கால மனிதனின் உணர்வுகளை ஆராய்ந்து அவனது துன்பகரமான தனிமையையும் இருமைப் பாட்டையும் நுணுக்குக் காட்டியின் கீழ்க் கொணர்ந்து நம் கண் முன் காட்டுகிறார். தனிமனிதன் ஆளுமை, விடுதலை என்பவற்றை அங்கீகரிக்கிறார். 'விடுதலை', 'தனி மனிதத்தவத்தின் மிக உந்நத வளர்ச்சி' என்பனவற்றைச் சமயத்தோடு தொடர்புபடுத்துகிறார்: தமது நாவல்களை 'டயனிஷயஸின் வாகனங்' கள்ளாகப் படைத்தார். பச்சை வாலிப வயதில் தம்மை இனங் காணுவதில் பிரச்சனைகளை எதிர் நோக்குவதாலும், குடும்பக் கட்டமைப்புத் தளர்ந்து குலைவதை அவதானிப்பதாலும் தம் தந்தையாரைக் கண்ணால் பார்க்கவும் மனமற்றிருப்பதாலும், பாரம்பரிய முறைகள் அற்றுப் போவதை அநுபவத்தில் உணர்வதாலும் அவர் தம் கால நிலையைத் தம் உள் உணர்வுகளுடன் கலந்து தீட்டிய ஓவியங்களை இன்றை வாசகர்களாகிய நம் நெஞ்சத்துக்கும் மிக அருகில் இருப்பதாக உணர்கிறோம். யார் இந்த இலக்கிய ரசாயன நிபுணர் — தொட்டதையெல்லாம் புடமிட்ட பொன்னாக்கிய ரசவாதி? அவரே டோஸ்ரோயேவ்ஸ்க்கி;

சென்ற ஆண்டு அவரது இறப்பு நூற்றாண்டு கொண்டாடப்பட்டது: 1912ல் அவரது பிறந்த நூற்றாண்டு விழாக் காலத்திலிருந்து அவரது இலக்கியப் பணியை அளவிடும் விமர்சன முயற்சிகள் வேகமாக வளர்ந்தன. அவரது படைப்புகளை விஞ்ஞான, வரலாற்று, விசர்சன அடிப்படையில் ருஷ்யாவிலும், வெளிநாடுகளிலும் ஆராய்ந்தனர். சமகால அறிஞரால் நோயாலும் பிடிவாதமான நம்பிக்கையாலும் விசர்ப்போக்கிற் செல்லும் ஒருவனது பைத்தியப் பிதற்றல் எனத் தள்ளிவிடப் பட்டவற்றை இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் முதற் புரட்சிக்கு முன் வாழ்ந்த அறிஞர் மீண்டும் 'கண்டு பிடித்தனர்' ஒரு புதிய துன்பியல் உலக உணர்வால் பீடிக்கப்பட்ட புதுத் தலைமுறையினர் அவரைத் தமது குருவாக வரித்தனர். அவரது தீர்க்க தரிசன ஏக்கம் அவர்களையும் பற்றிக் கொண்டது. பேட்யயேவ். இவனோவ் போன்ற அறிஞரின் எழுத்துக்களை அவரது தத்துவ வாதவியல் முதன் முதலாக வெளிவந்து பிரகாசித்தது. அவர் தொடக்கி வைத்த ஆன்மீகப் புரட்சியை ஆய்ந்து மதிப்புத் தந்தனர்; அவரது படைப்புக்களின் மூன்றாம் பரிமாணம் ஒன்று கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கப்பட்டது. அதுவே பௌதிக அதீத ஆழம். பீற்றஸ் பேக் குறியீட்டுவாதிகள் அவரை ஒரு திறமை மிக்க உளவியலறிஞராக மட்டுமன்றி, ஒரு பெரிய சமய சிந்தனையாளராகவும், நவீன பௌராணிகராகவும் இனம் கண்டனர். அவர்களுள் தலைசிறந்த இவாநோவ் 20ம் நூற்றாண்டின் 'துன்பியல் நாவல்' என்ற புதிய சொற்றொடரையே ஆக்கி, டோஸ்ரோவ்ஸ்க்கியைப் பற்றி அரிய ஆய்வுக்கட்டுரைகளை எழுதினார்.

குறியீட்டுவாதிகள் அவரை ஒரு தத்துவ அறிஞராகக் கண்டனர். இந்நூற்றாண்டின் நடுப் பகுதியில் வாழ்ந்த விமர்சகர்கள் அவரை ஒரு கலைஞராகக் கண்டனர். அவரது மாபெரும் காப்பிய நாவலான 'கரமஸோவ் சகோதரர்கள்' அழகியல் உருவமற்றது; கவனக் குறைவான நடையில் அமைந்தது என்ற பழைய கற்பனைக் குற்றச்சாட்டுகள் உதறித் தள்ளப்பட்டன. அவருடைய யாப்பியல், ஆக்க முறை திறன் மிக்க நுட்பங்கள், நடைபற்றி ஆராயும் போது நாம் உலகில் சிறந்த நாவலாசிரியர் ஒருவரது அழகியல் உலகில் உலாவுகிறோம்.

அவரது வாழ்வும் படைப்பும் பிரிக்க முடியாதவை. அவர் இலக்கியத்தில் வாழ்ந்தார். அதுவே அவரது வாழ்வின் ஒரே குறிக்கோளும் அவரது துன்பியல் முடிவும் ஆயிற்று.

இயல்பில் புரட்சிப் போக்கு அற்றவர் எனினும் அவர் ஒரு புரட்சிகர இளைஞர் குழுவில் அங்கத்துவம் வகித்தார் எனக் குற்றம் சாட்டிக் கைது செய்யப்பட்டார். அவர்கள் இலக்கியம் வாசிக்கக் கூடியவர்கள். அரசாங்க தணிக்கைக்கு மாறான சம்பாஷணைகளில் ஈடுபட்டார்கள், அச்சுயந்திரம் நிவறுத் திட்டமிட்டதை அறிந்திருந்தார்கள் என்று அவ்விளைஞர் குழு மீது குற்றம் சுமத்தப்பட்டது. அநீதிக்கும் கொடுமைக்கும் பேர் போன ஜார் மன்னன் அவர்களுக்கு மரணதண்டனை விதித்தான். எட்டுமாதம் சிறையில் கழித்தார் டோஸ்ரோவ்ஸ்க்கி. இருபத்தேழு கைதிகளுடன் அவரையும் மரங்களில் கட்டி மரண தண்டனையை நிறைவேற்றப் படைவீரர் துப்பாக்கிகளை உயர்த்தினர். சில கணங்கள் சென்றன. அரச உத்தரவுப்படி மரண தண்டனையை ரத்துச் செய்வதாக அறிவித்தனர். டோஸ்ரோயேவ்ஸ்க்கி கடூழியச் சிறைக் கைதியாகச் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். அவருக்குப் பக்கத்தில் நின்ற ஒருவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.

இக்கொடிய அனுபவம் நம் கலைஞரின் நெஞ்சத்தில் அழியாத குறியைச் சூட்டிவிட்டது. இதனைத் தமது நாவல்களில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். உதாரணமாக, 'மந்த மதியினன்' என்ற கதையில் வரும் இளவரசன் மிஷ்கின் என்னும் பாத்திரம் தான் பாரிஸ் நகரில் கண்டதாக இவ்வனுபவத்தை வருணிப்பதைப் பார்ப்போம்:

மரணதண்டனை பெற்றவனைக் 'கிலட்டீன்' என்னும் தலை சொய்தறிக்குக் கொண்டு போனார்கள். மிக்க பலசாலியான ஒரு வளர்ந்த மனிதன் குழந்தை போல அழுததை அப்போது கண்டேன். அவனுடைய அந்தராத்மாவுக்குள் அந்தக் கணத்தில் என்ன நிகழ்ந்திருக்கும்! 'கொலை செய்யாதிருப்பாயாக' என்பது சுருதி. கொன்றவனைக் கொல்வது என்ன நீதி? அக்காட்சி என் கண் முன் இன்று போல நிற்கிறது; கள்வரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்படப் போகிறன் கூடக் கடைசி நிமிடத்திலேனும் ஏதும் நடக்காதா, நான் தப்பமாட்டேனு, என்றுதான் நம்பிக்கையுடன் காத்திருப்பான். ஆனுல் கொலைத் தண்டனை பெற்ற கைதியோ வரப்போகும் சாவு நிச்சயமானது என்ற காரணத்தால், இன்னும் ஒரு மணி நேரத்தில், பத்து நிமிஷத்தில், அரை நிமிஷத்தில், அடுத்த கணத்தில் உடலிலிருந்து உயிர் பிரிந்துவிடும் என்ற சிந்தனையால் ஆன்மாவை அழுத்தும் கொடுந் துயரத்தை அனுபவித்து, அணு அணுவாகச் சாவான். இது உடல் துன்பத்தைக் காட்டிலும் மகா பயங்கரமானது.

தமது வாழ்க்கைத் துயரங்களை வடித்தெடுத்துக் கலைவடிவம் அளிப்பதில் அவரது திறமை ஒப்பற்றது. நாலாண்டுகள் சைபீரிய பனி வனந்தரங்களில் மரக்குற்றி வீடுகளில் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட கைகால்களால் கடின வேலைகளைச் செய்தார். குற்றவாளிகளுடன் நெருங்கிப் பழகினுர். அந்த அனுபவங்களை 'இறந்தோர் இல்லத்தின் நினைவுக் குறிப்புகள்' என்ற நூலில் வர்ணித்துள்ளார். அதில் குற்றம் புரிந்தோர் நிச்சயமாக மனம் வருந்துவர்: கழிவிரக்கமுற்றுத் திருந்துவர் என்ற கருத்தை ஏற்க முடியாதவர் அவர்கள் சற்றும் மனம் மாருதிருந்தனர் என்கிருர்.

இதன் பின் தண்டனையில் சிறு மாறுதல் பெற்றுச் கட்டுப்பாட்டுப் பயிற்சிக்காக ஒரு சாதாரண போர்வீரனுக மங்கோலிய எல்லைப் பிரதேசத்தில் ஒரு மாகாணச் சிறு நகரில் கடமை புரிந்தார். இராணுவப் பொறியியல் நிபுணருக்கு இந்தக் கதி ஏற்பட்டது.

அவர் கைது செய்யப்படு முன்னரே ஏதோ ஒரு நரம்புத் தளர்ச்சி நோய்க்கு ஆளானுர். அது இப்போது காக்காய் வலிப்பு நோயாகியது. துயரச் சுமை கூடும் போது வலிப்பும் கடுரமாகியது. ஆண்டுக்கு மூன்று நான்கு முறை வந்தது. 1859 ல் ருஷ்யாவுக்குத் திரும்பிய அவர் தம் இலக்கியப் பணியைத் தொடர்ந்தார். ஆரம்பித்த 'ஸ்ரெம்பா' என்ற சஞ்சிகையைத் துணிக்கைச் சபை தடுத்துவிட்டது. 1864 ல் அவர் முதல் மனைவியையும் சகோதரனையும் இழந்தார். தம் வறுமைக்கு மத்தியில் சகோதரனது கடனைத் தீர்க்கவும் அவரது குடும்பத்தை ஆதரிக்கவும் துணிந்தார். 'யுகம்' என்ற சஞ்சிகையை ஆரம்பித்தார். அதுவும் சில மாதங்களில் தடை செய்யப்பட்டது. ஓயாது எழுதி எழுதிப் பணம் தேடும் அவல நிலையில் அவதியுற்ருர். அக்காலத்தில் எழுதியதைத் திருப்பிப் பார்க்கவும் நேரமின்றியிருந்தார்.

ஜேர்மனிக்குச் சென்று கடன்காரரிடமிருந்து தப்ப முயன்ருர். நான்கு வருடம் கடினமாக உழைத்து ஒருவாறு கடன் சுமையைத் தீர்த்தார். 1860 களில் சூது விளையாடும் பைத்தியத்தால் நலிவுற்ருர். இவ்வனுபவத்தை 'சூதாடி' என்ற குறுநாவலில் வருணித்துள்ளார்.

தோமஸ் மான் அவரது எழுத்துக்களில் வருணிக்கும் தீய செயல்களையும் நற்கருமங்களையும் வைத்துக் கொண்டு அவர் ஒரு கலப்புப் பாத்திரம்— 'புனிதரும் பாபியும்' ஒன்று திரண்டு உருவாக்கியவர் என்று முடிவு கட்டுகிருர். இது பொருத்தமற்றது. இருபது நாவல்கள் வரையில் எழுதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை என். வி. பி. எச். நிறுவனத்தினர் சமீபத்தில் வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுதி. கூடிய சீக்கிரம் இலங்கையிலும் கிடைக்கும்.

கடும் உழைப்பாளி டோஸ்ரோயேவ்ஸ்க்கி: பிரஞ்சு உணர்ச்சி மிக்க நாவல் வகையினைப் பின்பற்றி அவரும் வியப்பூட்டும் சம்பவங்களைத் தேடினார்; பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகளும் குற்றங்களும், பயங்கரமான சம்பவங்களும் அவருடைய கதைகளுக்கு விடயமாயின. அவற்றைக் கொண்டே தனது பாத்திரங்களை உணர்ச்சியின் உச்சக் கட்டத்துக்கு ஏற்றலாம் என அவர் உணர்ந்தார். அதன் மூலம் கருத்துக்களின் மோதல் உளப்போக்குகளின் முரண்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தி உள்ளதை உள்ளபடியே காட்டுவது இலக்கியம் என்ற அக்கால கோட்பாட்டுக்கு அமைய எழுதினார். ஆகவே கதையில் வரும் சம்பவங்கள் அனைத்தும் சொந்த வாழ்வின் பிரதிமைகள் என முடிவு கட்டக் கூடாது;


ருஷ்ய மெய்யியலறிஞர் பேவேடயேவ் அவரது சமய தத்துவமும் மனிதனைப் பற்றிய கருத்தும் பற்றிய ஆராய்ச்சி நூலில், 'டோஸ்ரோயேவ்ஸ்க்கியின் மதிப்பு அதியுன்னதமானது; அவரைத் தோற்றுவித்த ஒன்றே போதும் ருஷ்யா உலகில் நிலைத்திருந்தமைக்குப் பயன்' என்று பெருமிதத்தோடு கூறுகிறார்.

மற்றொரு ருஷ்ய விமர்சகர் கூறுகிறார்: 'அவர் எங்களில் ஒருவர், எமது குருதியும் எமது எலும்பும் உள்ளவர். துன்ப அனுபவத்தால் நாம் காண முடியாதவற்றை ஆழமாகப் பார்த்தவர். அவரது காட்சி எமக்கு ஞானம் எனத் தோன்றுகிறது' அது எமக்கு வாழ்வது எப்படி என உணர்த்தும். இயற்கையிலிருந்து அவர் அனைத்தையும் பெற்றார். அப்பேறு அவரைப் பெரியார் ஆக்கியது'

அவரை ஓர் இருப்புவாதியாகக் காண்கின்றனர் நவீன விமர்சகர் சிலர். டோஸ்ரோயேல்ஸ்க்கியிலிருந்து கெமுவரை (அல்லது சார்த்தர் வரை) படிப்பவனைத் தாக்கி, விழிப்பூட்டித் தன்னுள் ஆழ்த்தி எடுத்து உலுக்கிவிடும் இலக்கியங்கள் எழுதப் பட்டுள்ளன். அவை வாழ்வின் கதி, மனித இயல்பு, மனிதன் இவற்றை எதிர்த்தும் ஈடுகட்டியும். அடிமைப் பட்டும் வென்றும் தோற்றும் செல்லும் போக்கு என்பவற்றை நிதர்சனமாகக் காட்டுகின்றன என்கிறார் ஒரு தமிழ் நாட்டு விமர்சகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாந்தனின் 'முளைகள்' ஒரு அறிமுகம்

புதுவை இரத்தினதுரை

சாந்தன் பேசுவதற்கும், பழகுவதற்கும் எவ்வளவு இனிமையானவரும், உயர்வானவருமோ அதை விடப் பலமடங்கு இனிமையானதும், உயர்வானதும் அவரது இலக்கிய சிருஷ்டிகள் என்பதை சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்சினர் வெளியிட்டுள்ள 'முளைகள்' என்ற சாந்தனது சிறுகதைத் தொகுதியை வாசித்த போது அநுபவ பூர்வமாக உணர முடிந்தது. வாசித்து முடித்த போதே அந்தச் சிறுகதைகள் தந்த உணர்வுகளை யாருடனாவது பேசிப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பும் என்னைப் பிடித்தாட்டி விட்டது. அதனாலேதான் விமர்சகனாகவோ ஆய்வாளனாகவோ அல்லாமல் சிறந்த படைப்புக்களை வாசிப்பவன் என்ற கோட்டுக்குள் நின்று கொண்டு இதை எழுத முடிகின்றது. இந்தத் தொகுதியின் எட்டுக் கதைகளை மல்லிகையும், மூன்று கதைகளை கணையாழியும், ஒரு கதையைச் சமரும் ஏற்கனவே வெளியிட்டிருந்தன. இக் கதைகள் மேற்குறிப்பிட்ட தரமான இலக்கிய சிற்றேடுகளில் பிரசுரமான போதே பலராலும் பாராட்டப்பட்டதை நானறிவேன். இப்போது எல்லாக் கதைகளையும் ஒருசேர வாசித்த போது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். 'ஒட்டுமா' என்ற குறுநாவலிற் கூட சாந்தன் செய்யாத பல சாதனைகளை இந்தக் கதைகளில் செய்து முடித்துள்ளார். சாந்தனின் கதை சொல்லும் கைவண்ணமும், பாலுமகேந்திராவின் கமராவின் நுணுக்கமான படப்பிடிப்பைப் போன்று சகலதையும் உற்றுணர்ந்து எமக்கு, தான் நினைப்பதை எவ்வித பிசகுமின்றி நாமும் உணரும்படி எடுத்துச் சொல்லும் பாங்கும், சின்னச் சின்ன சம்பவங்களைக் கூட மிக மிக ஆழமாக அநுபவித்து, உள்வாங்கி அதை மிக லாவகமாகக் கதைகளில் போடும் விதமும், எல்லாவற்றையும் விட நல்லதொரு கவிதையை வாசிப்பது போன்ற உணர்வும் இத்தொகுப்புக் கதைகளை வாசித்த போது எனக்கு ஏற்பட்டது. இங்கு பத்தோடு பதினொன்றாய் கதை பண்ணும் இலக்கியப் பிரமாக்களின் கதைகளை வாசித்து சலித்துப்போன நேரத்தில் ஒரு நல்ல கலைஞனது படைப்பொன்றை அநுபவிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய கைலாசபதி, சாந்தனைப் பற்றி கூறுமிடத்தில் '1960 களில் எழுதத் தொடங்கி எழுபதுகளில் எழுத்துலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துக் கொண்டவர்களில் ஒருவர் சாந்தன். கடந்த பத்தாண்டுக் காலத்தில் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் அறியப்பட்ட எழுத்தாளராக விளங்குகின்றார்' என்று கூறுகிறார், வாழ்த்துகின்றார். பார்வை, ஒரே ஒரு ஊரிலே..., ஒட்டுமா என்ற அவரது தொகுதிகளின் வரிசைக் கிரமப்படி வாசித்தால் சாந்தனது வளர்ச்சியின் படிக்கட்டுகளாக ஒவ்வொன்றும் உயர்ந்து முளைகளில் வந்து நிற்பதை அவதானிக் முடியும். முளைகள் அவரது வளர்ச்சியின் முடிவிடமல்ல......... என்றாலும் கூட இங்கு சுவடுகள் பதித்த பெரும் பெரும் எழுத்தாளர்களை விட, பேனா மூலம் புரட்சி செய்து முடிக்கவென்று எழுந்தவர்களை விட, எழுத்து நடை கைவந்த படைப்பாளிகள்என்று ஏற்கப்பட்டவர்களை விட, அற்புதமான எழுத்தாளன் சாந்தன் என்பதை முளைகள் மூலம் நிரூபித்துள்ளார். எல்லா தவில்காரரும் கம்பு கொண்டுதான் தவிலடிக்கிறான். எல்லா வீணை வித்வான்களும் விரல் கொண்டுதான் மீட்டுகின்றார்கள். ஆனால் தெட்சணாமூர்த்தியின் தவில்கம்பு சரித்திரம் படைத்தது போன்று, காயத்ரியின் கைவிரல்கள் சகாப்தத்தை உருவாக்கியது போன்று, சகல எழுத்தாளர்களும் சிறுகதைகள் படைத்துக் கொண்டிருக்க சாந்தனின் பேனா சிறுகதையுலகில் முளைகள் மூலம் சரித்திரம் படைத்துள்து. சகாப்தம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

எடுத்த எடுப்பிலேயே முளைகள் என்ற முதற் கதையை ஆரம்பிக்கின்றார், இப்படி ........ 'அம்மன் கோவில் குளத்துக்குள்ளிருந்த ஐந்து தலை நாகம், பள்ளிக்கூட விளையாட்டிடத்தடிக் கொய்யாப் பற்றைக்குள்ளிருந்த 'முள்ளுப் பண்டி' இவையெல்லாம் இப்போது எங்கே போயினவோ தெரியவில்லை. இவைகளுடன் செல்லர் வளவுப் 'பாண கிணற்' றடி, நெல்லி மரத்தில் ஒரு முனியும் அந்த நாட்களில் இருந்தது' நாங்களெல்லாம் மீண்டும் எங்கள் இளமைக் காலத்தை இரை மீட்டிப் பார்க்கும் விதத்தில் முளைகள் எழுதி... இடையிலொரு இருபது வருஷம் என்ற கதையில் .... 'பெரிய அணில். வெண்மையான வயிற்றுப் பாகம் வகுப்பைப் பார்த்துதிரும்பியிருக்கக் குறண்டின பின்னங்கால் களிரண்டினடியிலும் அது ஆண் என்பதற்குப் பெருத்த சாட்சியம் தெரிந்தது. புசு புசு வென்று சணைத்துத் தொங்கிய வாலில் கட்டியிருந்த கடதாசித் துண்டில் பெரிதாக மையினால் எழுதியிருந்தது: 'காதலிலே தோல்வியுற்றான் காளையொருவன்' என்று. வழக்கம்போல அன்றைக்கும் பெட்டைகள்தான் லாப்பிலிருந்து முதலில் வகுப்புக்கு வந்தார்கள். பிறகு பொடியன்கள்' என்று பள்ளிப் பருவத்தை நினைவூட்டி வைக்கிறார் சாந்தன். எளிய நடை, இனிமையான ஓட்டம், அர்த்தம் நிறைந்த சொற்கள், அந்தச் சொற்கள் கூட அகழ் வாராச்சி செய்து கொண்டு வந்த சொற்களல்ல, நாம அன்றாடம் பாவிக்கும் த்மிழே.

தொகுதியின் இறுதிக் கதையான 'மனிதர்களும் மனிதர்களும்' என்ற கதையை ஆரம்பித்து நகர்த்தும் போது ஒரு சிங்களக் கிராமமொன்றை வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிக்கின்றூர். அந்த வர்ண்னேயே ஒரு கமெராவை பல கோணங்களில் திருப்பித் திருப்பி எடுத்த அழகான படம்போல அந்தக் கிராமத்தையே எமக்கு முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றூர். 'ரயிலில் போகிற போதிலும் பார்க்க பஸ்சில் போகிற போதுதான் ஊரின் அழகு தெரிகிறது. அங்கேயே இருந்துவிட முடியுமானுல் நல்லது என்று'ஒவ்வொரு தரமும் அந்த ஊரைக் கடக்கும் போது மனதில் பட்டிருக்கிறது. வயவின் நடுவே ரோட்டிலிருந்து கமுகமர வரிசைகளுக்கிடையில் ஓடுகிற பாதைகள் தொடுகிற இடங்களில் ஊரின் அமைதியில் தோய்ந்து போய் இருக்கிறவையும் தெருவளேவுகளில் பெயர் தெரியாத மலர்ச் செடிகளின் பற்றைகளுக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கிறவையும் தென்னஞ் சோலே வளவுகளில் எங்கோ ஓரிடத்தில் சிவப்பாய் கூரை கட்டிக் கொண்டிருக்கிறவையுமான வீடுகளில் குடியிருக்கிற அந்த ஊர் மக்களில் எப்போதுதான் பொறுமை வராமலிருக்கிறது?' இப்படி வர்ணனேகளுடன் தொடரும் அந்தக் கதை பின்னர் இப்படி முடிகிறது: 'கதிரமலேயானே பத்திரமாய்க் கொண்டுபோய் சேர்த்துவிடு அப்பு......' ஜெயதேவனின் தாய் கைகளே விரித்தாள். 'கதிரமலேயானும் இங்காலேதான் இருக்கிறுர். இனி நல்லூரானே, சன்னதியானே எண்டு கும்பிடுங்கோ' கோபால் மெல்லச் சொன்னுன். ரயில் கூவியது...... இனக் கலவரத்தினுல்...... மிக உணர்ச்சிப்பட்டு நான் மிகவும் அவதிப்பட்டுள்ளேன். அறிவை சமதளத்தில் வைக்காது கவிதைகள் எழுதியுள்ளேன். ஆனுல் சாந்தன் நான்பட்ட அதே உணர்ச்சிக்குளியல் செய்தும் வெறுமனே உணர்ச்சிவசப்

---

## 18 வது ஆண்டு மலர்

## தயாராகின்றது

—ஆசிரியர்

---

படாது, இந்தக் கதையை அற்புதமாகவே எழுதியுள்ளார். இதை எழுதும் போது நான் பெருமைப்படுகின்றேன். சாந்தன் மிகத் திறமையான படைப்பாளி.

தமிழகத்தில் ஈழத்துப் படைப்புக்களே நூலாக்குவதென்ற நல்ல சகுனம் விடிந்துள்ள இந்த வேளேயில், நல்ல படைப்புக்களேயே தமிழகத்தினருக்கும் அறிமுகம் செய்வதுதான் பொருத்தம். அப்படியானதொரு வேலேயை சாந்தனின் நூல்கள் மூலம் செய்த ஜீவா பாராட்டுக்குரியவர். தமிழகத்தில் நூலே பிரசுரிப்பதற்கென்றே பலர் அணுகுகின்றனர். என். சி. பி. எச் ஐ மனதிற் கொண்டு தங்கள் படைப்புக்களில் பொதுவுடமை பிரசாரத்தை புதிதாக எழுதத் தொடங்கியுள்ளவர்களும் உள்ளனர். இவர்களேயிட்டு விழிப்பாக இருத்தல் வேண்டும். ஆனுல் சாந்தன் தன்னேத் தானே பிரபலப்படுத்திக் கொள்ளாதவர். ஆனுல் பிரபலமாகிவிட்டவர். ஈழத் தமிழிலக்கியத்தின் சிறுகதைத்துறை சாந்தன் மூலமாக புதிய பெருமையைத் தேடிக் கொண்டுள்ளதை நூல்கள் வாசிப்பவர்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வார்கள், இது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூண்டில்



டொமினிக் ஜீவா

● மறுபடியும் கேட்கிறேன்: கொழும்பில் நடந்து முடிந்து விட்ட அகில உலக இந்து மாநாட்டைப் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?

பதுளை. ம. ராஜன்

நடந்தது: முடிந்தது!

● இலங்கையில் இலக்கியக் கூட்டங்கள் பகுதி பகுதியாக நடைபெறுகின்றனவே, ஆனல் நடைபெறும் இந்தக் கூட்டங்களில் ஒரு பொதுமையான தொடர்பு இருப்பதில்லை. இதைத் தவிர்ப்பதற்கு உங்களைப் போன்றவர்கள் முன் முயற்சி எடுத்தால் என்ன?

நவாலி. கே. அரசு

இலக்கியக் கூட்டங்கள் பரவலாக நடத்துவதே ஒரு பெரிய முயற்சி. அவை தாராளமாக நடக்கட்டும். காலப் போக்கில் கருத்து உடன்பாடுள்ளவர்களும மாறுபட்டவர்களும் கன்னை பிரியும்போது நீங்கள் எதிர் பார்க்கும் பொதுமை வரத்தான் செய்யும்.

● ஜெயகாந்தன் சமீபத்தில் குங்குமம் இதழில் தமிழகப் பெண் எழுத்தாளர் பற்றிச் சொன்ன கருத்துக்களைப் படித்துப் பார்த்தீர்களா? அது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

கோப்பாய். ச. பத்மநாபன்

படித்துப் பார்த்தேன். பெண் எழுத்தாளர்கள் பற்றி அவர் சொன்ன சில கருத்துக்களில் உண்மைகள் இருந்த போதிலும் அவர் சொன்ன முழுக் கருத்துக்களிலும் எனக்கு உடன்பாடில்லை. பொதுவாக காலாதிகாலமாக வீடு, அடுப்படி, கணவன், குழந்தைகள், கற்பு என்ற அடைப்புக்குள் வாழ்ந்து பழக்கப்பட்டு விட்ட— அதுவே சுவர்க்கம் என நம்ப வைக்கப்பட்டுள்ள — தமிழ்ப் பெண்களில் சிலர் இந்தச் சமூக வேலிகளைத் தாண்டி, பேனா பிடித்து எழுத முன் வந்ததே ஒரு பெரிய முன்னேற்றம். இவர்களை ஆக்க பூர்வமாக விமர்சிக்க வேண்டுமே தவிர, ஒரேயடியாக விமர்சன மோட்டடி அடிக்கக் கூடாது. இதுவேஎனதுஅபிப்பிராயமாகும்.

● நிருபர் செல்லத்துரையின் இழப்பிற்கு நீங்களும் மல்லிகையும் செய்த மனமார்த் அஞ்

சவிதான் பின்னர் பல்வேறு துறையினரையும் அவருக்கு அஞ்சலி செய்யத் துரிதப்படுத்தியது என்பதை நானும் எனது நண்பர்களும் மனமார நம்புகின்றோம். இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஆவரங்கால். **க. இராமதுரை**

அப்படி நினைப்பது தவறு. நானும் மல்லிகையும் எமது கடமைகளைச் செய்தோம். மற்றைய நண்பர்கள் தத்தமது கடமைகளைச் செய்தனர். முடிவு — ஒரு திருப்தி. உழைப்பால் உயர்ந்தவர் ஒருவர் மதிக்கப்பட்டுள்ளார். அதுவே போதும்.

● 'அனுபவ முத்திரைகள்' போன்று உங்களது அனுபவங்களைத் தொகுத்து வேறு நூல்கள் ஏதாவது எழுத உத்தேசித்துள்ளீர்களா? அவை எப்பொழுது வெளிவரும்?

பசறை. **ந. சரவணன்**

'பழைய நினைவுச் செய்திகள்' என்றொரு அனுபவப் படிப்பிணைகளை உள்ளடக்கிய நூலொன்றைத் தொகுத்துக் கொண்டிருக்கின்றேன். அநேகமாக 1983 நடுப்பகுதியில் அப் புத்தகம் வெளிவரும். மற்றும் எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவ உள்ளடக்கத்தைக் கொண்டு வாழ்க்கைச் சரித நூல் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கின்றேன். அந் நூல் எனது அறுபதாவது வயசுப் பூர்த்தி ஆண்டில் வெளியிடத் திட்டம். பாரிய வேலை. ஒருவகையில் சொல்லப் போனால் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் எனது பங்குப் பணி பற்றியும். பிரச்சினைகள். போராட்டங்கள், நண்பர்கள், கருத்து முரண்பாடுகள் பற்றியும் அந்த நூல் மக்களுடன் ஒளிவு மறைவின்றி இதய சுத்தியுடன் மனந் திறந்து பேசும்; உரையாடும்.

● இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியில் மல்லிகையை வெளியிடுகிறீர்களே, அந்தச் சிரமங்களால் ஏற்படும் பொருளாதார முடையால் வீட்டில் ஏற்படும் கஷ்டங்கள் பற்றி வீட்டார் புறுபுறுப்பதில்லையா?

கிளிநொச்சி. **க. தேவதாசன்**

பொது வாழ்க்கையில் பொறுப்புக்களை ஏற்றதின் பின்னர் எவரது புறுபுறுப்புக்களைப் பற்றியும் நான் சட்டை செய்வதில்லை. மகத்தான ஓர் எதிர்காலத்திற்காக நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்ட பின்னர் நாம் எதைக் கண்டுமே அஞ்சக் கூடாது. நான் அதைப் பற்றி வெளியில் சொல்வதைக் கூட விரும்புவதில்லை. மற்று மொரு பக்கத்தைப் புரட்டிப் பாருங்களேன். சகல வசதிகளும் கிடைக்கப் பெற்ற ஒருவனுடைய வீட்டில், வீட்டார் புறுபுறுக்காமல்தான் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா?

● சமீபத்தில் 'தகவம்' சிறுகதைத் தேர்வுப் போட்டியில் பரிசு பெற்ற முதற் பெண்மணி ரதி கந்தசாமி என்பவராவார். அவரது வெற்றி பற்றி பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

வேலணை. **ம. சிவராசா**

இந்த மண்ணில் தோன்றிய புதிய இளந் தலைமுறை எழுத்தாளர்களில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கியுள்ளனர் என்பதையே இது காட்டுகின்றது. இவரது முயற்சியையொட்டி இன்னும் பல சகோதரிகளும் இலக்கியக் களத்தில் வேரூன்றி வளர வாய்ப்புக்கு இடமுண்டு என்பதையே இது நிரூபிக்கின்றது.

● சிறு வயதில் குறும்புத் தனத்தின் வெளிப்பாடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆசிரியர்களிடம் பி... பம்பழம் வாங்கிய அனுபவம் உண்டா?

முருங்கன். ந. சிவசோதி

நிறைய. அன்று துன்பமாகவும் வேதனையாகவும் இருந்த தண்டனைகளை இன்று நினைத்துப் பார்க்கும்போது இனிப்பு இனிப்பாக இனிக்கின்றன.

● நான் எண் சோதிடத்தில் அபார நம்பிக்கையுள்ளவன். உங்களது பிறந்த எண், கூட்டெண் என்ன? அறிய ஆசை.

உடுவில். ச. தம்பிராசா

உலக உழைப்புத் துறையின் மொத்த எண் எதுவோ அதுவே எனது பிறந்த எண்ணும், மனுக்குலத்தின் சுபீட்சத்திற்காகத் தம்மையே அர்ப்பணித்தவர்களின் கூட்டுத் தொகை எதுவோ அதுவே எனது கூட்டெண்ணும். தயவு செய்து சிரமத்தைப் பாராமல் கூட்டிப் பார்த்து எனது வருங்காலத்தையும் நிகழ்காலத்தையும் கணித்து வைத்திருங்கள்.

● இங்கிருந்து நிறைய எழுத்தாளர்கள் சமீப காலமாகத் தமிழகம் போய் வருகின்றனர். அதுபோலத் தமிழகத்திலுள்ள தரமான எழுத்தாளர்கள் இங்கு வருவதில்லையே, ஏன்?

கீரிமலை. எஸ். செல்வராஜன்

தமிழக எழுத்தாளர்களில் அநேகர் டில்லி, பம்பாய் என்று தூர இடங்களுக்கெல்லாம் அடிக்கடி போகின்றனர். ஏனோ இந்தப் பக்கம் பார்க்க வருவதில்லை. அறந்தை நாராயணனும் ரகுநாதனும் சமீபத்தில் இலங்கைக்கு ... ...தைக்குத் ... இதுதான்.

● இலங்கை எழுத்தாளர் பலரின் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் புத்தகங்கள் சென்னை என். ஸி. பி. எச்., நர்மதா போன்ற நிறுவனங்களில் இருந்து வெளிவர இருக்கின்றதாமே, எப்போது அவை வெளிவரும்.

நீர்கொழும்பு. க. மோகன்தாஸ்

சற்றுப் பொறுமையாக இருங்கள். கூடிய சீக்கிரம் அவைகள் வெளிவரும். நம்பிக்கையாக இவ்வளவு ஆர்வமுள்ள உங்களது கைகளுக்கு அந் நூல்கள் கிடைக்கும்.

● உங்களுக்குத் தினசரி எத்தனை கடிதங்கள் வரும்? எந்தெந்த ஊர்களில் இருந்தெல்லாம் கடிதங்கள் வரும்? இவை அனைத்துக்கும் பதில் எழுதிப் போடுவீர்களா?

கொழும்பு 11. எஸ். மோகன்

ஏராளமான கடிதங்கள் வரும். உள் நாட்டிலிருந்து பல புது முகங்களினுடைய கடிதம் முதல், தமிழகத்திலிருந்து அறிந்த, பழக்கமான, மிக நெருங்கிய நண்பர்களின் கடிதம் வரை தினசரி வரும். வெளி நாட்டிலிருந்து தினசரி கடிதம் வராவிட்டாலும் வாரத்திற்கு பல கடிதங்கள் வரும். இதில் முக்கியமானவர்கள் நமது நாட்டைச் சேர்ந்தவர்கள். வேலை தேடி வெளிநாடு சென்றவர்கள் மல்லிகை சம்பந்தமானதொடர்பு விட்டுப் போகக் கூடாது என்பதற்காகவும் அடிக்கடி எழுதுவார்கள். இந்தனை கடிதங்களுக்கு நான் பதில் போடுவதில்லை. பதில் போடத்தக்க கடிதங்களுக்கு நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைத் திட்டு[illegible]றவர்களைப் பற்றி நீங்கள் என்ன [illegible]க்கிறீர்கள்?

[illegible]டுப்பிட்டி. கே. துரைராசா

ஒரு மன நோயாளி அவனுக்கு வைத்தியம் பார்க்கும் டாக்டரையே சில சமயங்களில் திட்டித் தீர்ப்பான் — அதற்காக அந்த டாக்டர் நோயாளியைத் திட்ட முடியுமா? அப்படித் திருப்பித் திட்டினல் டாக்டர் ஒரு டாக்டராக இருக்க முடியுமா? பாவம் அநுதாபப் படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

● எங்கள் பிரதேசங்களில் நடக்கும் பாரதி விழா, இலக்கிய விழாக்களுக்கு அழைத்தால் வருவீர்களா? போக்கு வரத்துச் செலவு தரவேண்டுமா?

மூதூர். ந. பாஸ்கரன்

பாரதிக் கடமையை, இலக்கிய நேசிப்பை நான் மல்லிகை மூலமே மாதா மாதம் செய்து கொண்டிருக்கிறேன். சில இலக்கிய அமைப்புக்கள் இருக்கின்றன, இலங்கை எழுத்தாளர்களின் புத்தகங்களை ஆக்கங்களை ஆதரிக்க மாட்டார்கள். அதே சமயம் எழுத்தாளர்களை இலவசமாகத் தருவித்துத் தங்களது விழாக்களைக் கோலாகலமாக நடத்துவார்கள், இதிலிருந்து தெரிவதென்னவென்முல் கூப்பிட்ட குரலுக்கெல்லாம் எழுத்தாளர்கள் ஓடி வருவார்கள் என்ற மலினமான நினைவுதான். சில எழுத்தாளர்கள் தம்மைத் தாமே மலினப்படுத்தி விட்டதால் முழு எழுத்தாளர்களுமே இப்படியானவர்கள்தான் என்ற நினைப்புச் சிலருக்கு.

[illegible]குந்த முறையில் தகுந்த [illegible]ண்ணியத்துடன் படைப்பாளிக்குரிய கம்பீரத்துடன் அழைக்கப் படாத எந்த விழாவிலும் கலந்து கொள்வது எதிர் காலத்திற்கு நல்லதல்ல.

● தாமரை இதழ் மாதா மாதம் படிக்க வேண்டுமென்ற பெரு விருப்பம் எனக்கு. அது கிடைப்பதற்கு வழி முறைகள் என்ன?

திருமலை. ஆ. சந்திரன்

தாமரை, கணையாழி, செம்மலர், சிகரம் போன்ற சஞ்சிகைகளை இங்கு வியாபாரிகள் தருவிப்பதில்லை. எனவே இப்படியான சஞ்சிகைகளைப் படிப்பதற்குச் சந்தா கட்டுவதுதான் ஒரேயொரு சரியான வழி. முடியுமானல் இங்குள்ள சில சஞ்சிகைகளை அங்குள்ள சில நண்பர்களுக்கு அனுப்பி அதற்கு ஈடாக நீங்கள் விரும்பும் சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ளலாம், முயற்சியுங்கள்.

● நீங்கள் கொழும்பிற்கு மாதா மாதம் வருகிறீர்கள் என மல்லிகையில் பார்த்துள்ளேன். வரும்போது எந்த முகவரியில் தங்குவீர்கள்? எந்த நேரம் சந்திக்க வசதிப்படலாம்?

கொழும்பு - 6. க. ரவீந்திரன்

?4, ஸ்ரீகதிரேசன் வீதி, (பழைய செக்கடித் தெரு) கொழும்பு - 13 ல் தங்குவதுண்டு. தங்கியிருக்கும் காலங்களில் காலை 9 மணிக்குள்ளும் மாலை 6 மணிக்கு மேலும் சந்திக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JASE Institutes

பொறியியல், விஞ்ஞானம், கலை
ஆகிய துறைகளில் … டப்படிப்புகளுக்கு;
யாழ் நகரில் பிரபல … வி நிலையம்

(கொழும்பில் நான்கு வருடங்கள் பொறியியல் உயர் கல்விக்குரிய வகுப்புகளை நடாத்தியவர்களால் ஆரம்பிக்கப்பட்டது)

ENGINEERING (C. E. I.) LONDON
Part I & II    A/L 5 பாடங்களுடன்

GRADUATESHIP IN CHEMISTRY
(A/L 3 பாடங்களுடன்)

CITY & GUILDS (London)
Part I II & III (Electronics)
Electrical Telecommunication)

DIPLOMA IN D'MANSHIP
(O/L 5 பாடங்களுடன்)

QUANTITY SURVEYING /
BUILDERS QUANTITIES

CHARTERED PRELIM

ஆகிய துறைகளில் வகுப்புகள்
நடாத்தப்படுகின்றன

அச்சிட்ட பாடக் குறிப்புகள்;
பயிற்சி வினாத்தாள்கள்
என்பனவும் வழங்கப்படும்

இலண்டன் நிறுவனத்துடனான
சகல தொடர்புகளும்
எமது நிறுவனத்தினால்
செய்து தரப்படும்

தொடர்பு முகவரி:
DIRECTOR OF STUDIES
## JASE INSTITUTES
(opp. Bank of Ceylon)
STANLEY ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

allikai
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
JUNE 198

*Dealers in*

**WALL PANELLING**
**CHIPBOARD &**
**TIMBER**



*With Best Compliments of*

# PL. SV. SEVUGAN CHETTIAR

**Phone: 24629**

**140, ARMOUR STREET**
**COLOMBO-12.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org